இரேனியஸ்

தமிழியல் முன்னோடி

பதிப்பாசிரியர்

தொ. பரமசிவன்



மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி – 12

இரேனியஸ்

தமிழியல் முன்னோடி

என் பேராசிரியர் இளவரசு ஐயா அவர்களுக்கு
அன்புடன்
தொ. பரமசிவன்
23.01.2001

பதிப்பாசிரியர்:

தொ. பரமசிவன்

தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி – 12

நூற்பெயர்	:	இரேனியஸ் : தமிழியல் முன்னோடி (கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு)
பொருள்	:	தமிழியல் ஆய்வு
பதிப்பாசிரியர்	:	தொ. பரமசிவன் தமிழியல் துறைத் தலைவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி - 12
உரிமை	:	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி - 12
பதிப்பு	:	முதற்பதிப்பு : சூன் 2000
அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	xii + 68
பிரதிகள்	:	1100
வெளியீடு	:	தமிழியல் துறை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி
அச்சகம்	:	நெல்லைத் திருமண்டில அச்சகம் பாளையங்கோட்டை
வடிவமைப்பு	:	நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்
முன் அட்டை கோட்டோவியம்	:	சில்பி
பின் அட்டை	:	தி. புருஷோத்தம்
நிதி உதவி	:	தென்னிந்தியத் திருச்சபை, திருநெல்வேலித் திருமண்டலம்
விலை	:	ரூ. 30/-

பொருளடக்கம்

பதிப்புரை iv

வாழ்த்துரை : துணைவேந்தர் vi

ஆசியுரை : அருட்பெருந்திரு பேராயர் viii

தலைமையுரை : ஆ. சிவசுப்பிரமணியன் x

1 இரேனியஸ் : வாழ்வும் எழுத்தும் 1
- ஆர்.எஸ். ஜேக்கப்

2 பூமி சாஸ்திரம் : கட்டமைப்பும், பிற்புலமும் 15
- அ. கணேசன்

3 மொழிபெயர்ப்பாளர் இரேனியஸ் 26
- சரோஜினி பாக்கியமுத்து

4 இரேனியஸ் அடிகளாரின் செந்தமிழ் இலக்கணம் : தத்துவப் பின்னணி 40
- கி. முப்பால்மணி

5 இரேனியசின் படைப்புலகம் / கருத்துலகம் 50
- செ. ஜெய செல்வின்

பதிப்புரை

தமிழ்நாட்டோடும், தமிழ் மொழியோடும் கிறித்தவம் கொண்ட தொடர்பு ஐந்து நூற்றாண்டுக் காலப் பழமையினையுடையது. இத்தொடர்பில் தமிழராகவே மாறிப்போன ஐரோப்பியக் கிறித்தவர்கள் பலருண்டு. வீரமாமுனிவர், பேராயர் கால்டுவெல், ஜி.யு. போப் என அவர்களில் சிலரே தமிழ் மக்களுக்குப் பெரிதும் அறிமுகமாகியுள்ளனர். சீர்திருத்தத் திருச்சபையினரில் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர்களில் கால்டுவெலுக்கும், போப்புக்கும் முன்னோடியாக விளங்கியவர் இரேனியஸ் அடிகளார். எழுத்து மொழியோடு மக்களின் பேச்சு மொழியினையும் அதன் உயிர்ப்போடு விளங்கிக் கொண்ட ஆற்றல் மிக்கவர்.

முதல் அறிவியல் தமிழ் நூலான 'பூமி சாஸ்திரம்' அவரது மிகச்சிறந்த படைப்பாகும். அத்துடன் அவர் எழுதிய தமிழ் இலக்கண நூலும் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள் குறித்த ஆங்கில நூலும் தமிழ் மொழி ஆய்வாளர்களுக்கு இன்றும் வேண்டிய சில புதிய செய்திகளைத் தம்முள் கொண்டிருக்கின்றன. 19-ஆம் நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் தொடக்கக் கல்விக்கு அவர் இட்ட அடித்தளம் வலிமையானது.

தமிழ் ஆய்வாளர்களால் பெரிதும் நினைக்கப்படாமல் போய்விட்ட இப் *பெருந்தமிழரை* எம் தமிழியல் துறை நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்தது. புத்தாயிரமாண்டில் பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள், இரேனியஸ் அடிகளாரின் தமிழ்ப் பணி குறித்து ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றினை நடத்தினோம். அழைக்கப்பட்ட அறிஞர்கள் ஐவரும் மிகச் சிறப்பான கட்டுரைகளை வாசித்தளித்தனர். அக்கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளே இப்போது நூலாக்கம் பெற்றுள்ளன. இரண்டிற்குமான பொருளுதவி தென்னிந்தியத் திருச்சபையின், திருநெல்வேலித் திருமண்டிலத்தாரால் அளிக்கப்பட்டது.

இம்முயற்சியில் எங்களுக்குத் துணை நின்ற துணைவேந்தர் க.ப.அறவாணன் அவர்கள் எங்கள் நன்றிக்குரியவர்.

தமிழ் உணர்வோடும், வரலாற்று உணர்வோடும், எங்கள் முயற்சிகளுக்குப் பேராதரவு தந்த நெல்லைத் திருமண்டிலத்தின் பேராயர் அருட்பெருந்திரு. எஸ். ஜெயபால் டேவிட் அவர்களுக்கும், இம்முயற்சியின் தொடக்கப் புள்ளியாக அமைந்த திருமண்டிலத் துணைத் தலைவர் அருட்திரு. ஆர். ஜோசப் அவர்களுக்கும், எழுத்தாளர் ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றி உரியது.

நூலை வடிவமைப்பு செய்த பாளையங்கோட்டை, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தாருக்கும், விரைவாக அச்சிட்ட நெல்லை திருமண்டில ஒளி அச்சகத்தாருக்கும் பாராட்டுடன் கூடிய நன்றி.

தொ. பரமசிவன்
பதிப்பாசிரியர்
தமிழியல் துறைத் தலைவர்

வாழ்த்துரை

க.ப. அறவாணன்
துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி - 12

பெற்றதாயினும் பிறந்த பொன்னாட்டினும் தமிழ் மண்ணையும் மொழியையும் நேசித்த ஐரோப்பியர் சிலர். தமிழ்ப்பிறப்பு கிட்டவில்லையென்றாலும் தமிழ்மக்களால் காலமெல்லாம் நினைக்கப்பெறும் தமிழ்ப்பெருவாழ்வு வாழ்ந்தவர்களும் அவர்களில் உண்டு. பாளையங்கோட்டையில் வாழ்ந்து மறைந்த இரேனியஸ் பெருமகனார் அவர்களில் ஒருவர்.

48 வயதுக்குள் - அதுவும் பாளையங்கோட்டையில் வாழ்ந்தது 19 ஆண்டுகள் நிறைவாக - இருபதிற்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள், பள்ளிக்கூடங்கள், தேவாலயங்கள், முதியபெண்கள் - கைம்பெண்கள் ஆகியோருக்கான சமுதாயப்பணி எனப் பல பரிமாணங்களையுடைய தொண்டு வாழ்க்கை - இவையே அவர் 'நினைக்கப்படும்' பெருமையை எட்டியதற்கான காரணங்கள் என நான் நினைக்கிறேன்.

இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு இரேனியஸ் அடிகளின் வாழ்க்கை தரும் செய்தி ஒன்று உண்டு. 782 பக்கங்களில் தமிழின் முதல் அறிவியல் நூலை எழுதும்பொழுது தமிழ்நாடு எப்படியிருந்தது? சாலை வசதி, மின்வசதி இல்லாத காலம். நம்மால் பெருமளவு விலக்கப்பட்டுவிட்ட மண்ணெண்ணெய் விளக்கின் நெடிய புகை, தொட்டெழுதும் மைப்பேனா, நூலக வசதி இன்மை. உதவிக்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களோ மிகவும் குறைவு, ஐரோப்பிய உடலை வறுத்தெடுக்கும் பாளையங்கோட்டை வெயில் - இத்தனைக்கும் நடுவில் ஓதியதையும் உணர்ந்ததையும் பிறர்க்குச் சொல்ல வேண்டும் என்ற உழைப்பும் பொது நல உணர்வும் அவரை இயக்கிக் கொண்டிருந்தன.

பின்வந்த பேராயர் கால்டுவெல், போப் ஆகியோருக்குக் கிடைத்த வாழ்க்கை வசதிகள்கூட இரேனியஸ் அடிகளாருக்கு அக்காலத்தில் (1819 - 1838) கிட்டவில்லை. நெல்லை மாவட்டத்தில் சாதிக் கொடுமை என்னும் நச்சுயிரி அன்றே இரேனியஸ் அடிகளையும் தாக்கியிருக்கின்றது. அதற்கெதிராக அவர் தான் நடத்திய செமினரியை (ஆசிரிய, இறையியல் பயிற்சிக்கூடம்) மூடிவிட்டார் என்பது வருத்தம் தரும் வரலாற்றுச் செய்தி.

48 வயதில் தன்மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் - பாளையங்கோட்டையில் - பிறந்த மண்ணுக்குப் பல ஆயிரம் மைல்கள்

தாண்டி - ஏதுமில்லா வெறுமையில் நிறுத்திவிட்டுச் சென்ற இரேனியஸ் அடிகளை அவர்தம் ஆய்வுணர்ச்சியினை, தமிழ்த் தொண்டின் மேன்மையினை 161 ஆண்டுகள் கழித்து எம் பல்கலைக்கழகத் தமிழியல்துறை நினைத்து அவருக்குப் பெருமை சேர்க்கின்றது. 'செவ்வியான் கேடும் நினைக்கப்படும்' என்பது வள்ளுவம்.

அடிகளாரை நினைவூட்டும் கருத்தரங்கத்திற்கும், இந் நூலாக்கத்திற்கும் பொருளுதவி செய்த தென்னிந்தியத் திருச்சபையின் நெல்லைத் திருமண்டிலத்தார்க்கு எங்கள் நன்றியும் பாராட்டும்.

க.ப. அறவாணன்

THE CHURCH OF SOUTH INDIA
TIRUNELVELI DIOCESE
The Rt Rev S Jeyapaul David
Bishop in Tirunelveli

Telephone : (+91) 0462 578744, 579499
Telefax : (+91) 0646 574525

Bishopstowe
16, North Highground Road
Post Box 118
Palayamkottai - 627 002

ஆசியுரை

நெல்லை அப்போஸ்தலன் இரேனியஸ் ஒரு மாபெரும் சக்தி. தம் வாழ்வின் பாதிப் பகுதியை நெல்லைச் சீமையில் அர்ப்பணித்து அரும்பணியாற்றி 48ஆம் வயதில் உயிர் நீத்த மகாத்மா.

ஜெர்மானிய பிரஷிய நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் கற்று - தமிழ் மக்களோடு இன்புறவு கொண்டு தமிழரோடு தமிழராக வாழ்ந்து இப்பகுதியில் மட்டும் 19 ஆண்டுகள் சேவை செய்து சுமார் 400 சபைகளையும், 107 கல்விக் கூடங்களையும் நிறுவினார்.

இரேனியஸ் தமிழ் மக்களை அதிகமாக நேசித்தார். மக்கள்மீது காட்டும் அன்பே இறைவன்மீது காட்டும் அன்பு என்பது அவரது ஆழ்ந்த நம்பிக்கை. அதுவே அவரது சமயப் பணி.

ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட - அமுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டிருப்பதைக் கண்டு நெஞ்சம் குமுறினார்.

கல்வி எல்லாருக்கும் சொந்தம் என்பதையும், இறைவன் முன்பு யாவரும் சமம் என்பதையும் தம் சமயத் தொண்டின்மூலம் நிலை நாட்டினார். அதற்காக இரவு பகலாக உழைத்தார். 175 ஆண்டுகளுக்கு முன்பு அவர் தமிழகம் வந்தபோது மக்கள் இருளில் தள்ளப்பட்டிருந்தார்கள்.

தமிழ் மக்களுக்கு அறிவியல் அறிவு உண்டாகும்படியாக 1832இல் அவர் எழுதிய 'பூமிசாஸ்திரம்' என்ற நூல் அபூர்வமான ஒரு படைப்பு. அறிவியல் உணர்வுகளுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த முதல் தமிழ் நூல் அதுவேயாகும்.

எனவேதான் திருநெல்வேலித் திருமண்டிலமும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும் இணைந்து 11.2.2000 அன்று "இரேனியஸ் அடிகளார் தமிழ்ப்பணி" என்ற கருத்தரங்கினை பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் நடத்தியது மிகவும் பொருத்தமாயிருந்தது.

அன்று நடந்த கருத்தரங்கின் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட முன்வந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்

தமிழியல் துறைக்கும், துணைவேந்தர் அவர்களுக்கும் திருமண்டிலத்தின் சார்பில் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முயற்சியில் ஆரம்பமுதல் முன்னின்று முனைந்து செயலாற்றிய திருமண்டிலத் துணைத் தலைவர் அருள்திரு ஆர். ஜோசப், அருள் கலைஞர் ஆர். எஸ். ஜேக்கப், தமிழியல் துறை தலைவர் டாக்டர் தொ.பரமசிவன் ஆகியோர்களுக்கும் என் உள்ளம் நிறைந்த அன்பினைக் கூறுகின்றேன்.

இறை அருள் பெருகட்டும்!

இதுபோன்ற நற்பணி தொடரட்டும்!

பாளையங்கோட்டை — அன்புடன்

21.5.2000 — எஸ். ஜெயபால் டேவிட்

பேராயர்

தலைமையுரை

ஆ. சிவசுப்பிரமணியன்

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தரால் "திக்கெல்லாம் புகழ் திருநெல்வேலி" எனப் போற்றப்பட்ட திருநெல்வேலிச் சீமை பல்வேறு சமயங்களின் தளமாகத் திகழும் பெருமையுடையது. சைவம் - வைணவம் - சமணம் - பௌத்தம் எனத் தொன்மையான சமயங்கள் இப்பகுதியில் கால் கொண்டிருந்தமையைத் தொல்பொருள் - வரலாறு - மற்றும் இலக்கியச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. தேவார மூவரால் பாடப்பெற்ற சைவத் திருப்பதிகளையும் நவ திருப்பதி என்ற பெயரில் ஒன்பது வைணவத் தலங்களையும் தன்னுள் கொண்டது. சமண பௌத்த மதங்கள் இங்கு வேர் கொண்டிருந்தமையை நினைவூட்டும்வண்ணம் சமணத் தீர்த்தங்கரர்களின் சிலைகளும் புத்தரின் சிலைகளும் இப்பகுதியில் கிடைத்திருக்கின்றன. சமணத் துறவிகள் தங்கியிருந்த குகைகளும், சமணத் துறவிகள் பயின்ற பள்ளிகளும், தொல்பொருள் சான்றுகளாய்க் கண்டறியப் பெற்றுள்ளன.

அரேபியாவிலிருந்து வணிகர்கள் வழியாக இசுலாம் இங்கு பரவியது. 'அஞ்சு வண்ணத்தார்' என்ற இசுலாமிய வணிகக்குழு இங்கு செயல்பட்டதையுணர்த்தும் இசுலாமியக் குடியிருப்புகள் இன்றும் உள்ளன. சோனகர் என்று இசுலாமியரை அழைத்ததால் 'சோனகன்விளை' என்ற பெயரில் குடியிருப்பு ஒன்று இன்றும் உள்ளது. இசுலாமியத் தமிழ் இலக்கியம் படைத்த கவிஞர்கள் பலர் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். அவுலியாக்கள் என்று அழைக்கப்படும் இசுலாமிய இறையடியார்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் உருவான பல தர்காக்களும் இங்கு உள்ளன.

பதினாறாம் நூற்றாண்டில் முத்துக் குளித்துறையில் கத்தோலிக்கம் கால் கொண்டது. சீர்திருத்தக் கிறித்துவத்தை எதிர்கொள்ளும் வகையில் உருவான சேசு சபையின் தொடக்ககால உறுப்பினரான புனித சவேரியார் நெல்லைச் சீமையின் கடற்கரைப் பகுதிகளில் கத்தோலிக்க மறையை நிலை கொள்ளச் செய்தார். இவரது வலக்கரம் போல் திகழ்ந்த அண்டிறிக் அடிகளார் என்ற சேசு சபைத் துறவி புன்னைக்காயல் என்ற கடற்கரைச் சிற்றூரில் தங்கி தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைத்ததுடன் தமிழ் நாட்டில் முதன் முறையாக அச்சகம் ஒன்றை இக்கிராமத்தில் நிறுவி 'அடியார் வரலாறு' என்னும் நூலை கி.பி. 1586இல் வெளியிட்டார். மற்றும் வீரமாமுனிவர், புனித அருளானந்தர் (ஜான்-டி-பிரிட்டோ) போன்ற புகழ் பெற்ற கத்தோலிக்கத் துறவிகள் இங்கு பணி புரிந்துள்ளனர்.

இச்சமயங்களின் வரிசையில் பதினெட்டாம் நூற்றாண்டில் சீர்திருத்தக் கிறித்துவம் நெல்லைச் சீமையில் தடம் பதித்தது. பதினேழாம்

நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் சீர்திருத்தக் கிறித்துவத்தைத் தூத்துக்குடி நகரில் பரப்பினர். ஆனால் அம்முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பாளையங்கோட்டையில் இராணுவத்தினர் குடியிருப்பைப் (கான்டோன்மெண்ட்) பதினெட்டாம் நூற்றாண்டில் உருவாக்கியது. ஆங்கிலப் படை வீரர்கள் சீர்திருத்தக் கிறித்துவர்களாக இருந்ததால் அவர்களின் சமய வாழ்க்கையை நெறிப்படுத்த இதர பகுதிகளிலிருந்து மறைப் பணியாளர்கள் அவ்வப்போது வந்து சென்றனர். ஆயினும் இப்பகுதி மக்கள் சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தைத் தழுவியமைக்கான ஆவணச் சான்றுகள் ஏதும் இல்லை. ஒன்றிரண்டு தனி மனிதர்கள் இச்சமயத்தைத் தழுவியுள்ளனர். திருநெல்வேலியைச் சேர்ந்த இலட்சுமணன் என்று இருபது வயது இளைஞர் திருச்சியில் திருமுழுக்குப் பெற்று ஞானப் பிரகாசம் என்ற கிறித்துவப் பெயரை 1770இல் பெற்றுள்ளார். 1771ஆம் ஆண்டு சுவார்ட்சு என்ற மறைப் பணியாளர் எழுதிய குறிப்பில் சவரிமுத்து என்ற இந்திய கிறித்துவர் பாளையங்கோட்டையில் வாழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கால்டுவெல் தாம் எழுதிய திருநெல்வேலி மறைத்தள வரலாற்றில் திரு முழுக்குப் பெற்ற நாற்பது இந்தியக் கிறித்துவர்களின் பெயர்ப் பட்டியலை அவர்களின் சாதியுடன் குறிப்பிட்டுள்ளார். அதில் முதல் பெயராக குளோரிந்தா என்ற மராட்டியப் பிராமணப் பெண்ணின் பெயர் இடம் பெற்றுள்ளது. இப்பெண் சீர்திருத்தக் கிறித்துவத்தைத் தழுவிய நிகழ்ச்சி 3.3.1778இல் நிகழ்ந்துள்ளது. இதன்பின் இந்த அம்மையார் கி.பி. 1780இல் தன் சொந்தச் செலவில் பாளையங்கோட்டையில் தேவாலயம் ஒன்றைக் கட்டினார். இதுதான் இப்பகுதியில் உருவான முதல் சீர்திருத்தக் கிறித்துவத் தேவாலயமாகும்.

இதன் பின்னர் நாற்பது ஆண்டுகள் கழித்து 1820 ஜூலை 7ஆம் நாள் இரேனியஸ் திருநெல்வேலிச் சீமையில் மறைப் பணியாற்ற வந்தார். அக்காலத்தில் சீர்திருத்தக் கிறித்துவத்தைத் தழுவியவர்களில் பெரும்பாலோர் அடித்தள மக்கள் பிரிவைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். மதம் மாறிய பின் இவர்கள் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளாயினர். இதைத் தடுக்கும் முறையில் பல புதிய கிறித்துவக் குடியிருப்புகளை இரேனியஸ் நிறுவினார். இவற்றுள் டோனா என்பவரிடம் நன்கொடை பெற்று அவர் உருவாக்கிய ஊரே இச்சீமையில் இன்றும் புகழ் பெற்று விளங்கும் டோனாவூராகும்.

தமிழ்ச் சமூகத்தின், சாபக் கேடான சாதியம் சீர்திருத்தக் கிறித்துவ சபையிலும் இடம் பெற்றிருந்தது. இத்தீமைக்கு எதிராக இரேனியஸ் உறுதியுடன் போராடினார். அவர் காலத்திலும் அவருக்குப் பிந்திய காலத்திலும் பணியாற்றிய மறைப் பணியாளர்களில் சிலர் சாதியத்துடன் சமரசம் செய்து கொண்டனர்; அல்லது அதனைக் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டனர். பாளையங்கோட்டையிலிருந்த மாணவர் விடுதியில் வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களே முற்றிலுமாக இருந்தனர். 1821இல் நாடார் சாதியினரும் ஆதிதிராவிடரும் மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். உடனே வெள்ளாள

சாதி மாணவர்கள் நாடார் சாதி மாணவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவருந்த மறுத்தனர். நாடார் சாதி மாணவர்களோ ஆதி திராவிட மாணவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவருந்த மறுத்தனர். இதனால் விடுதி மூடப்பட்டது. பல்வேறு சாதிகளைச் சார்ந்த 24 மாணவர்களுடன் 1822இல் விடுதியை மீண்டும் திறந்து இரேனியஸ் நடத்தினார்.

இரேனியசின் பணிகள் பன்முகத்தன்மை வாய்ந்தவை. அவர் மறைப் பணியாளராக மட்டும் இருந்து விடவில்லை. விவிலிய மொழி பெயர்ப்பாளராகவும் விளங்கினார். இலக்கியம்-தத்துவம், சமயம் என்ற எல்லையைத் தாண்டி நவீனச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆற்றலுடையதாகத் தமிழை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட முன்னோடி அவர்.

இங்கு படிக்கப்பெறும் ஐந்து கட்டுரைகளும் அவருடைய எழுத்துப் பணிக்கு முக்கியத்துவம் தருகின்றன.

◆ ◆ ◆

இக்கட்டுரைகளைப் படித்து முடித்தவுடன் சமயம் என்ற எல்லையைத் தாண்டி தமிழ்ப்பணியாளர் என்ற நிலையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இரேனியசுக்கு ஓர் இடம் உண்டு என்பதைத் தெளிவாக உணரலாம். இத்தகுதியின் காரணமாகவே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை இக்கருத்தரங்கை நடத்துகிறது. இம்முயற்சிக்கு உறுதுணையாக நிற்கும் தென்னிந்தியத் திருச்சபையின் திருநெல்வேலித் திருமண்டிலத்தின் பொறுப்பாளர்களும் பாராட்டுதலுக்குரியவர்கள்.

இரேனியஸ் வாழ்வும் எழுத்தும்

ஆர். எஸ். ஜேக்கப்

முன்மொழி

அருள் தொண்டர் சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ் சென்னைக்கும், நெல்லைக்கும் கிடைத்த அருட்கொடை. திருச்சபை மக்கள் அவரை இரேனியஸ் என்றே அன்புடன் அழைக்கிறார்கள். திருமறையாளர்கள் "திருநெல்வேலி அப்போஸ்தலன் ரேனியஸ்" என்று கூறுகிறார்கள். அப்போஸ்தலன் என்றால் தூதுவன் என்று பொருள். தூதுவனுக்கான அனைத்து இலக்கணங்களையும் ஒருங்கே அமையப் பெற்றவர் ரேனியஸ். அவரது வாழ்வும், எழுத்தும் என்பன தொண்டும், தியாகமும் தூய்மையுமே. ஒன்றையொன்று பிரிக்க முடியாதபடி அவரது வாழ்வும் எழுத்தும் இரண்டறக் கலந்துள்ளன.

அன்னாரின் இருபத்தி நான்கு ஆண்டுகளின் வாழ்வை எண்ணுங்கால் ரேனியஸ் அடிகளாரின் தனி வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, குருத்துவப் பணி, ஆன்மீக ஆதாயப்பணி, அருளுரைப்பணி, சபைகளைக் கட்டுதல்,. சபை மேய்ப்புக் கண்காணிப்புகள், நிறுவனங்களை நிறுவுதல், அவைகளைத் திறம்பட நடத்தல், ஊழியர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி தருதல், தினமும் தெருப்பிரசங்கங்கள் செய்தல், இடையறாது நூற்களை எழுதுதல், அறிவு நூற்களை எளிய நடையில் கொடுத்தல், கடைசி வினாடிவரை வேதாகம மொழிபெயர்ப்பு இவ்விதமாகப் பல முனைகளில் அவரது ஊழியம் விரிந்து பரந்து வியாபித்துள்ளது. இவரது வாழ்வும் எழுத்தும் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவை.

மானுட நேயத்திற்கு விரோதமான செயல்கள், கொத்தடிமைத்தனங்கள், சாதியக் கொடுமைகள், ஏழைகளின் உழைப்பைச் சுரண்டுதல், மூடபக்தி இவைகளைக் காணுந்தோறும் கொதித்து எழுந்தார். அவர் உருவாக்கிய ஆலயங்கள், பள்ளிகள் அனைத்தும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகப்பாதுகாப்புக்கான கூடங்களாக அமைந்திருந்தன. தமிழ் மக்களுக்கு அறிவு உண்டாகும்படி அவர் படைத்த நூல்கள் அனைத்தும் அவரது ஆழமான எழுத்தாண்மைக்குச் சான்று பகர்வதாக உள்ளன.

அவரைப் பற்றிய செய்திகள் வெகுகாலம் மக்களுக்குத் தெரியாமலே ஆங்கில அறிக்கைகளுக்குள்ளே அடங்கிக் கிடந்தன. நெல்லைத் திருமண்டில வரலாற்றறிஞர் அருட்திரு. டி. ஏ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்கள் முப்பது ஆண்டுகள் அரும்பாடுபட்டுச் சேகரித்துப் பதிப்பித்த

நூல் "நெல்லை அப்போஸ்தலன் ரேனியஸ்" என்பதாகும். அவரது ஐந்நூறு பக்க நூலினை நான் ஐம்பது பக்கமாக 1993-ல் சுருக்கி எழுதி வெளியிட்டு இருந்தேன். இக்கட்டுரைக்கு ஆதாரம் அவ்விரு நூற்களுமே.

இரேனியசின் வாழ்வும், எழுத்தும் முப்பரிமாணங்களைக் கொண்டவை. ஊழிய உழைப்பு, எழுதிய நூற்கள், அவரது அன்றாட நாட்குறிப்புகள் ஆகியவையே அவை.

பிறப்பும் தமிழ்நாட்டுக்கு வருகையும்

1790-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் தேதி இன்றைய ஜெர்மனியில் பிரஸ்ய நேரியன் வெல்டர் என்ற ஊரில் பிறந்தவர் இரேனியஸ். தனது ஏழாம் வயதில், இராணுவத்தில் பணிபுரிந்த தந்தையை இழந்தார். இவரது உடன் பிறந்தவர் ஐவர். விதவையான தாயின் வளர்ப்பு அவரை மனிதநேயம் மிக்கவராக்கிற்று. 1811-ல் மறைபரப்பும் திருப்பணியில் சேர உறுதி கொண்டு பெர்லின் நகரில் 15-மாதங்கள் இறையியல் பயிற்சி பெற்றார். 1812-இல் சுவிசே லூத்தரன் திருச்சபையில் குருத்துவப் பட்டம் பெற்றார்.

1814-ல் சென்னை வந்துசேர்ந்த இரேனியஸ் அடிகளார் தரங்கம்பாடியில் ஐந்து மாதகாலம் ஊழியப் பயிற்சியும் தமிழ்மொழிப் பயிற்சியும் பெற்றார்

தொடக்ககாலப் பணி

1814 -இல் சென்னை வந்த இரேனியஸ் ஜார்ஜ் டவுனில் ஒரு வாடகை வீட்டில் தங்கி தம் இறைப்பணியை ஆரம்பித்தார். அவர் குடியிருந்த வீட்டு வளாகத்தில் வழிபடு தெய்வங்கள் சிலை வடிவிலிருந்தன. அங்கு வந்த மக்களிடம் அன்போடு பழகினார். சிறு உரையாடல்களைக் கனிவோடு அவர்களுடன் நிகழ்த்தினார்.

1814 ஏப்ரல் 12 முதல் ஒரு சிறு ஜெபக்கூட்டம் அவ்வீட்டில் உருவானது. அங்கு 46 பேர் வருகை தந்தனர். ஏப்ரல் 28 ஞாயிறு அன்று முதல் ஆராதனை நடந்தது. அதுவே ஞாயிறுப் பள்ளியாகவும் பயன்பட்டது. ரேனியஸ் முதலில் ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்தால் அதுவே பள்ளியாகவும், ஆராதனைத் தலமாகவும், ஓய்வுநாள் வகுப்பாகவும், சமூகக்கூடமாகவும் விளங்கும். இதுவே அவரது வழக்கமாக இருந்தது. வேலை இல்லாத நாட்களில் சோம்பிக் கிடத்தல், சாதி வேறுபாடுகள் - ஆகிய பண்புகளைத் தாம் அறிந்த தமிழ் மக்களிடம் அவர் பெருங்குறைகளாகக் கண்டுணர்ந்தார். களைய வேண்டிய பண்புகளாக அவரால் முதலில் அடையாளம் காணப்பட்டவை இந்த இரண்டும்தான். திருச்சபை மக்களிடம் இவைகளைக் களைந்து எறிய அவர் எண்ணினார். வேலை இல்லாத நாட்களில் பிற சிறிய தொழில்களைச் செய்யுமாறு தம்மை நாடிய மக்களுக்கு அவர் உபதேசித்தார்.

சென்னை நகரில் வசித்து வந்த ஒரு பக்தி உள்ள டச்சுக் குடும்பத்தைச் சேர்ந்த 'அனி' என்ற பெண்ணைத் தம் இருபத்தைந்தாம் வயதில் (1816 மார்ச் 7 ஆம் நாளில்) அவர் திருமணம் செய்து கொண்டார்.

சிறு சிறு துண்டு அறிக்கைகளின் வழியாக மக்களிடம் சமூக, சமயச் செய்திகளைக் கொண்டு செல்லமுடியும் என்பதை முதலில் தமிழர்க்கு அறிமுகப்படுத்தியவர் இரேனியஸ் அடிகளாரே. இந்த எண்ணத்தைச் செயலாக்க Madras Tract Society என்ற அமைப்பினை 1818 இல் அவர் நிறுவினார். (பின் வந்த ஒரு நூற்றாண்டுக்காலத்தில் இம்முறை தமிழ நாட்டுச் சமூக, சமய, அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தினைப் பெற்றது என்றால் மிகையாகாது) தாம் எழுதிய துண்டறிக்கைகளை எழுத்தறிவில்லாத மக்களிடம் படித்துக் காட்ட கிறிஸ்தியான் என்ற ஒரு வாசகரையும் (Reader) நியமித்தார்.

இரேனியசிடம் முதன் முதலாகத் திருமுழுக்குப் பெற வந்தவர் இரு மனைவிகளை உடையவர். ஒரு மனைவியை நீக்கிவிட்டு ஒழுக்கமாக வாழவேண்டும் என்று வந்தவரிடம் அவர் கண்டித்துரைத்தார். வந்தவர் ஓடிவிட்டார். அடுத்து கிறிஸ்தவராக ஆசை கொண்டு வந்தவர் மிகுந்த சுயநலக்காரர். அதற்கு "இங்கு இடமில்லை" என்று கூறி அவரை அனுப்பி விட்டார். இப்படிப் பல நிகழ்வுகள். இரேனியஸ் தம் சமயப்பணியில் மிகவும் சோர்வுற்றார் எனினும் உண்மையானவர்களும் இருந்தார்கள். இறுதியில் அவருடன் ஐந்து குடும்பங்கள் மட்டுமே நிலைத்து நின்றன. சென்னையில் முதல் கிறித்தவர்கள் இவர்களே. எனினும் இரேனியஸின் நற்பண்புகளில் சபை நாடோறும் வளர்ந்தது. தெலுங்கர், ரோமானியர், தமிழர் எனப் பல மொழியினரும் அவரை விரும்பி நாடி வந்தனர்.

ஜார்ஜ் டவுனில் 1819 ஜீன் 30 ல் ஓர் ஆலயம் கட்ட அவர் கால்கோள் நாட்டினார். அன்று காஞ்சிபுரம் சென்றார். அங்கு வரதராஜப் பெருமாள் கோயில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. பலர் தீவிர பக்தியின் காரணமாகத் தங்கள் உடலை வருத்தி வழிபடுவது கண்டு அவர் நெஞ்சம் குமுறினார். காஞ்சிபுரத்தில் சில பிராமணர்கள் வந்து இரேனியசிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவ்வூரில் ஒரு ஆங்கில-தமிழ்ப் பள்ளியை நிறுவினார் என்று அவரது வாழ்க்கைக் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

இரேனியசின் பெருமுயற்சியால் 1817 நவம்பர் 5 ஆம் நாளில் சென்னையில் ஒரு வேதாகமச் சங்கம் நிறுவப்பட்டது. அப்போது நடைமுறையில் இருந்த பெப்ரிஷியஸ் மொழி பெயர்ப்பான தமிழ் வேதாகமம் மக்கள் பேசும், புரியும் மொழியில் இல்லாததினால் 1815 நவம்பர் 15 ஆம் நாள்முதல் அதன் திருத்தப்பணியை ஆரம்பித்த இரேனியஸ் தம் இறுதிமூச்சுவரை அப்பணியைச் செய்து வந்தார். உதவிக்கு ஒரு தமிழாசிரியரை எப்போதும் உடன் வைத்து இருந்தார்.

போராட்ட வாழ்வு

1815 மே மாதம் சென்னையில் முதல் பள்ளியை நிறுவினார். பின்பு பள்ளிகள் பெருகத் தொடங்கின. கற்றுக் கொடுக்க ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. சென்னையில் 'செமினரி' ஒன்றை ஆரம்பித்தார். ஆசிரியர்ப் பயிற்சிப் பள்ளி என்று இந்நாளில் உள்ளவைகளே அன்று

'செமினரி' எனப்பட்டன. தமிழைத் தரத்துடன் சிறந்த முறையில் கற்றுக் கொடுக்க தமிழ் இலக்கண நூல் ஒன்றினை மிக எளிய முறையில் எழுதினார். பாடநூல்கள் சிலவும் தமிழில் எழுதி வெளியிட்டார். ஆற்காடு, சிற்றூர், வேலூர் என்று பல ஊர்களுக்கும் அலைந்தார். சமண மதத் தலைவர்களையும் சந்தித்தார். இவ்வரிய பணிகளுக்கு மத்தியில் பழைய, புதிய ஏற்பாட்டு வரலாறுகளையும், கிறித்தவ சித்தாந்தத்தையும் வினாவிடையாக எழுதினார்.

"தமிழருக்கு ஒரு நிருபம்" என்று ஒரு சிறு நூலை வெளியிட்டார். அது தமிழ் மக்களை விழித்தெழச் செய்யும் அற்புத நூலாகும். ஆங்கிலத் துண்டு அறிக்கைகளை அவ்வப்போது தமிழாக்கம் செய்து இலவசமாக விநியோகித்தார். அக்காலத்திய இறுக்கமான தமிழ் உரைநடை எளிமைப்படுத்தப்பட வேண்டும். என்ற உணர்வினைத் தமிழ் அறிஞர்களின் மனத்தில் உருவாக்கிய அரிய முயற்சி இதுவாகும்.

ஆதியாகமம் என்ற விவிலியத்தின் முதல்நூலை எளிய தமிழில் மொழிபெயர்ப்பு செய்து முடித்தார். அச்சு இயந்திர வசதிகள் போதுமானபடி இல்லாத காலம். எனவே தம் கையாலேயே எழுதிப் பல படிகளை எடுத்தார்.

"மனந்திரும்பு, கடவுளை அறிந்து கொள்" என்ற இரேனியஸின் போதனை அன்றைய மக்களுக்குப் புதுமையாக இருந்தது. சித்தாம்பூர் என்ற ஊருக்குள் அவர் செல்லும்போது இடி, மின்னலுடன் பலத்தமழை பெய்தது. "வெள்ளைக்காரன் வீட்டுக்குள் வந்தால் தீட்டு" என்று எண்ணிய மக்கள் அவரை வீட்டுக்குள் அழைக்கவில்லை. அவர் மீது இரக்கம் கொண்ட ஒருசிலர் நள்ளிரவில் பாய்களைப் பல்லக்கின் மீது போட்டு அவர் தலைநனையாதபடி செய்தனர்.

1818 செப்டம்பர் 29 ஆம் தேதி தொடங்கப்பெற்ற "சென்னை துண்டுப் பிரசாரக் கழகம்" என்ற நிறுவனத்தை லண்டன் கழகத்துடன் இணைத்தார். வாசிப்புப் பழக்கம் பரவலானது.

1818 அக்டோபரில், சென்னையில் பயங்கர காலரா நோய் பரவியது. பலர் மாண்டனர்; பலர் ஊரைவிட்டு ஓடினர். இரேனியஸ் முதலுதவியைத் தைரியத்துடன் செய்தார். பல உயிர்களைக் காப்பாற்றினார். காலரா நோய்த்தடுப்பு பற்றி ஒரு துண்டறிக்கை எழுதி அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்தார். வாசகர்களை அனுப்பி படித்துக் காட்டவும் செய்தார்.

இரேனியஸ் லுத்தரன் முறைப்படி அருட்பொழிவு பெற்றவர். அக்காலத்தில் சென்னை சி.எம்.எஸ் சங்கத்திற்கும் லண்டன் தாய்ச் சங்கத்திற்கும் கருத்துவேறுபாடு எழுந்தது. ரேனியஸால் ஆங்கிலிக்கன் முறைமைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதன்விளைவாக இரேனியஸ் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டார். ரேனியஸ் மிகுந்த வேதனைக்குள்ளானார். ஆயினும் அது, "இறைச்சித்தம்" என்று கருதி பணியினைத் தொடர்ந்தார்.

அவரது சென்னை ஊழியம் அரைகுறையில் நின்றது. சாதி பேதத்தை அறவே ஒழிக்க முயன்றதும் அவரது இட மாற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாகும். இரேனியஸின் வாழ்வு போராட்டமாகவும் அவரது எழுத்து புதுமையாகவும் இருந்தன.

நெல்லைக்கு நல்ல காலம்

1820 ஜீன் 2 ஆம் நாள் ரேனியஸ் குடும்பத்தாரோடு புறப்பட்டு திருச்சி, மதுரை முதலிய இடங்களில் தங்கித் தங்கி முப்பத்தைந்து நாட்களுக்குப் பிறகு ஜீலை 7 ஆம் நாள் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். இரேனியஸிற்கு நெல்லை நகரத்தில் வீடு வாடகைக்கு கிடைக்கவில்லை. "வெள்ளைப்பரங்கிக்கு ஏது வீடு" என்று மறுத்தனர். இறுதியாக இவரது முன்னோடியாக நெல்லையில் பணிசெய்த ஹாப்ஸ் ஐயர் தம் பங்களாவை விலைக்குக் கொடுத்தார். ஏறத்தாழ நாற்புறமும் ஆயிரம் மீட்டர் நீளமுள்ள கோட்டை மதில்களைக் கொண்ட பாளை நகர் ஊழியத்தை இரேனியஸிடம் ஹாப்ஸ் ஐயர் ஒப்புவித்தார். இது 1820 ஆம் ஆண்டின் நிகழ்வாகும். இரேனியஸ் 1822ல் நெல்லை வண்ணார்பேட்டையில் முதல் பள்ளியைத் தொடங்கினார். ஆசிரியர் சங்கரலிங்கம். ஆண்டுக்கு சம்பளம் ரூபாய்.14, மாணவர்கள் 17 பேர்.

திருநெல்வேலி, மேலப்பாளையம், குறிச்சி, தச்சநல்லூர் என்று பள்ளிகளும் சபைகளும் ஆலயங்களும் பெருகத் தொடங்கின. பாளையங்கோட்டையில் நிறுவிய செமினரி பள்ளியில் சாதி வேறுபாடு கடுமையாகத் தலை தூக்கிய போது இரேனியஸ் பள்ளியை மூடினார். சாதிவெறியை வேரோடு ஒழிப்பதில் இரேனியஸ் உறுதியாய் இருந்தார். செமினரியில், ஆங்கிலம், தமிழ், கணக்கு, விவிலியம் ஆகியவை கற்றுத் தரப்பட்டன. அதுவே இன்றைய பிஷப்சார்ஜென்ட் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஆகும். 1823 இல் பெண்களுக்கு அவர் ஒரு செமினரியைத் துவக்கினார். பல ஊர்களில் இருந்தும் தெரிந்தெடுத்த 39 பேர் அப்பள்ளியில் பயின்றனர். இரேனியஸின் துணைவியார் அனி அம்மாள் அப்பள்ளியின் தலைவி. அனைத்துப் பாடங்களையும் போதித்தார்கள். அதுவே இன்றைய மேரி சார்ஜென்ட் மேல்நிலைப்பள்ளி. இந்தியாவிலேயே பெண்களுக்கென விடுதியோடு கூடிய தனிப்பள்ளி முதலில் நாகர்கோவிலும் இரண்டாவது பாளையங்கோட்டையிலும் தான் தொடங்கப்பட்டன.

இரேனியஸ் கால நெல்லை மாவட்டம் என்பது இராமநாதபுரம் மாவட்டத்தையும் உள்ளடக்கியது. இரேனியஸ் பயணத்தில் சற்றும் சலியாது உற்சாகமாகப் பணியாற்றினார். கிராமம் கிராமமாக, ஊர் ஊராகச் சென்றார். அவர் காலடி படாத இடம் இல்லை எனலாம். மக்கள் கூட்டம் கூட்டமாகக் கிறித்தவம் தழுவினர். நெல்லை நகரத்தில் குற்றாலம் சாலையில் உள்ள ஒரு ஜெபக் கூடத்தில் உயர் சாதி மக்கள் பலர் வந்து இரேனியஸிடம் கேள்விகள் கேட்டனர். தர்க்கம் செய்தனர், உரையாடல்கள் நிகழ்த்தினர்.

இரேனியஸ் எழுதி வெளியிட்ட ஞானோபதேச வினாவிடையை பரவலாக மக்கள் படித்தனர். நெல்லைக்கும், நாகர்கோவிலுக்கும் சேர்த்து ஒரு துண்டுப்பிரசுர சங்கத்தை அவர் நிறுவினர். அச்சு அடிக்கும் தாள் லண்டனில் இருந்து தருவிக்கப்பட்டது. துண்டுப் பிரதிகளின் வாசகங்களைச் சந்தி பிரித்து எளிமையாக்கிக் கொடுத்திருந்தார். இதனால் பாமர மக்களின் படிப்பறிவு வளர்ந்தது. வசன நடையும், ஓர் இலக்கிய உருவம் கொண்டது. இரேனியஸின் துண்டுப்பிரதிகள் குமரி முதல் சென்னை வரை சென்றன.

இரேனியஸ் நெல்லை வந்தபிறகும் 14 ஆண்டுகள் தொடர்ந்து திருநெல்வேலியிலிருந்த திருப்பாற்கடல்நாதன் என்பாரிடம் தமிழ் பயின்றார். கடைசிவரை தமிழைக் கற்றுக் கொண்டே இருந்தார். திருப்பாற்கடல் நாதருக்கு ஆங்கிலம் அறவே தெரியாததால் இதனைத் தனது நாட்குறிப்பில் இப்படி எழுதுகிறார்.

“திருப்பாற்கடல் நாதனுக்கு ஆங்கிலம் அறவே தெரியாதது நமக்கு மிகவும் சாதகமாக இருந்தது எப்படியெனில் தமிழைத் தமிழ் மரபிலேயே கிரகித்துக் கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது” என்று எழுதினார். (திருமதி. சரோஜினி பாக்கியமுத்து எழுதிய விவிலியமும் தமிழும் பக்கம் 103)

இரேனியஸ் தொடர்ந்து நாட்குறிப்பு எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இரேனியஸின் நாட்குறிப்புகள் அனைத்தும் அவரின் சமூகப்பணியின் மேம்பாட்டுக் குறிப்புகளாகவே உள்ளன. இவை தனித்து ஆராயத்தக்கன.

1823, 24, 25 ஆம் ஆண்டுகளில், ஒடுக்கப்பட்ட, அடிமைப்பட்ட மக்கள் நெல்லைப்பகுதியில் கூட்டம் கூட்டமாகக் கிறித்தவம் தழுவினர். இதனைக் கிறித்தவ வரலாற்று ஆசிரியர்கள் வெகுஜன இயக்கம் என்கின்றனர். பனைஏறிய மக்கள் பனைஏடுகளை எடுத்துப் படிக்க ஆரம்பித்தனர். நெல்லையில் நடந்த இந்த விழிப்புணர்வு இயக்கம் உலக வரலாற்றில் இதுவரை கண்டிராதது என்று கூறப்படுகிறது. சபைகள் பெருகப் பெருக துன்பங்களும் பெருகின. பிரச்சனைகள் நிறைந்தன. அது குறித்து இரேனியஸ் தம் நாட்குறிப்பில் இப்படி எழுதுகிறார்:

“சாத்தான் சீறுகிறான், ஆனால் அவன் தோல்வி அடைவான். கர்த்தர் வாசலைத் திறப்பாரானால் யார் அதை மூடுவான்?”. இவ்விதமாக அவரது நாட்குறிப்புகளும், ஆவணக் குறிப்புகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவை ஒரு தனி ஆய்வுப் பகுதியாகும்.

அருள் ஏராளம்

இரேனியஸ் தம் விரிவான கல்வித் திட்டங்களுக்கு பாளையங்கோட்டையில் போதிய இடம் கிடைக்காமல் திணறினார். அதனை அறிந்த வெங்கு முதலியார் திருநெல்வேலி - பாளையங்கோட்டை நெடுஞ்சாலைக்கு வடக்கில் இருந்த கட்டிடங்களோடு கூடிய பெரும்

வயல்வெளியை 750 ரூபாய்க்கு விலைக்குக் கொடுத்தார். அன்று இது மிகக் குறைந்த விலையே. 5 குதிரைகள் கட்டும் லாயமும், குளிக்கும் அறைகளோடு கூடிய சிறு குளமும் அங்கு இருந்தன.

பெருமகிழ்ச்சி அடைந்த இரேனியஸ் கடவுளுக்குத் தம் நன்றிப் பெருக்கை ஏறெடுத்தார். அக்காலத்தில் பெரும் புகழ் பெற்ற சுலோச்சன முதலியாரும் இரேனியஸின் நண்பராய் இருந்தார். அவர் மிஷனரிகளிடம் கல்வி கற்றார். நெல்லை நகரில் ஆங்கிலப் பள்ளி நிறுவ அவர் உதவி செய்தார்.

பெண்களுக்கான செமினரி பள்ளியைத் திருமதி இரேனியஸ் கண்காணித்தார். அதில் பயின்ற பெண்களின் வம்சாவழியினர் இன்றும் உலகம் முழுவதும் உயர்நிலையில் உள்ளனர். அப்பள்ளி பற்றி இரேனியஸ் எழுதிய நாட்குறிப்பை மிகச் சுருக்கமாகத் தருகிறேன். "இப்பள்ளியை இந்தியாவில் ஒரு புதுயுகம் எனலாம். பெண்கள் தங்களையும் தங்கள் இல்லங்களையும், சுத்தமாகவும், ஒழுங்காவும் வைத்துக் கொள்ளக் கற்பிக்கிறோம். தெளிந்த புத்தியும், உண்மையும் உள்ள மாணவிகளாகவும், தாய்மார்களாகவும் விளங்கத்தக்கவர்களாக அவர்களை உருவாக்குகிறோம்".

1825 டிசம்பர் 8ல் ரேனியஸின் குழந்தை ஒன்று மரித்தது அவரைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. நாட்டு நலப்பணிக்காகப் பாடுபட்ட இரேனியஸ் குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளைத் தமிழ் மண்ணில் புதைக்கவில்லை; விதைத்தார்கள். அதன் அறுவடையே இன்று நாம் காணும் கல்வியின் மேம்பாடு.

பாளை கதீட்ரல் ஆலயம் இப்போது இருக்கும் இடத்தில் ஒரு சிறிய ஆலயத்தை இரேனியஸ் 1826 ஜனவரியில் தொடங்கி ஜூன் மூன்றாம் நாள் கட்டி முடித்தார். அதுவே இன்றைய திரித்துவ ஆலயம் எனப்படும் ஊசிக் கோபுரம் ஆகும். (அதன் பிறகு பல மாற்றங்கள் பெற்றுள்ளது)

அறிவு நூல்கள்

இரேனியஸின் உழைப்பு மிகக் கடினமானது. ஒருபக்கம் வேதாகம மொழி பெயர்ப்பு, இன்னொரு பக்கம் துண்டுப் பிரசுரங்களை எளிமையாக எழுதுவது, பிறிதொரு பக்கம் கிறித்தவ இலக்கியப் பணி.

இரேனியஸ் செய்த "வேதசரித்திரம்" என்ற தமிழாக்க நூல் செமினரி பள்ளிகளில் முக்கியப் பாடப்புத்தகமாகப் பயன்பட்டது. 1820இல் சுவிசேஷ சமரசம் என்ற ஒரு பெரிய நூலையும் எழுதினார். மாணவர்கள் உலக அறிவைப் பெறவேண்டும் என்ற எல்லை இல்லாத் தாகத்தில் பொது அறிவு நூற்களை வெளியிட்டார். அதில் வரலாறு, தாவரம், மண்வளம், கனிப்பொருள்கள் பற்றி தெளிவாக எழுதினார்.

அவரது நூல்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை சிலவற்றின் பெயர்கள் இவை.

1. வேத உதாரணத்திட்டு
2. உருவ வழிபாடு
3. சூரிய மண்டலம்
4. இயற்கையின் நிகழ்வு
5. கால இயலும் வான இயலும்
6. புதியகோட்பாடு
7. சமயத்துவம்
8. பூமி சாஸ்திரம்
9. தமிழ் இலக்கணம் (ஆதாரம் தமிழ் வரலாற்றில் கிறித்தவம், பக் 105)

ஸ்மாலி என்பவர் 1822 இல் எழுதிய "இந்திய யாத்திரிகன்" என்ற நூலை அவர் திருத்திக் கொடுத்து அச்சிட உதவி செய்தார். ஞானதீட்சை பெறுவோரை ஆயத்தக்காரர்களாக்கி அடிப்படை ஞானத்தைப் புகட்டிய பிறகே அவர் திருமுழுக்குக் கொடுக்கச் சம்மதிப்பார். அதற்காக 1822-இல் அவர் எழுதிய "ஞானப்போதிப்பு" என்ற நூல் அவர் காலத்திற்குப் பிறகும் திருத்தொண்டர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

புதிய சபைகள் உயர்சாதியினரின் தொல்லைக்கு உள்ளாயின. இதனைத் தவிர்க்க விரும்பி இரேனியஸ் நிலங்களை விலைக்கு வாங்கி புதுக் குடியிருப்புகளை ஏற்படுத்தி நல்லூர், மெய்யூர், சமாதானபுரம், முதலூர், அடைக்கலாபுரம் போன்ற பெயர்களை அவற்றுக்குச் சூட்டி அந்நாளிலேயே சமத்துவ சமாதானக் குடியிருப்புகளை அமைத்தார்.

1827 இல் "வேதாகம மொழிபெயர்ப்பு விதிகள்" என்ற ஆங்கில நூலை எழுதினார். அது மொழிபெயர்ப்பாளர்களுக்கு இலக்கணம் போன்றும், கை நூல் போன்றும் அமைந்திருந்தது. இந்தியாவில் மொழிபெயர்ப்பியல் சிந்தனைக்கு அந்நூல் ஒரு முன்னோடி முயற்சியாகும்.

1827 இறுதியில் "விக்கிரக வணக்கம்", "மானிட வரலாறு" என்ற நூற்களை எழுதினார். அப்போது நெல்லைத் திருமண்டிலத்தில் 109 சபைகள் தோன்றி இருந்தன.

துண்டுத்தாள் வெளியீட்டுச் சங்கம் இரேனியஸ் எழுதிய பிரதிகளை இலட்சக்கணக்கில் அச்சடித்து இலவசமாகக் கொடுத்தது. அவரது துண்டுப்பிரசுர ஊழியம் நெல்லைக்கு வடக்கே நூறு மைல் தொலைவில் உள்ள கம்பம் வரை பரவி பலர் பயனடைந்தனர்.

தீங்கநுபவி

ஒரு குழந்தையின் திருமுழுக்கு காரணமாக எழுந்த கருத்து வேறுபாட்டில் இங்கிலாந்து "திருச்சபை ஊழியர் கழகம்" (CMS) இரேனியஸ் மீது வெறுப்பைக் கக்கியது. இரேனியசின் செமினரியில் கற்ற சற்குணம், யோசேப்பு என்ற இருவர் அக்காலத்தில் யாழ்ப்பாணம் சென்று உயர் கல்வி கற்றனர். மேற்கல்விக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பெற்ற முதல் தமிழ்க் கிறித்தவ மக்கள் இவர்களே.

1830 மே பத்தாம் நாள் இரேனியஸின் அருமைத் தாயாரும், ஒரே தங்கையும் மரித்துப்போன செய்தி வந்தது. இரேனியஸ் தம் இளம் வயதில் தம்மை ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தபோது தன் தாயின் அன்பு முகம் நோக்கி மனம் மருண்டு நின்றார். அப்பொழுது "ஒருவன் தன்

தாயையாவது, தகப்பனையாவது என்னிலும் அதிகமாக நேசித்தால் அவன் எனக்குப் பாத்திரன் அல்ல" என்ற வேத வசனத்தால் தெளிவு கண்டு ஊழியத்தைத் தொடர்ந்ததை நினைத்துப் பார்த்தார். "மிஷனெரிப் பணியில் சொந்த விருப்பு வெறுப்புக்கு இடம் ஏது" என்று தம் நாட்குறிப்பில் எழுதிவிட்டு வேதனைகளை உள்ளடக்கிக் கொண்டு தம் ஊழியப் பாதையைத்தொடரலானார்.

அக்காலத்தில் இந்தியா முழுமைக்கும் கல்கத்தாவிலிருந்த பேராயர் ஒருவரே கிறித்தவ மக்களின் சமய வாழ்விற்கு பொறுப்பாகவிருந்தார். பெருகி வரும் திருச்சபையை லண்டன் சி.எம்.எஸ் சங்கம் தடுத்து நிறுத்துவது போல் இரேனியஸிற்குத் தோன்றியது. அவர் ஒரு வழி செய்தார். திறமையான ஏழு உபதேசிமாரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தாமே அருட்பொழிவு செய்ய அதிகாரம் தரும்படி சென்னை கமிற்றிக்கு எழுதினார். திருச்சபைக்கும் இரேனியசிற்கும் கொள்கை முரண்பாடுகள் முற்றின.

சுத்திகரிப்பு

மானுடவாழ்வில் ஒழுக்கம் தலையாயது என்று போதித்து வந்தார்; திருச்சபைக்குள் அதனைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தினார். தலைவன்கோட்டை சபையில் ஒருவன் ஒரு விதவையின் பசுவைத் திருடிக் கொண்டு போனான். அதனைத் திரும்பக் கொடுத்து விடும்படி இரேனியஸ் கேட்டார். அவன் மறுக்கவே அவனைச் சபையை விட்டு நீக்கினார். மேல் நடவடிக்கை எடுத்தார்.

1832 ஆம் ஆண்டு மகாகொடிதாய் இருந்தது. காலரா நோய் நெல்லை மாவட்டத்தில் பல உயிர்களைக் கொள்ளை கொண்டது. தூத்துக்குடி, திருவில்லிப்புத்தூர், தென்காசி, சிவகாசி என்று எங்கும் பரவி கிராமங்களிலும் கோர தாண்டவமாடியது. இரேனியசும், ஷாப்டரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அயராது உதவிசெய்தனர். காலரா பற்றிய அவரின் துண்டுப்பிரசுரங்கள் நல்ல பலன் தந்தன. அறியாமையால் காலராவில் மடிந்த மக்களை எண்ணி இரேனியஸ் துயருற்றார்.

1832 இல் பூமி சாஸ்திரம் என்ற அறிவியல் நூலை (750 பக்கங்களுக்கும் அதிகம்) எழுதினார். தொழிற்புரட்சியின் விளைவாகப் பிறந்த புதிய அறிவொளியினை அந்நூலில் அவர் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார். உலகம் மாயை என்ற தத்துவத்தை மறுதலித்தார். விக்கிரக வழிபாட்டை எதிர்த்தார். மனிதன் அறிவில் தேறவும், இனிதாக வாழவும் கற்றுக் கொடுத்தார்.

"திருச்சபை" என்னும் பொருள் பற்றி எழுதிய ஒரு புத்தகத்தை இரேனியஸ் திறனாய்வு செய்து மேல் கமிற்றிக்கு அனுப்பி இருந்தார். அது லண்டன் தலைமைத் தலத்தில் பெரும் புயலைக் கிளப்பியது. கள்ளிக்குளம் என்ற ஊரில் உள்ள சபையார் தங்கள் வீட்டுப் பெண்களை ஆலய ஆராதனைக்கு அனுப்ப மறுத்தனர். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமம் என்ற உணர்வை ஏற்படுத்த இரேனியஸ் பெரும்பாடுபட்டார். புதிய

குடியேற்றங்களான அன்பின் நகரம், ஆரோக்கியபுரம், விசுவாசபுரம், கடாட்சபுரம், அனுக்கிரகபுரம் ஆகிய இரேனியஸ் உருவாக்கிய நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் கல்வியறிவில் உயர்ந்து மிகச் சிறப்புடன் விளங்கின. ஊர்களின் பெயர்களைப் பண்புப் பெயர்களால் அமைத்தது இரேனியஸின் உயர் பண்பை பளிச்செனக் காட்டுகின்றது.

இரேனியஸ் தாம் நிறுவிய சபைகள், தம் சொந்தக் காலில் நிற்க விரும்பினார். "சமய சகாயநிதி" என்றொரு நிதிநிலையை ஏற்படுத்தி சபைகளை உறுதிப்படுத்தினார். "கைம்பெண்கள் சங்கம்" என்று அவர் ஏற்படுத்திய ஒரு நிதி ஆதாரம், பாதிக்கப்பட்ட விதவைகளைப் பராமரித்தது.

தர்மசகாய சங்கத்தின் உதவி கொண்டு ரேனியஸ் 1834, 35 களில் மாணிக்கபுரம், இரட்சண்யபுரம், சௌக்கியபுரம் முதலிய புதுக்குடியேற்ற கிராமங்களை நிறுவினார். அவர்களுக்கு சமூகக் கொடுமைகளில் இருந்து விடிவு கிடைத்தது. சௌக்கியபுரம் மக்கள் மூன்று ரூபாய் செலவில் தங்களுக்கென ஒரு அழகான சிற்றாலயத்தைக் கட்டி முடித்தனர்.

இரேனியசின் குடும்பம்

இரேனியஸ் ஐயரின் பிள்ளைகள் பற்றிய தெளிவான குறிப்புகள் இல்லை. இரேனியஸிற்கு, யோசியா, சார்லஸ், பிரதெரிக்லுத்தர், தீமோத்தேயு, லூயி என்ற 5 ஆண்களும், கேத்தரின், தியோடோஷியா, லிதியா, சாரா, எமிலி என்ற 5 பெண்களும் பிறந்தார்கள். தியோடோஷியாவும், லூயியும் சிறு வயதில் இறந்து போனார்கள். யோசியா, சார்லஸ், லுத்தர் மூவரும் ஸ்காட்லாந்தில் கல்வி கற்று வந்தனர். மூத்தவளான 18வயது கேத்தரினுக்கும் 25 வயதான முல்லர் ஐயருக்கும் 1834 ஆம் ஆண்டு துவக்கத்தில் பாளையங்கோட்டையில் திருமணம் நடைபெற்றது. மூத்தமகன் சார்லஸ் இங்கிலாந்தில் கல்வியை முடித்து 1845ல் லண்டன் நகர அத்தியட்ச பேராயர் இடத்தில் உதவிக் குருவாக அருட்பொழிவு பெற்று சி.எம்.எஸ் மிஷனெரியாக 1847 முதல் 1850 வரை திருநெல்வேலிச் சீமையில் சுவிசேஷபுரத்திலும், டோனாவூரிலும் சமயத் தொண்டு ஆற்றினார்.

இரேனியஸ் ஒரு நல்ல தந்தை, தம் பிள்ளைகளைப் பெரிதும் நேசித்தார். தம் துணைவியாரிடம் மிகவும் பிரியமாக இருந்தார். நெல்லையைச் சுற்றி ஊழியம் செய்யும்போது தம் துணைவியாரை அழைத்துச் செல்வதில்லை. தூர இடங்கள் செல்லும்போது மட்டும் கூட்டிச் செல்வார்.

இரேனியசின் துணைவியார் ஓர் உத்தம மனைவி. கணவனைக் கருத்துடன் கவனித்து வந்தார். ஊழியப் பாதைக்கு உறுதுணையாய் இருந்தார். பெண் கல்விக்குப் பெரிதும் தொண்டாற்றியவர் அவர். வேலைக்காரர்களுக்கும், மாணவ-மாணவியர்க்கும் அவர் ஓர் அன்புத் தாயாக விளங்கினார்.

பிரிவும், பிளவும்

லூத்தரன் திருச்சபை - சி.எம்.எஸ். திருச்சபை என்ற கொள்கை முரண்பாடு

அதிகமானது. 1835 மே 18 ஆம் நாள் இரேனியஸ் அடிகளாருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் இரேனியஸ் எழுதிய ஒரு சிறு நூல் மதிப்பீட்டின் மூலம் தாய்ச் சங்கத்தார் அவருடன் உள்ள தொடர்பை முறித்துக் கொள்வதாகவும், அவருக்குப் பதிலாக டக்கர் ஐயர் திருநெல்வேலித் திருச்சபைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள விரைந்து வருகிறார் என்றும் செய்தி இருந்தது.

இரேனியஸ் கண் கலங்கினார். மக்கள்கூடிக் குமுறினர். இரேனியஸ் சபையைப் பிரிக்க விரும்பவில்லை. தாம் கட்டிக்காத்த சபைகளையும், நிறுவனங்களையும் கண்ணீரால் காத்தார். அப்படியே ஒப்புவித்தார்.

1835 ஜூன் 19 ஆம் தேதி புறப்பட்டு ஜூன் 29 ஆம் தேதி சென்னைத் துறைமுகம் சேர்ந்தார். ஆற்காடு நகரைத் தலைமைத் தலமாக்கினார். "ஜெர்மன் இவாஞ்சலிக்கல் மிஷன்" என்ற புதிய அமைப்புடன் ஊழியத்தை ஆரம்பித்தார், அவருடன் சென்ற 15 ஊழியர்களும் உற்சாகமாகச் செயல்பட்டனர். கிராமம் கிராமமாகச் சென்று,. சமய, சமுதாயப் பணிகளை ஆரம்பித்தனர். ஆனாலும் இரேனியஸ் ஐயரால் நெல்லையை மறக்கமுடியவில்லை. நெல்லையிலுள்ள உபதேசிமார் பலர் அவருக்கு உற்சாகமூட்டி திரும்பவும் நெல்லைக்குக் கட்டாயம் வந்துவிடும்படி எழுதினர்.

நெல்லை மீதிருந்த பாசத்தால் இரேனியஸ் மீண்டும் செப்டம்பர் 25 ஆம் நாள் புறப்பட்டு திருச்சியில் 10 நாட்கள் தங்கிவிட்டு அக்டோபர் 22 ஆம் நாள் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். ஊழியர்கள் உற்சாகம் கொண்டனர். ஆனால் அதிகாரப்பூர்வமான வரவேற்பு இல்லை. சிலர் அவர் மீண்டும் வந்ததை விரும்பவில்லை. எனவே பாளையங்கோட்டையை விடுத்து நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, பணியைத்தொடர்ந்தார்கள். ஆற்றுக்கு மேற்பக்கம் உள்ள சபைகள் இரேனியஸ் பக்கம் திரும்பின. பிரிவினை அதிகரித்தது; குழப்பநிலை உருவானது; சமாதான முயற்சிகள் தோல்வியுற்றன.

மீண்டும் தொண்டு தீவிரமடைந்தது. சபை, பள்ளி, கட்டுமானப் பணிகளைத் தொடர்ந்தார். "திருநெல்வேலியின் காரியம் தெய்வத்தின் காரியம்" என்று தம் நாட்குறிப்பில் எழுதினார்.

இறுதி மூச்சுவரை

1837 புத்தாண்டு. உபதேசிமார்களைக் கூட்டி மூன்று சங்கங்களை நிறுவினார்.

ஜெர்மானிய நற்செய்திச் சங்கம்

வேதாகம துண்டுத்தாள் பிரசுர சங்கம்

சமாதான சங்கம்

ஆகியவையே அவை.

புதிய சபைகள் தோன்றின. புதிய எழுச்சி ஏற்பட்டது. 1837 மே மாதம் "தெய்வீக சாராம்சம்" என்ற ஒரு நூலை எழுதினார். விவிலியப் பகுதியான ஏசாயா என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

1837 ஜூலை மாதத்தில் அவரது குழந்தை அனிடாரதி மரணமுற்றது. 47 வயது இரேனியஸை இம்மரணம் அதிகமாக உலுக்கியது.

இரண்டு இரண்டு பேராய் கிராமங்களுக்குச் சென்று ஒருவர் துண்டுப் பிரதிகளை விநியோகிக்க, மற்றவர் படித்துக் காட்டி விளக்கம் சொல்வார். இவ்வாறு செய்யும் "யாத்திரிகர் சங்கம்" நன்கு செயல்பட்டது. கிராமங்களில் வாசகர் வட்டம் வளர்ந்தது.

பேர்ப்பிலான் குளம் பகுதியில் மேற்குப் புதூர் என்னும் இடத்தில் ஒரு புதுச்சபையை அவர் நிறுவி விட்டு நெல்லைக்குத் திரும்பினார். அதுவே அவரது கடைசி சபை. இரேனியஸிற்கு இரத்தாசயத்தில் நோவு உண்டாயிற்று. இரேனியஸின் நாட்குறிப்பு 1838 மே 9 ஆம் தேதியோடு முடிகிறது. அதில் காணப்படும் கடைசி வாசகம் இப்படி உள்ளது.

"இன்று மாலை கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பெற்றேன். எனக்கு நல்ல சுகமில்லை. இன்று உஷ்ணம் அதிகம்".

இதுவே அவரது கடைசி வரிகள். மே மாதம் 25ஆம் நாள் வரை தம் பணிகளை உற்சாகமாகச் செய்தார். ஸ்காட்லாந்தில் இருந்து அவரது பிள்ளைகள் வந்திருந்தார்கள். அவருக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. 1838 ஜூன் 3 ஆம் நாள் இரேனியஸிற்கு இரத்த அழுத்தம் அதிகமானது. அட்டைகளைக் கொண்டு வந்து கடிக்க விட்டு அவரது இரத்த அழுத்தத்தைக் குறைத்தார்கள். அதிலும் பயன் இல்லை.

1838 ஜீன் 5 காலையில் பத்துமணிக்குக் கடிதங்கள் அனைத்திலும். கையொப்பமிட்டார். பிற்பகல் இரண்டு மணிக்குத் தன்உணர்விழந்தார். குடும்பத்தினர் கட்டிலைச் சுற்றி அமைதியோடு நின்றனர். 1838 ஜூன் 5 மாலை 7.30 மணிக்கு இரேனியஸின் உயிர் அமைதியாகப் பிரிந்தது. மதவேறுபாடின்றி பாளையங்கோட்டை நகர மக்கள் கூடினர். பாளை ஊசிக்கோபுரத்தின் மணி துக்கமாக ஒலித்தது. "இஸ்ரவேலின் ஒரு பிரபு இன்று விழுந்தார்" என்று மகாசத்தமாய்க் கூறி மக்கள் அழுதார்கள். ஏழாம் தேதி காலை அவருக்கென்று ஒதுக்கப்பட்ட அடைக்கலாபுரம் கல்லறையில் அடக்கம் செய்தார்கள். ஷாப்டர் ஐயர் அடக்க ஆராதனை நடத்தினார்.

தெருத்தெருவாகச் சென்று நற்செய்தி அறிவித்த அவரது கால்கள் ஓய்வு எடுத்தன "நற்செய்தியை அறிவியாது இருந்தால் எனக்கு ஐயோ" என்பதே அவர் வாழ்வின் உயிர் மூச்சாய் இருந்தது. அவரது கல்லறையில் தமிழில் எழுதப்பட்ட குறிப்பு இவ்வாறு உள்ளது.

"சார்லஸ் இரேனியஸ் ஐயரவர்கள் 1790 ளூ நவம்பர் மீ 5 தீ புருசிய தேசத்தில் பிறந்து 1814 சூலாயி மீ 4 உ சென்னைப் பட்டணத்தில் சேர்ந்து அத்திசையிலும், விசேஷமாகத் திருநெல்வேலி நாட்டிலும் 1838 சூன் மீ 5

தீ வரைக்கும் நல்ல சேவகத்தைப் பண்ணி நித்தியராச்சியத்துக்குட் பட்டார்"

"நீதியென்னும் கிரீடத்தை நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்தநாளிலே யெனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பின யாவருக்கும் தந்தருளுவார்" உ.தீமோ, ச. அ.

"சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" என்று ரோமர் 10:15 கூறுகிறது.

இரேனியஸ் அடிகளாருக்குத் தமிழ் இலக்கணம் கற்றுக்கொடுத்தத் திருப்பாற்கடல்நாதர் பாடிய இரங்கற்பாவிலிருந்து இரு அடிகளை மட்டும் தந்து முடிக்கிறேன்.

"காசினி தன்னில் ஆதித்தன்
கிரணம் போல் அறிவைப் பரப்பிய இரேனியூசு"

இணைப்பு

இரேனியஸ் ஐயர் எழுதிய சில தமிழ் நூல்களுக்கான குறிப்புகள்.

1. வேதாகம சரித்திர வினாவிடை (1818 மே, 30)

இந்நூலின் பெரும்பகுதி பழைய - புதிய ஏற்பாட்டு ஆகமங்களில் சரித்திர ரீதியான கேள்விகளும் விடைகளுமே. பத்துக் கற்பனைகள், கர்த்தருடைய ஜெபம், பரிசுத்த நற்கருணை, விசுவாசப்பிரமாணம் ஆகியன இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

2. கிறிஸ்து மார்க்க சித்தாந்த வினாவிடை (1818)

கடவுளின் தன்மை, மனிதனின் இயல்பு, இரட்சிப்பின் திட்டம் என்னும் மூன்று சித்தாந்தங்களின் மீது வினாவிடை வடிவத்தில் எழுதப்பட்டது.

3. வேதசரித்திரம் (1818)

வாட் என்பவர் எழுதிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு

4. சுவிசேஷச் சமரசம் (1820)

இந்நூல் ஏழுபாகங்களை உடையது. முதல் பாகத்தில் கிறிஸ்துநாதர் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் விளக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

இறுதியாக ஏழாம் பாகத்தில் அப்போஸ்தலர் காலம் முதல் 18ஆம் நூற்றாண்டு முடிவுவரை கிறிஸ்து மார்க்க வியாபக சரித்திரமும், இரட்சகரின் இரண்டாம் வருகையும், நியாயத்தீர்ப்பின் உறுதியும் எழுதப்பட்டுள்ளன.

5. ஞானப்போதிப்பு

ஞானஸ்நானத்துக்குத் தம்மை ஆயத்தப்படுத்துவோர் கற்கவேண்டிய

வேதாகம சித்தாந்த - கிறிஸ்தவச் சன்மார்க்க வினா விடைகள்.

6. சீர்தூக்கல் (1831)

"திருச்சபையும் அதன் பணிப்பெண்களும்" என்ற நூல்பற்றிய மதிப்பீடு.

7. கிறிஸ்து மார்க்க நிச்சயித்துவம் : (1834) 1852ல் மறுபதிப்பு.

319 பக்கங்கள் கொண்ட சிறந்த நூல்

8. தெய்வீக சாராம்சம் (1838)

இரேனியஸ் காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன்பு இந்நூல் எழுதப்பட்டது. 39 பக்கங்கள் உள்ள இந்நூல் 1842 இல் மறுபதிப்பானது.

9. வேதாகமத் துணைநூல்

பிக்கர்ஸ் டெத் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு.

10. 1. எபிரேய இலக்கணம் (தமிழில்)
 2. பூகோள சாஸ்திரம் (தமிழில்)
 3. தமிழ் இலக்கணம் (தமிழில்)
 4. சிற்றறிஞர் குறிப்பிடம் (தமிழில்)
 5. சரித்திரம் (தமிழில்)
 6. தர்க்கம் (logic) (தமிழில்)
 7. தமிழ் இலக்கணம் (ஆங்கிலத்தில்)
 8. வேதாகம முடிவுரை (தமிழில்)
 9. புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு (தமிழில்)
 10. பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு (தமிழில்)
 11. ஞான யோசனை விளக்கம் (தமிழில்)
 12. தெலுங்கு இலக்கணம், பிரஞ்சு இலக்கணம்

என்று 12 நூல்கள் - இவை தவிர நூற்றுக்கணக்கான தமிழ்த் துண்டுப் பிரசுரங்கள்

பூமி சாஸ்திரம் : கட்டமைப்பும் பிற்புலமும்

அ. கணேசன்

தமிழ்நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கமென்பது கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் தொடக்க காலமெனலாம். இக்காலத்தின் ஆட்சியமைப்புகளால் அல்லது மாற்றங்களால் படித்த மத்தியதர வர்க்கம் என்ற ஒரு சமூகப் பிரிவு புதிதாக உருவாகிக் கொண்டிருந்தது. மரபு வழிச் சாதிச் சமூகம் போலல்லாது எல்லாச் சாதியினரும் கலந்த ஓர் அமைப்பாக இது உருக்கொண்டது.

அச்சமூகத்தின் கருத்துப் பரிமாற்றத்திற்கான சாதானங்களாகப் பத்திரிகைகள், நூல்கள் முதலியன தேவையாயின. அவற்றைப் பற்பலவாய்ப் பெருக்கிப் பரப்பிட அச்சு எந்திரம் இன்றியமையாத் தேவையாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஆங்கில அரசாங்கமும் கிறித்துவ மறை பரப்புநர்களும் அச்சு எந்திர வசதியினைப் பயன்படுத்தும் உரிமை இருந்தது. சாதிக்கட்டினை மீறி அனைவரும் கல்வி கற்கலாம் என்றும் உணர்வு தோன்றியது. இந்தியா முழுமைக்கும் கல்வியும், கற்பிக்கும் பள்ளிகளும் உடனடித் தேவையாயின. இச்சூழலில்தான் 1817இல் இரேனியஸ் பாளையங்கோட்டைக்கு வருகை தந்தார்.

தமிழ் நாட்டில் முந்தைய நிலை

19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் அதற்கு முன்பும் இங்கே கல்விமுறையில்லையா? உண்டு. ஓதுதலும், ஓதுவித்தலுமாகிய பணிகளுக்குரியவர்கள் தாமே என்று கருதிக்கொண்ட பிராமணர்கள் தமது சமூகத்தினர் மட்டுமே கற்றுக்கொள்ள வேதபாடசாலைகளை வைத்திருந்தனர். இசுலாமியர்கள் மிகுந்திருந்த பகுதிகளில் 'மதரஸா' எனும் மார்க்கக் கல்விச்சாலைகள் அமைந்திருந்தன. ஆனால் பொதுக்கல்வி என்ற ஒன்று மட்டும் இல்லவே இல்லை. திண்ணைப் பள்ளிகளும், ஏட்டுப்படிப்பும், குருகுலக்கல்வியும் மேட்டுக்குடி மக்கட்குரியவாகக் கருதப்பட்டன. ஒடுக்கப்பட்டிருந்த மக்கள் திரளில் பெரும்பான்மையானவர்க்கு இவையும் எட்டாக்கனியாகவிருந்தன.

கிராமங்களில் நாட்டுப்புறக்கலை சார்ந்த வில்லுப்பாட்டு, ஏடுவாசிப்பு, கோயிலில் தலபுராணங்கூறல் போன்றவை வாய்மொழிக் கல்வியாய் செவிவாயாக, நெஞ்சுகளனாகப் பரவி நின்றன. மிகப் பெரும்பான்மை யான மக்கள் எழுத்தறிவு பெறாதவர்களாகவே இருந்தனர்.

இரேனியஸ் அடிகளாரின் நோக்கம்

கிறித்தவ சமயம் பரப்புவதை முதற்பணியாகக்கொண்ட இரேனியஸ்,

தமிழக மக்களின் மனவயலைப் பண்படுத்திட விழைந்தார். சைவ-வைணவ சமயங்களிலும் பிறவழிபாட்டு நெறிகளிலும் ஊன்றி விழுதுவிட்ட உள்ளத்தினராயிருக்கும் இம்மக்களுக்குக் கல்வியறிவோடு கிறித்தவ சமய அறிவையும் புகட்ட முனைந்தார். அப்பணிக்கு முதலில் தாம் நினைத்தவாறே இம்மக்களைப் புராணிக நம்பிக்கைகளிலிருந்து விடுபட வைக்கவேண்டுமென்றுணர்ந்தார். ஆதலின் தமிழ்ச் சமயங்கள் கூறும் உலகம் என்பது பந்தம் - கட்டு - தளை - என்ற கருத்துக்களைப் போக்கவேண்டும் என்றெண்ணினார்.

கடவுள் உலகைப் படைத்ததோடு, உலகின் நுகர்ச்சிக்காக மனிதனையும் படைத்திருப்பதனால் இனிமையாய் வாழ்ந்து பார்க்க வேண்டும். மனிதன் தன் அறிவாற்றலால் பூமியைச் சொர்க்கமாக்கிட வல்லவன். உலகு கட்டில்லாதது, பந்தம் செய்யாதது, தளையற்றது என விளக்கிக் கூறிக் கிறித்துவ சமயத்தை நிலைநாட்டப் பெருமுயற்சி மேற்கொண்டார்.

பொதுக் கல்வியின் தோற்றம்

இரேனியஸ் சீர்திருத்த சபைக்காரர். நவீன கல்வி, விஞ்ஞான அறிவு ஆகியவற்றின் பிரதிநிதிகளாக உருவானவர்கள் ஐரோப்பியச் சீர்திருத்த சபையினர். கத்தோலிக்கத்தில் துறவும், உலகமறுப்பும் ஆளுகை செலுத்தி வந்ததைச் சீர்திருத்த சபையினர் விமர்சிப்பார்கள். அடிகளார் தமது சபையின் கல்வி விஞ்ஞான அறிவை இங்கே பரப்ப முனைந்தபோது உயர்குல மக்கள், தாழ்குல மக்கள் என்ற சிக்கலைச் சந்திக்க நேர்ந்தது.

பொதுக்கல்வியில் பேரார்வம் கொண்டிருந்த இரேனியஸ் இந்து பிராமணியத்திற்கு எதிராகச் செயல்பட வேண்டியவரானார். இந்து பிராமணியத்தின் முக்கியப் பண்பு, அறிவை மக்களுக்கு அனுமதியாதிருப்பதுதான். தேடு கல்வியைத் தாராளமாக்கி அறிவைப் பெருக்குவது இந்து பிராமணியத்திற்கு எதிரான செயலாயிற்று. எனவே கல்வித்துறையைக் கைப்பற்ற வேண்டியது இரேனியசுக்குத் தலையாய பணியாயிற்று.

பொதுக்கல்வி என்பது இருவகையாக அமைகின்றது.

1. எல்லா மக்கட்குமான பொதுக்கல்வி
2. இறை - கோயில் - சமயம் சாராததான பொதுக்கல்வி.

இவற்றை ஏற்படுத்த வேண்டியவரானார் அவர். பாடசாலைகள் ஏற்படுத்தல், வேதாகமம் ஓதுதல், ஓதுவித்தல், அறிவியல் காட்டல், கிறித்துவம் பரப்பல் எனக் கல்லொன்று கனியிரண்டாய் அறிவியலோடு தம் சமயமும் பரவ வேண்டுமென்ற அவர்தம் விழைவைப் பூமி சாஸ்திரம் தெற்றெனக் காட்டுகிறது.

பொருளியல் மேதை மார்க்ஸ் கூறுவதுபோல், “முதலாளிகள், தொழில் சமூகம் பரவவேண்டுமென்று கருதுகிறபோதே மூலதனப் பரவலும்

நிகழவேண்டுமென்று விழைவர்". இரேனியசும், அப்படித்தான் அறிவியலோடு கிறித்தவமும் சேர்த்தே பரப்பிட எண்ணினார். அவர் தமிழகம் போந்த கடமையும் அதுவே. இரேனியஸ் அடிகள் சமயத்துறையில் பல திறப்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சமய எல்லைக்கு வெளியே உள்ள மக்களையும் பொதுக்கல்வியின் வளர்ச்சியினையும் மனத்தில் கொண்டு அவர் எழுதிய நூல் "பூமி சாஸ்திரம்".

நூலின் முகப்புப்பக்கத்தில் நூலின் குறிக்கோள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது: தமிழருக்கு அறிவுண்டாகும்படி. இந்நூல் கிறித்தவர்களுக்கு மட்டுமன்று, பொதுக்கல்விக்குரிய அனைத்துச் சமய மக்களுக்கும் ஐரோப்பிய நாடுகளில் பிறந்த புத்தறிவை ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் பிறந்ததாகும். இனி, பூமி சாஸ்திரம் நூலின் புறக்கட்டமைப்பினை நோக்கலாம்.

பூமி சாஸ்திரத்தின் கட்டமைப்பு

ஒரு நூலின் கட்டமைப்பினை புறக்கட்டமைப்பு அகக்கட்டமைப்பு என இரண்டாகப் பிரித்துக்காண்பார்கள். பூமி சாஸ்திரத்தின் புறக்கட்டமைப்பை முதலில் காணலாம்.

முகவுரை நீங்கலாக 728 பக்கங்களைக் கொண்டது பூமிசாஸ்திரம்.

பூமியின் தன்மை பற்றி முதலாவதாகக் கூறப்படும் செய்திகள்	- பக்கங்கள்	=	19
ஆசியாக்கண்டம்	" "	=	73
ஐரோப்பாக் கண்டம்	" "	=	442
ஆப்பிரிக்கா	" "	=	66
அமெரிக்கா - பொது	" "	=	10
வட அமெரிக்கா	" "	=	45
தென் அமெரிக்கா	" "	=	21
தென் சமுத்திரத் தீவுகள்	" "	=	10
முடிவுரை	" "	=	6
அட்டவணை	" "	=	34
பிழை திருத்தம்	" "	=	2
ஆக மொத்தப் பக்கங்கள்			728

இந்தப் பூமியிலுள்ள சில தேசத்தார் இராசாக்களாலும், சில தேசத்தார் தங்களிலிருந்து எடுத்த சங்கத்தாராலும் சில தேசத்தார் அவ்விருவராலும் ஆளப்படுகிறார் - என்று கூறுகிறார் ஆசிரியர்.

இந்த 2000-ஆம் ஆண்டில் 600 கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்டுள்ள இந்தப் பூமியில் 1913 ஆம் ஆண்டில் 100 கோடிப் பேர் இருந்ததாகக் கணக்குக் காட்டுகிறார்

கிறிஸ்தவர்கள்	= 17 ½	கோடிப்பேர்
யூதமார்க்கத்தார்	= 1	கோடிப்பேர்
முகம்மது மார்க்கத்தார்	= 16	கோடிப்பேர்
விக்கிரக ஆராதனைக்காரர்	= 65½	கோடிப்பேர்
ஆக	=100	கோடிப்பேர்

பூமி சாஸ்திரத்தில் நாடுகளின் எல்லைகள், மலைகள், நதிகள், பிரதேசங்கள், மக்களினங்கள், அவர்களில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், வரலாறு, அறிஞர், தலைவர், அரசர் போன்ற தகவல்களோடு அட்சரேகை, தீர்க்கரேகை, பருவ காலச் சூழல்களையும் சுட்டுகிறார் இரேனியஸ்.

மொழியும் நடையும்

இரேனியஸ் அடிகளார் தமிழ் நாட்டுக்கு வந்து 11 ஆண்டுகள் கழித்து கி.பி. 1825-இல் தமிழ்மொழி இலக்கணம் குறித்து நூலொன்றை எழுதியவர். 1832-இல் பூமி சாஸ்திரம் 728 பக்கங்களில் அச்சிடப்பட்டு முடிந்துள்ளது. எனவே உத்தேசமாக 1830-இல் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். தமிழ் நாட்டுக்கு வந்த 16 ஆண்டுகளில் அடிகளார் பெற்றுக்கொண்ட தமிழ்மொழிப் பயிற்சியும் தமிழிலக்கணப் பயிற்சியும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன.

பிறமொழிப் பெயர்சசொற்களைத் தமிழிலக்கண மரபுக்கேற்ப அவர் மாற்றியமைத்த முறைக்குச் சில எடுத்துக்காட்டுகள்

ரேனியஸ்	-	இரேனியஸ்
துருக்கி	-	துருக்கை
பிளேட்டோ	-	பிலாத்தோ
எகிப்து	-	எகிப்பத்து
தைமூர்	-	தீமூர்
பிரான்ஸ்	-	பிராஞ்சி

'ஜே' என்னும் ஆங்கில ஒலியினைத் தொடக்காலக் கிறித்துவ மறைபரப்புநர்கள் 'ய' கரமாகவே ஒலித்தனர் (ஜான் - யோவான், ஜேக்கப் - யாக்கோபு). இரேனியஸ் அடிகளாரோ அத்துடன் தமிழிலக்கண மரபுக்கேற்ப இகரத்தை முன்னிறுத்தி எழுதுகிறார்.

ஜப்பான்	-	யப்பான்	-	இயப்பான்
ஜமுனா	-	யமுனை	-	இயமுனை

தாம் வாழ்ந்த ஊரில் பாய்கின்ற தாமிரவருணி என வழங்கப்பெறும் ஆற்றின் பெயரைத் தாம்பிரபன்னியாறு என்கிறார். இவ்வகையில் இவர் மனோன்மணியச் சுந்தரனாருக்கு முன்னோடி எனலாம்.

ஆற்றொழுக்கான அவரது உரைநடைக்கு இரு சான்றுகள்

"மொஸ்காவு பட்டினம் முன்னே நகரியாயிருந்தது. மொஸ்காவு என்னும் ஆற்றினாலே அதற்குப் பேருண்டாயிற்று. அது மகா பெரியபட்டினம். 1802 -ஆம் வருசத்திலே பிராஞ்சி தேசத்து இராசனாகிய பொனப்பார்ட் என்பவன் அங்கே யுத்தம் பண்ணுகிறதுக்கு அநேக சேனைகளுடனே வந்தபொழுது ருசியர் அந்த சத்துருக்களுக்கு இடங்கொடாதபடிக்குத் தாங்களே யதை முழுவதும் சுட்டெரித்தார்கள்.

இனி நூலின் அகக்கட்டமைப்பினைப் பார்க்கலாம். நூலின் அகக்கட்டமைப்பு என்பது தன்னியல்பாக நிகழ்வதில்லை. நூலாசிரியரின் கருத்தியல் தளமும் சார்பு நிலையும் சேர்ந்து அதனை உருவாக்குகின்றது. அவ்வகையில் இரேனியஸ் ஒரு கிறித்தவராகவும் ஐரோப்பியராகவும் இருந்தார்.

உலகின் பல நாடுகளையும் அங்குள்ள மக்களையும் ஐரோப்பா அக்காலத்தில் எவ்வாறு நோக்கியது என்பதற்கு இந்த நூல் ஒரு சாட்சியாகும். தமிழ்நாடு, வடஇந்தியா, உலகின் பிற நாடுகள் கண்டங்கள் (ஆஸ்திரேலியா தவிர) ஆகியன பற்றிய கருத்துகளைக் கூறியவாறே நூலினை நடத்திச் செல்கிறார் அவர்.

இந்துமதப் பிடிப்பும் அசைப்பும்

இருபது ஆண்டுக்காலம் தமிழ்நாட்டில் வாழ்ந்த அடிகளார் தமிழ்ச் சமூகத்தின் அடிக்கட்டுமானத்தைச் சரியாகப் புரிந்து கொண்டவர். நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட சமய உணர்வுகள் அழுத்தமானவை. அம்மக்கள் தத்தம் வாழ்விடங்களையே உலகென்று கருதுவோர். உழப்படும் நிலனும், வளந்தரு நீரும், அவ்வந் நிலத்துச் சிறு தெய்வங்களும் (இசக்கியம்மன், சுடலைமாடன் போல்வன) அவர்களால் உயிரினும் மேலாய்க் கருதப்பெறுபவை. எந்தையும் தாயும் அவர்தம் முன்னையரும் விழைந்து தொழுதவற்றை "யாமும் வழுத்துவோம்" என்னும் அற்றிடாப் பற்றுடையார். அம்மக்களின் புனித பூகோளவியலைச் (Sacred Geography) சற்றே அசைக்கவாவது செய்தால்தான் கிறித்தவ சமயத்தை ஊன்றி வைக்க இயலும் என்பதை நன்குணர்ந்த இரேனியஸ் அடிகள் உள்நாட்டுச் சமய நம்பிக்கைகளை அறிவியலில் சார்த்திக் காட்டிப் பகுத்தறிவை - சீர்திருத்த உணர்வை - ஊட்டிட முற்பட்டார். அதன் காரணமாகத்தான் பூமி சாஸ்திரத்தில்,

"......... ஆகாச விரிவிலே இருக்கிற பூமி முதலானவைகள் யானைகளினாலாவது ஆதிசேடனாலாவது தாங்கப்படாததாய் இருந்தால் அந்தரத்திலே எப்படி நிற்குமென்றால் பராபரன்

கொடுத்த முறைப்படி.......... சின்னப் பொருளானது பெரிய பொருளாலே இழுத்துக் கொள்ளப்பட்டு விழாதபடி காக்கப்படுகின்றது. அப்படி இழுத்துக்கொள்கிற பலத்தினாலே சூரியனுக்கு மிகவும் சிறிதான பூமி முதலானவை தகுதியான நிலையில் நிற்குமட்டும் சூரியனாலே இழுத்துக் கொள்ளப்படுகின்றன......"

இந்தப்பூமி ஆதிசேடன் என்னும் பாம்பாலும் அட்டதிக்கஜங்கள் எனும் யானைகள் எட்டாலும் தாங்கப் பெறுவதாய்க் கூறும் இந்து மதப் புராணியத்தைச் சற்று அச்சத்தோடே ஆசிரியர் ஆட்டிப் பார்க்கின்ற நிலை இதில் தெரிகிறது.

ஆசியாக் கண்டம்

மற்ற கண்டங்களைப் பார்க்கிலும் ஆசியாக் கண்டம் மிகுந்த பொன், வெள்ளி, இரத்தினங்கள், சரக்குகள் முதலானவைகள் உள்ளது. அல்லாமலும் அதிலே பரமன் முதன்மையான மனிதரை உண்டாக்கினார்..... உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நாதர் பிறந்து, மனிதர்களுடைய பாவங்களை நிவர்த்தி செய்தார்..... ஆகையால் ஆசியாக் கண்டம் மிகவும் மேன்மையாயிருக்கின்றது என்கிறார்.

இந்து தேசம் பற்றிய வரலாற்றில்

நாம் மற்ற உலக சரித்திரத்தோடு ஒத்துப் பார்க்கிற பொழுது, இந்து தேச சரித்திரம் கட்டுக்கதையாகத் தோன்றுகிறது. அல்லாமலும் சமீப காலத்தைக் குறித்து ஒரு சரித்திரமும் இல்லை ஆனபடியினாலே முந்தின காலத்தைக் குறித்துச் சொல்லியிருக்கிற சரித்திரம் மிகவும் சந்தேகமுள்ளது என்கிறார் ஆசிரியர்.

> "அந்த நதியின் சலம் மிகவும் பரிசுத்தமாய்ப் பாவங்களை நீக்குகிறதென்று இந்து தேசத்தார், புத்தியீனமாய் நினைத்து மிகுதியாய் அங்கே போய் ஸ்நானம் பண்ணுகிறார்கள்"

என்கிறார்

இந்து தேச மக்களின் புனித நம்பிக்கையை மறுதலிக்கிறார்.

இந்து தேசத்துச் சத்தியவரதனே 'nova' என்னும் மன்னன் என்று ஆசிரியர் கூறும் செய்தி விளக்கமாயில்லை.

பிராமணிய எதிர்ப்பைத் தெரிவிக்க ஆசிரியர், "வடதிசையிலுள்ள கல்தேய நாட்டிலிருந்து இந்து தேசத்திற்கு வந்து ... சோதிடக்கலையைப் பரப்பி, விக்கிரகாராதனையைச் சிறப்பாக்கி, பிரம்மா, விட்டு, உருத்திரன் என்பவர்களையும் அவர்களுடைய மனைவி பிள்ளை முதலானவர்களையும் குறித்துப் பற்பல கதைகளைக் கட்டிக்கொண்டு தங்களைப் பிராமணரென்றும், கர்த்தாக்களென்றும், தேசர்களென்றும் மேன்மைப்படுத்திக் குடிகளையும், இராசாக்களையும்

தேவன்போல் ஆண்டுகொண்டு வந்தார்கள்" என்று சுட்டுகின்றார். பிராமணர்கள் இந்தியாவுக்கு வந்தேறு குடிகள் என்னும் கருத்தைப் பதிவு செய்த முதல் தமிழ் நூல் இதுவே ஆகவேண்டும்.

இசுலாமியச் சமய விமரிசனம்

அரபு நாட்டைப் பற்றிய விளக்கம் அளிக்கும் இரேனியஸ் அடிகள் இசுலாமிய சமயத்தாரை மிக வன்மையாக விமர்சிக்கிறார். அக்காலத்து வழக்கப்படி இசுலாம் என்ற சொல்லாட்சிக்குப் பதிலாக முகமது மார்க்கம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். மெக்காவிலே பிறந்த முகமது நபியைக் குறித்து "கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் உண்டான வேதத்தை எடுத்துத் தன் இஷ்டப்படிக்கு அதிலிருந்து சரித்திரங்களை எடுத்துப்பல கட்டுக்கதைகளைக் கூட்டிக் "கொறான் எனப்பட்ட வேதமுண்டாக்கினார்" என்று கிறித்தவராகப் பேசும் இரேனியஸ், "முன்பு அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களாயிருந்தார்கள். பின்பு அவர்களும் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணிக் கொண்டிருந்த அநேக யூதர்களும் முகம்மது மார்க்கத்தரானார்கள்...." என்று இசுலாமிய சமயத்தின் வளர்ச்சியைக் குறிப்பிட்டு, துருக்கைத் தேசத்து முகம்மது மார்க்கத்தார் அநேகம் ஸ்தீரிகளை மணப்பதையும், அச்சமய இராசாக்கள் 'ஆரெம்' எனப்பட்ட அரண்மனையில் எண்ணற்ற பெண்டிரை அடைத்து வைத்திருந்ததையும் கூறுகிறார்.

கஜினி முகம்மது

கிஸீசி தேசத்து இராசாவான முகமது என்பவனும், அவனுக்குப் பின் வந்த இராசாக்களும் இந்துதேசத்து ராசாக்களோடு யுத்தம் பண்ணிச் செயம் கொண்டு திரளான சனங்களை வெட்டி, அநேக நாடுகளைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு, கோயில்களில் உண்டான பொன், வெள்ளி சொரூபங்களையும், இரத்தினங்கள் முதலான அநேக திரவியங்களையும் கொள்ளையிட்டுக் கொண்டு போனார்கள் எனக் கஜினி முகம்மது அடித்த கொள்ளையைச் சுட்டுகிறார். திப்புசுல்தானைப் பற்றிப் பேசுகின்ற ஆசிரியர் "அவன் அதிகபராக்கிரம சாலியாகி இங்கிலீசுக்காரர்களுக்கும் ஒல்லாண்டுக்காரருக்கும் அநேகம் தொந்தரவுகளைச் செய்தான்" - என்கிறார்.

சாக்ரடீஸ்

கிரேக்க நாட்டைப் பற்றிப் பேசும் இடத்தில் சோக்கிர்த்தெஸ் என்று சாக்ரடீசைக் குறிப்பிடும் இரேனியஸ், அவரைப் "சாதுர்யப் பேச்சுக்காரன், சன்மார்க்கன், ஞானி", என்றெல்லாம் புகழ்ந்த பின்பு "அவன் சிவவாக்கியரைப் போல் அநேக தேவர்கள் உண்டென்பதைக் குறித்துப் பரிகாசம் பண்ணினான்" என்கிறார். இரேனியஸ் வாழ்ந்த காலப் பகுதியில் பலதெய்வ வணக்கத்தை மறுப்பதற்குச் சித்தர்களின் பாடல்கள் பயன்பட்டன என்று தெரிகிறது.

வால்டேரும் ரூசோவும்

பிரான்சு முதலான தேசத்தார் மாத்திரம் கிறிஸ்துவின் ஒளியை எண்ணாமல் பாப்பு மதத்தின் (கத்தோலிக்க கிறித்தவ மதத்தின்) இருளில் கிடக்கின்றனர் என்கிறார் இரேனியஸ். சமுதாய ஒப்பந்தம் கண்ட ரூசோவும் புரட்சி வித்தூன்றிய வால்டேரையும்,

"........ அதுவுமல்லாமற் பிராஞ்சி தேசத்திலே கெட்டிக்காரராகிய சில கல்விமான்கள் சத்திய சுவிசேசத்தின் தன்மையையறியாமற் பாப்புமார்க்கத்தின் வம்புகளை அரோசித்துக் கிறிஸ்துமார்க்கத்தை அசட்டை பண்ணி அவிசுவாசத்திற்கு இடங்கொடுத்தார்கள். 18-ஆம் நூற்றாண்டிலே வொல்த்தேர், தாலெம்பர்த்து, ரூசோ முதலானவர்கள் அப்படிப்பட்ட யோசனைகளைக் கொண்டு கிறிஸ்து மார்க்கம் வம்பானதென்றும் சுவிசேஷம் பொய்யானதென்றும் கிறிஸ்து நாதர் வஞ்சகனென்றும் சகலத்தையும் அறியும் படிக்கு நம்முடைய அறிவு போதுமென்றும்..... இப்படிப்பட்ட பொல்லாத பேச்சுக்களை அலங்காரமாய் எழுதிப் பிரசித்தம் பண்ணினார்கள் என்று விளக்குகிறார் இரேனியஸ் கடிவாளமில்லாத குதிரைகளைப்போல் அதிகதுஷ்டர்கள் ஆனார்கள்........" என்று குறைகாண்கிறார்.

ருசிய தேசம்

இரேனியஸ் அடிகளாரின் அருளுள்ளத்தினை இத்தேசத்தின் வரலாற்றின் தொடக்கத்தில் காணலாம். பெற்றோராலும் மற்றோராலும் கைவிடப்பட்ட குழந்தைகளின் அவல நிலைகளைப் பலவிடங்களிலும் ஆசிரியர் கண்டிருக்கக்கூடும். ஆதலின் மொஸ்காவு பட்டணத்தைப் பற்றிப் பேசும்போது

"..... திக்கற்ற குழந்தைகளை அடக்கிக் கொள்ளும் 'தருமவீடும்' (அனாதை ஆசிரமம்) அந்நாளில் இருக்கின்றது" என்ற செய்தியைத் தெரிவிக்கிறார். ஆப்பிரிக்காக் கண்டம் பற்றிய முகப்புரையில் இங்கே..... பொன்னும், யானையின் தந்தமும் மிகுதியாயிருக்கின்றன. குடிகள் அதிகபுத்தியும் அறிவும் சாக்கிரதையும் உள்ளவர்களாய் இருபார்களானால், அந்தப்பூமி மற்றப் பதார்த்தங்களையும் செழிப்பாய்ப் பிறக்கும்....." என்ற உலகளாவிய நலக்கருத்தை வெளியிடுகிறார்.

சீனதேசம்

1913-ல் சீனதேசத்தில் 39 கோடிப்பேர் இருந்திருக்கிறார்கள். விக்கிரக ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் பல தேவர்கள் மேல் பத்தியாயிருந்து பலப்பல மார்க்கமாய் நடக்கிறார்கள். அவர்கள் வீணான செய்கைகளை மிகவும் பற்றி வருகிறார்கள். மெய்யான தேவனை அறியாமலிருக்கிறார்கள் என்ற அளவில் நிறுத்தாமல், சீனத் தேசத்தார் மிகவும் கபடமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் - என்றும் கூறுகிறார் ஆசிரியர்

கன்பூசியஸ்

கொங்பூட்சி என்பவனிருந்தான். அவன் மிகவும் விவேகம் உடையவனாய் இந்து தேசத்தாருக்கு மனுவென்னும் மகாமுனி செய்தது போலச் சீன தேசத்தார்க்கு "நீதி சாஸ்திரத்தை" உண்டு பண்ணினான் என்று கூறுவதிலிருந்து நீதி சாத்திரம் புகன்ற மனுவை, மகாமுனி என்று எப்படியோ ஒப்புக் கொள்கிறார் ரேனியஸ்.

திபேத்துத் தேசம்

திபேத்துக் குடிகள் சற்றே கறுப்பு வண்ணமுடையவர்கள். அவர்கள் மெய்யான தேவனையறியாமல், ஒரு மனிதனைப் பிரதான ஆசாரியனாய் வைத்து அவனைத் தேவன் என்றெண்ணி நமஸ்காரம் பண்ணுகிறார்கள். அந்தப் பிரதான ஆசாரியனுக்குத் "தாலாயிலாமா" என்று பெயரெனச் சொல்கிறார்.

ஆப்பிரிக்கக் கண்டம்

பூர்வீகக் குடிகள் பற்றிய விரிவான செய்திகள் இல்லை. அனால் ஐக்கிய அமெரிக்கத் தேசத்தில் பூர்வீகக் குடிகளாய் இருந்தவர்கள் துஷ்டர்களே என்றும் சுட்டுகிறார்.

கம்பெனி ஆட்சி

நாடு கொள்ளும் ஆசையால், குறுநில மன்னர்களையும் சிற்றரசர்களையும் ஏமாற்றி அடிமைப்படுத்திய ஆங்கிலேயரின் செயலைப் பற்றி ஆசிரியர் கூறும்போது, "இங்கிலீசுக்காரர், பொர்த்துக்கீசுக்காரர், பிரெஞ்சுக்காரர் போன்றோர் இங்கிருந்து கொண்டு, இராசாக்களுக்கிடையே (வரி செலுத்திக்கொண்டு வாழுமாறு) சமாதானம் செய்து வைத்தனர்" என்று சமாதானம் சொல்கிறார்.

பிரிட்டிஷ் தீவுகள்

பற்றிப் பேசும்போதும் ஆசிரியர்,

அவர்கள் ஐரோப்பியர்கள் வணிகத்தில் கெட்டிக்காரர்கள், அறிவாளிகள், விஞ்ஞான அறிவுக்காரர்கள், விஸ்தாரமான தொழில்களைச் செய்கிறவர்கள். பார்லிமெண்ட் ஆளுகை முறையறிந்தவர்கள், நீதியமைப்புச் செய்கிறவர்கள் .... என அடுக்கிக் கொண்டே செல்கிறார்.

ஐரோப்பிய மேலாண்மை வாதம்

பூமி சாஸ்திரத்தின் 728 பக்கங்களில் 442 பக்கங்கள் ஐரோப்பாக் கண்டத்தை வளைத்திருக்கின்றன. மூன்றில் இரண்டு பங்கு பக்கங்கள் அந்தக் கண்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

17 ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை "இரட்சிப்பு" வழங்கும் கண்டமாய் ஐரோப்பாவும், இரட்சிப்புப் பெறுவனவாய் மற்றைய கண்டங்களும் இருப்பதாய்க் காட்டப்பெறுகிறது. ஐரோப்பாக்காரர்கள்

- இங்கிலீசுக்காரர்கள் உலகத்திற்கு எசமானர்கள் என்ற கருத்து முயற்சிகளுக்குப் பூமி சாஸ்திரமும் அரண் செய்யும் கருவியோ என்ற ஐயம் வாசகர்க்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது.

"அன்றியும் இந்தச் சரித்திரங்களைப் பார்க்கிறபொழுது ஐரோப்பாக் கண்டம் சிறியதாயிருந்தும் அந்தக் கண்டத்தார் மற்ற யாவரிலும் அதிக புத்தியும் விவேகமும் வல்லமையுமுள்ளவர்களாய் உலகத்திற்கு எசமான்களாய் இருக்கிறார்களென்றும், அவர்களில் விசேஷமாய் இங்கிலீஸ்காரர் நுழையாத தேசமொன்றும் இல்லையென்றும் தோன்றுகின்றது. அவர்களினம் அநேகத் தீமைகளைச் செய்கிறவர்களாயிருந்தும் அவர்கள் பிரவேசிக்கிற தேசமேதோ அது அவர்களாலே பல நீதிகளையும் ஒழுங்குகளையும் யோக்கியத்தையும் மற்றும் அநேக நன்மைகளையும் பெற்றுக் கொள்ளுகின்றதென்கிறதற்குச் சந்தேகமில்லை. அந்த மேன்மை ஐரோப்பாக் கண்டத்தாருக்கு எப்படிக் கிடைத்தது. கிறிஸ்து மார்க்கத்தினாலே அன்றி வேறுவிதமாய் அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை" என்று தெளிவாகவே குறிப்பிடுகிறார் இரேனியஸ் அடிகளார்.

"ஓரியண்டலிசம்" என்ற நூல் எழுதிய எட்வர்டு சையது என்பார். ஐரோப்பாவை மையங்கொண்டு ஓர் அறிவு உலகை இயக்கி வருகிறது. பொதுக் கல்வியிலும் ஓர் அரசியல் புகுந்து ஆள்கிறது. இன்றும் கல்விச் சாலைகளில், ஓரியண்டலிசம் (கீழைத்தேயம் பற்றிய படிப்பு) என்ற துறை நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது" என்கிறார்.

ஐரோப்பியர்கள் - இங்கிலீசுக்காரர்கள் - உலகத்திற்கு எசமானர்கள் என்பதும் பள்ளிக்கூடங்கள் சத்தியபோதனைச்சாலைகள் என்பதும் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதனை இலைமறை காயாகவும், ஊடுபாவாகவும் பூமி சாஸ்திரத்தில் காணலாம். பூமிக்கு ஐரோப்பிய நாடுகளால்தான் நல்வழி காட்ட முடியும் என்ற மேலாண்மை உணர்வு இரேனியஸ் அடிகளாருக்கு மட்டுமன்று, பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பியர்கள் அனைவருக்கும் பொதுவாக இருந்தது என்பதனை வரலாறு காட்டுகின்றது.

இரேனியஸ் இந்த நாட்டின் பழஞ்சமயவாதிகளின் எதிர்ப்பையும், தலைமைச் சபையின் எதிர்ப்பையும் ஒரு சேர எதிர்கொண்டவராய் இருந்தும், "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனத் தொண்டாற்றினர்.

சமயப் பணி மட்டும் புரியாமல் சமூகப் பணி, பெண்கள் விடுதலைப் பணி, 'காலரா' நோய்த்தடுப்பு கட்டுரை வழங்கிய எழுத்துப்பணி எனப் பன்முகப் பணிகளை அசுரவேகத்தில் அவர் ஆற்றிய முறை தலைமைக்கே வியப்பாக அமைந்திருக்கலாம். இருப்பினும் தமது "பூமி சாஸ்திரம்" நூலின்வழி தமிழ்நாட்டின் பொதுக்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு அவர் அடிக்கல் நாட்டிய பெருந்தகை என்பதே அனைவராலும் நினைக்கப்படுவதாகும்.

இரேனியஸ் அடிகளாரின் இந்திய வருகைக்கான காரணமும் நோக்கமும் கிறித்தவ மதத்தைப் பரப்பவேண்டும் என்பதே. ஆனால் ஐரோப்பியத் தொழிற்புரட்சியின் விளைவுகளும், அறிவொளிக் காலத்தின் பாதிப்பும் அவரது சிந்தனைகளை வெகுவாகப் பாதித்தன. தொழிற்புரட்சியின் பின்விளைவாக ஐரோப்பியர் பூமியின் கீழ்த்திசை நாடுகளைக் கண்டறிந்தது. ஐரோப்பியரின் அதிகாரத்தையும் அறிவுலகத்தையும் விரிவு செய்தது. கத்தோலிக்கத்தின் துறவு நெறிக்கும் உலக மறுப்புக்கும் எதிரான சீர்திருத்தச் சபையாரின் சிந்தனைகள் விரிவடைந்தன. குறிப்பாக பூமியின் பரப்பு, விரிவு, மக்கள் வகை, பூமிக்கும் பிறகோள்களுக்குமான தொடர்பு ஆகியவை குறித்த அறிவு விரிவு பெற்றது.

பதினெட்டாம் நூற்றாண்டு ஐரோப்பியரின் பயண அனுபவங்களும், தத்துவமும், அச்சியந்திரத்தின் வழியாக நூல்களாக வெளிப்பட்டன. அவ்வெளிப்பாடுகளில் ஒன்றான பூமி சாஸ்திரம் தமிழ்நாட்டுப் புதுக்கல்வியுலகில் முதல் கதிராகப் பாய்ந்தது எனில் மிகையாகாது.

மொழிபெயர்ப்பாளர் இரேனியஸ்

சரோஜினி பாக்கியமுத்து

மொழிபெயர்ப்பு என்பது ஒரு தலைசிறந்த இணைப்புப்பாலம். அனைத்து மொழிகளின் அறிவுத் துறைகளையும் அனைத்துப் பிறமொழிகளுக்கும் கொணர்ந்து சேர்க்கக் கூடியது. வேற்றுப் பண்பாடுகளைப் புரிந்து கொள்ள வழிவகுத்து நாடுகளிடையே ஒருமைப்பாட்டை வளர்த்து உலக ஒற்றுமைக்கு அடித்தளம் அமைக்க வல்லது.

மிகப் பழங்காலத்திலிருந்தே பிராகிருதங்கள், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளினின்று தமிழுக்குப் பல கருவூலங்கள் வந்து சேர்ந்துள்ளன. நாம் இன்று மூலமொழி நூல் என்று சொல்வது முதல் நூல் என்றும் இலக்கு மொழி நூல் என்பது வழி நூல் என்றும் அறியப்பட்டன. அவை பெரும்பாலும் தழுவல்களாக இருந்து இலக்கு மொழிபெயர்ப்பாளனின் கற்பனைத்திறனுக்கு சிறந்த இடம் தந்தன. இன்று மொழிபெயர்ப்பு என்று அறியப்படுவது மொழியாக்கம் என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆக்கம் என்ற சொல் படைப்புத் திறனைக் குறிக்கும்.

நாம் ஒருவரிடம் பேச்சு மூலம் தொடர்பு கொள்வதும் ஒருவகை மொழிபெயர்ப்புத்தான். மனத்தில் எழும் எண்ணங்களை சொற்களாகப் பெயர்த்துத் தான் வெளியிடுகிறோம். அப்படிப் பார்க்கையில், இசை, ஓவியம், சிற்பம், போன்ற கலைகள் அனைத்துமே மொழிபெயர்ப்புத்தான். நம் மனத்தின் அனுபவம் அனைத்தையும் முழுமையாக, தெளிவாக, வெளிப்படுத்திவிடுவது சாத்தியமானதல்ல. அப்படியே மூலமொழி ஒன்றில் இருப்பதை பிறிதொரு இலக்கு மொழியில் ஆக்குவதும் அரிதான செயலே. எனவே தான் மொழிபெயர்ப்பு என்பது பொன்னைச் செம்பாக்கும் காரியம்; மூலத்துக்குத் துரோகம் செய்வது தான் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆயினும், உலகின் பிற பண்பாடுகளோடு நாம் உறவாடுவது இன்றியமையாததலால், அப்பண்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், நம்மை வளப்படுத்திக் கொள்ளவும் மொழியாக்கம் இன்றியமையாததாகிறது. அந்தவகையில் தான் கிறிஸ்தவ வேதமும் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகிறது. வேதாகமம் மனிதனின் ஆன்மீக வேட்கையைத் தீர்க்கவும், வாழ்க்கையின் அழகைக் காட்டி அதன் அர்த்தத்தை விளக்கவும் வல்லதாய், மனுக்குலத்தினரிடையே ஒரு பொதுமை உணர்வையும் ஏற்படுத்தித் தருகிறது.

தென்னிந்தியாவில் நவீன காலக்கிறிஸ்தவம் போர்ச்சுகீசியருடன் தான் தொடங்குகிறது. கத்தோலிக்கரான போர்ச்சுகீசியர் தென்னிந்தியா

வந்திறங்கி (1498), 17-ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை இங்கு ஏகபோக வணிகம் செய்து வந்த நாட்களில், கத்தோலிக்க சமயத் தொண்டர்களும் தமிழகம் வந்து, தங்கள் சமயத்தைத் தமிழர்களுக்கு அறிமுகம் செய்வித்து, வேதாகமப் பகுதிகள், செபங்கள், மற்றும் சமய நூல்களை மொழிபெயர்த்தனர். தமிழ் இலக்கணம் கற்ற என்றிக்ஸ் என்றி என்ற ஏசுசபைத்துறவி (1520-1600) 660 பக்கம் கொண்ட ஃபிலாஸ் சான்க்டோரம் என்ற நூலை போர்ச்சுசீசிய மொழியிலிருந்து முத்துக்குளித்துறை மக்கள் வழக்கிலிருந்த உரைநடையில் மொழிபெயர்த்து அச்சுமேற்றியதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்[1]. கற்றோர் உரைநடையை ஒரு பொருட்டாக எண்ணாத காலம் அது. தமிழில் உரைநடைக்கு மட்டுமல்ல மொழிபெயர்ப்பு, அச்சு எல்லாவற்றுக்கும் அதுவே தொடக்கமாகும்.

அதன் பின்னர் ராபர்ட் டிநோபிலி (1577-1656) என்ற ஏசுசபைத்துறவி சமஸ்கிருதம் கலந்த தமிழில் ஏராளமான நூல்கள் படைத்தார் இவர் மொழிபெயர்த்ததாக தெரியவில்லை. இவர் நூல்கள் அச்சும் ஏறவில்லை. ஆயினும் உரைநடை வளர இவர் நூல்கள் உதவின. கிறிஸ்தவ சமயம் இந்தியமயமாகவும் இவர் உதவினார்.

மேற்சொன்ன கத்தோலிக்க சமய நூல்கள் பெரும்பாலும் குருமார் உபதேசிமார் உபயோகத்துக்கென எழுதப்பட்டவை. 18-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் டேனியர்(டென்மார்க்) காலனியான தரங்கம்பாடியி லிருந்து புராட்டாஸ்தாந்திய லூத்தரன் சமயத் தொண்டர்கள் தங்கள் பணியைத்தொடங்கியபோது மொழிபெயர்ப்புப் பணி புதிய எழுச்சி பெற்றது. இறைவார்த்தை அனைத்து மட்ட மக்களையும் சென்றடைய வேண்டும்; குருமார் மூலமாக அல்ல, எல்லா மக்களும் நேரடியாக அதை வாசித்தறிய வேண்டும் என்ற கொள்கையை அந்த லூத்தரன் சீர்திருத்த சபை கொண்டிருந்தது. அந்த வகையில் ஜெர்மானியரான சீகன்பால்கு தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத்தேறி, கிரேக்க புதிய ஏற்பாட்டைத் தமிழ் வசனநடையில் மொழிபெயர்த்து அச்சேற்றுவித்து, மேலோர் கீழோர் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்தார். சீகன்பால்கு தென்னிந்திய சமயம், சமுதாயம் குறித்தும் நூல்கள் எழுதினார். ஆகவே அவர் முதல் இந்தியவியலாளருங்கூட......[2] கற்றோர், சீகன்பால்குவின் வேதத்தைக் கண்டுகொள்ளவில்லை, தமிழ்ப் பேரறிஞரும் வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்டவருமான பெஸ்கியும்,[3] தென்னிந்தியப் பண்பாட்டறிஞர் அபிதுபாயும்,[4] இவர் வேதத்தை உயர்வாகக் கருத வில்லையாயினும், இவ்வேதம் தமிழகத்தில் ஒரு சலசலப்பைத் துவக்கி விட்டது, மயிலை சீனி வேங்கடசாமி மொழியில் சொல்வதானால் தோட்டி முதல் தொண்டமான் வரை' வேதம் படிக்கலாம் என்ற நிலை உருவாகத் தொடங்கியது உண்மை[5]. அடுத்துவந்த பப்ரிஷியஸ் (1710-1791) பன்மொழிப் புலமைவரம் பெற்றிருந்தவர். இவரும் சீர்திருத்த லூத்தரன் சபையைச் சேர்ந்த ஜெர்மானியரே. இவர் சீகன்பால்குவின் புதிய ஏற்பாட்டைத் திருத்தி, பழைய ஏற்பாட்டை எபிரேயத்தினின்று முழுமையாக மொழி பெயர்த்து, அச்சிடுவித்து, அரிய சாதனை படைத்தார்[6]. செய்யுள் யுகம் அஸ்தமித்து, சனநாயகத்தை வளர்த்

தெடுக்கும் உரைநடை யுகம், வளரப் பெரிதும் காரணமாக இருந்தவர் இவர். இவர் தமிழ் அகராதி மற்றும் ஏராளமான பக்திப் பாடல்களும் செய்தார்.

பல்வேறு இன்னல்களுக்கிடையே பணிசெய்து கிடந்த இந்த இரு தரங்கம்பாடி மாமொழி பெயர்ப்பாளர்களின் பணி விரித்துரைக்கப்பட வேண்டிய தொன்றாயினும், இப்போதைக்கு எனது தலைப்பு இரேனியஸின் மொழிபெயர்ப்புப் பணி என்பதால் அவர்களைப் பற்றி முன்னுரையாக மட்டுமே சொல்லிவிட்டு மேலே போக வேண்டியுள்ளது.

மேற்சொன்னவர்களைப்போல இரேனியஸூம் ஜெர்மானியர் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லுவதுண்டு. ஆனால் ஜெர்மனி அப்போது ஒரு நாடாக இல்லை. பல குறுநிலங்கள் தான் இருந்தன. சார்ல்ஸ் தியோபிலஸ் ஈவால்டு இரேனியஸ் ப்ரஷியாவைச் (Prussia) சேர்ந்த கிராடன்ஸில் 1790-ம் ஆண்டு நவம்பர் 5ம் நாள் பிறந்தார். தந்தை காலாட்படையில் அதிகாரி, 7 வயதில் தந்தையை இழந்த இரேனியஸ் 14 வயதில் பள்ளிப்படிப்பை முடித்து தமது பெற்றோரின் உடன்பிறந்தாருடன் வேலையில் அமர்ந்தார். பெரிய தந்தை அவரிடம் மிகவும் அன்பு செலுத்தினார். 17ம் வயதில் இரேனியஸ் ஒரு தெய்வீக அனுபவம் கிடைப்பெற்றார். விளைவாக மிஷனெரித் தொண்டு புரியவேண்டுமென்று ஆர்வம் கொண்டு, பெர்லின் சென்று, இறையியல் கல்வியும், மிஷனெரிப் பயிற்சியும் பெற்று, லூத்தரன் குருவாக அபிஷேகம் பெற்றார்[7].

இவர் லூத்தரன் குருவாக இருந்தபோதிலும், இங்கிலாந்தின் ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த சர்ச்சு மிஷனெரி சங்கத்தினர் (சி.எம்.எஸ்) இவரைத் தங்கள் மிஷனெரியாக இந்தியாவுக்கு அனுப்பினர். 1813-ல் தான் கிழக்கிந்தியக் கம்பெனி தன் பிராந்தியங்களில் மிஷனெரிகள் பணிபுரியலாமென அனுமதி தந்திருந்தது. 1814-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரேனியஸ் தமிழகம் வந்து சேர்ந்தார். இங்கிலாந்தின் ஆங்கிலிக்கன் திருச்சபையும் புராட்டஸ்தாந்தியப் பெருஞ்சபைதான் என்றாலும், ஜெர்மானியில் உருவாகி எழுந்த சீர்திருத்தசபைப் பிரிவுகள் முற்றிலும் வேறானவை. கிறிஸ்து நம்பிக்கை, வேதாகம அடிப்படை, இறையருள், விசுவாச உறுதி, ஆகியவற்றில் அச்சபையினர் மிகத்தீவிரப்பிடிப்புடன் இயங்கினர், நாட்டுப்பற்றை விடவும், இறைப்பற்று மிகுதி. எனவேதான் லூத்தரன் மிஷனெரிகள் அர்ப்பண சிந்தையும், மக்கள் பால் கரிசனமும், கொள்கைத் தீவிரமும் உடையவராய், முழுமூச்சாய்ப் பணியாற்றினர். இரேனியஸ் ஐரோப்பாவின் தொழிற்புரட்சி, சமுதாய மாற்றங்கள், விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றையும் உன்னிப்பாக கவனித்திருந்தார்.

கம்பெனியின் அனுமதியுடன் இங்கிலாந்து திருச்சபை இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டது. மிடில்டன் என்பவரை பேராயராகவும் அது அனுப்பி வைத்தது. அவர் அப்போதைய தலைநகரமான கல்கத்தாவில் வந்திறங்கி, சூயஸ் கால்வாய் தொடங்கி ஆஸ்திரேலியா வரை சமயக்கோலோச்சத் தொடங்கினார். பிரித்தானிய சமயத்

தொண்டர்களும், பல்வேறு இந்தியப்பகுதிகளுக்குள் முதன்முறையாகக் காலடி எடுத்து வைத்தனர். மேனாட்டுக் கல்வியையும், குறிப்பாக ஆங்கிலத்தையும், ஆங்கிலிக்கள் கிறிஸ்தவ சமயத்தையும் பரப்புவதை அவர்கள் நோக்கமாகக் கொண்டனர். நாட்டுப்பற்று அவர்களிடம் மிகத் தீவிரமாக இருந்தது.

இரேனியஸ் சிலகாலம் தரங்கம்பாடியில் கல்விப்பணி செய்தும், தமிழ் கற்றுமிருந்து, பின்பு சென்னை வந்தார். அங்கு அவர் அனிவான்சோமரன் என்ற டச்சுப் பெண்மணியைத் திருமணம் புரிந்தார். இரேனியஸ் சிறந்த பேச்சாளராகவும், மொழிகளில் பாண்டித்தியம் கொண்டவராகவும், தீவிர உழைப்பாற்றலுடையவராகவும் இருந்தார். புதிய பள்ளிகள் பல தொடங்கினார். சுவிசேடப் பணியில் வெற்றிகளைக் குவித்தார். துண்டுப் பிரசுரங்கள் வெளியிடத் தொடங்கினார். 1817-ல் சர்வதேச வேதாகம சங்கத்தின் ஒரு கிளையை சென்னையில் நிறுவ முன்னின்று உழைத்தார். 1815ல் பப்ரிஷியஸின் வேத மொழிபெயர்ப்பைத் திருத்தத் தொடங்கினார்.

சி.எம்.எஸ். சங்கத்தாருக்கும் இரேனியஸுக்குமிடையே கருத்தொற்றுமை நிலவவில்லை. இரேனியஸ் பிரசுரித்த துண்டுப் பிரசுரங்கள் பற்றி சங்கத்தார் குற்றங்கள் சாட்டினர்[8]. இரேனியஸ் தாழ்ந்த குலச்சிறுவரையும் பள்ளியில் சேர்ப்பதே கிறிஸ்தவ தருமம் என நம்பினார். மேலும் அவர் தொடங்கிய சமயத்துண்டுப் பிரசுரசங்கத்தில் ஐரோப்பியரில் அனைத்து வர்க்கத்தினரையும், இந்தியரில் அனைத்து சாதியினரையும் சேர்த்தார்[9]. இப்படிப் பல வேறுபாடுகள் தோன்றவே சங்கம் அவரை அகற்ற விரும்பியது. கிளாரிந்தாவும் ஸ்வார்ட்ஸும் நிறுவிய நெல்லைத் திருச்சபை அப்போது நலிவுற்றிருந்ததால் அங்கு பணியாற்றிய இராணுவ குரு ஜேம்ஸ் ஹௌ அங்கு ஒரு மிஷனெரி அனுப்பபடல் வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார். சங்கமும் இரேனியஸை அனுப்பி வைத்துவிட்டது.

1820ம் ஆண்டு ஜூலை 7 ஆம் தேதி இரேனியஸ் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். முருகன்குறிச்சி அவர் தொழில்மையம் ஆனது. அடுத்த ஆண்டு அவரது பிரிய நண்பரும், திராவிடக்குடும்பமொழிகள் பற்றி கால்டுவெல்லுக்கு முன்பாகவே கருத்துச் சொன்னவருமான பெர்னார்டு ஷ்மிட் அவருடன் வந்து சேர்ந்து கொண்டார். இரேனியஸ் சுவிசேடப் பணியில் பேராற்றலுடன் இறங்கினார். யாத்திரிகர் என்றழைக்கப்பட்ட பயிற்சி பெற்ற சுவிசேடகர்களை இரண்டிரண்டு பேராக ஊர்களெங்கும் அனுப்பினார். தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள், குறிப்பாக சாணார் சமூகத்தவர் திரள் திரளாக வந்து சபையில் சேர்ந்தனர். இது ஒரு சமுதாயப் புரட்சியே ஆகும். சாணார் சமூகத்தவர் தமிழகத்தின் சாதி அமைப்புக்குள் முற்றிலுமாக இருந்தவரல்லர். அவர்களுக்கு பாளையக்காரர் என்று சொல்லப்பட்ட ஆந்திர நாயக்க ஜமீன்தாரர்களால் கொடுமைகள் இருந்தன. கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய அதிகாரிகளும் பிறமேல்சாதிக்காரரும் துன்பங்கள் விளைவித்து வந்தனர். சாணார்களுக்குக் கல்வி, செவ்வியல் சமயம் மீது நாட்டம் இருந்து வந்தது.

சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தது. மிஷனெரிகள் அறிமுகப்படுத்திய புதிய சமயத்தில் அவர்கள் சேர விரும்பினர். சாணார் மட்டுமல்ல ஆதிதிராவிடரும், பிள்ளைமாரும் கூட திருச்சபையில் சேர்ந்தனர். இரேனியஸ் அனைவரையும் சரிசமமாக நடத்துவதில் கவனமாக இருந்தது வந்தார். காலத்தின் போக்குகளை ஊன்றிக் கவனித்த இரேனியஸ் தீர்க்கதரிசனத்துடனும் மக்கள் பால் பரிவுடனும் செயல்பட்டார். நெல்லையில் முன்னூற்றுக்குமதிகமான கிறிஸ்தவக் குடியேற்றங்கள் தோன்றின. கோயிலோடு பள்ளியும் தொடங்கியது. 1822 ல் வேதாகம துண்டுப்பிரசுர சங்கம் தொடங்கினார். 10. ஆயிரக்கணக்கில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. இவை தொடக்கக் கல்வி பெற்றவரின் வாசிப்புத் தேவையை நிறைவேற்றின. பெண்களும் அவற்றை வாசித்தனர்.

இரேனியஸ் சென்னையில் இருக்கும்போது சித்தாம்பூர், செடிப்பேடு ஆகிய ஊர்களிலிருந்த சமண பண்டிதர்களுடன் வேதாகமம் குறித்து உரையாடியிருந்தார். அந்தணர், பௌத்தர் ஆகியோருடன் கலந்துரையாடும் வழக்கத்தையும் கொண்டிருந்தார். இப்போது நெல்லையில் தொடக்கக்கல்வி கற்ற புதுக்கிறிஸ்தவர்களின் தேவையையும் கண்டறிந்தார். இவர்களை எல்லாம் மனத்தில் கொண்டே அவர் தமது வேதாகம மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வகுத்தார். இவை குறித்து ஒரு நூலும் எழுதியிருக்கிறார். 58 பக்கங்கள் கொண்ட அதன் தலைப்பு An Essay on the Principles of Translating the Holy Scriptures, with critical remarks on Various Passages, Particularly in reference to the Tamul Language.(1827) என்பது, இந்நூல் வேதாகம மொழிபெயர்ப்பாளர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மொழிபெயர்ப்பாளர்களுக்கும் ஒரு அடிப்படை நூலாக இன்றும் பயன்படக்கூடியது.

பண்டிதர்களுக்குங்கூட பப்ரிஷியஸ் வேதாகமம் புரியக் கடினமாகவே இருந்தது. வேதத்தில் கண்ட கிறிஸ்தவக் கருத்துக்கள் புதியவை என்பது மட்டுமல்லாமல், வேதம் சொல்மட்டத்தில் (literal) மொழி பெயர்க்கப்பட்டிருந்ததும் முக்கியக் காரணம் என்பதை இரேனியஸ் அறிந்தார். மூலமொழிகளான எபிரேயமும் கிரேக்கமும் முற்றிலும் வேற்றுக் குடும்ப மொழிகளாதலால், அவை தமிழினின்றும் மிகவும் வேறுபட்டிருந்தன. அப்பண்பாடுகளும் வித்தியாசமானவை. எனவே வேதத்தை சொல்மட்டத்தில் மொழிபெயர்க்காமல், கருத்துக்களைக் கிரகித்து, பின்பு தமிழ் மரபு வழக்குகளில் வெளியிடல் அவசியம் என உணர்ந்தார். வேதாகமத்தின் முதல் பிரிவான பழைய ஏற்பாட்டின் நூல்கள் இன்றைக்கு சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிய பழைய எபிரேய மொழியில் எழுதப்பட்டவை. இரண்டாவது பிரிவான புதிய ஏற்பாடு கி.பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். வேதமொழிகளுக்கும் தமிழுக்கும் சொல் வரிசையிலேயே வேறுபாடு உண்டு. பின்வரும் எபிரேய வசனம் அதன் மரபு வரிசையில் ஆங்கிலத்தில் தரப்படுகிறது.

My son, do not reject your mother's teaching இதை இந்த வரிசையிலேயே தமிழாக்கினால் என் மகனே தள்ளாதே உன் தாயின் போதகத்தை என்று வரும். இவ்வரிசை தமிழுக்கு இயல்பானதல்ல.

என் மகனே உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே என்பதே சரியாக இருக்கும்.

எந்த மொழிக்கும் இயல்பாக ஒரு சொல்வரிசை இருக்கும். மொழிக்கு மொழி இலக்கணங்கள் வேறானவை ஆதலாலும், பண்பாட்டை ஒட்டியே மொழிகள் வளர்வதாலும் அந்தந்த மொழிக்கென்று தனியான மரபு வழக்குகளும் ஏற்பட்டுவிடும். பண்பாடு மாறமாற அந்த வழக்குகளும் மாறும். இது ஆங்கிலத்தில் இடியம் எனப்படுகிறது. எனவே ஒரு மொழிபெயர்ப்பாளன், மூலம், இலக்கு இரண்டின் இடியம்களையும் கவனமாக ஆராய்வது அவசியம். தமது மொழிபெயர்ப்புக் கொள்கைகள் என்ற நூலில் இரேனியஸ் இக்கருத்தை வலியுறுத்துகிறார். இக்கட்டுரையில் சொல்லப்படும் எடுத்துக்காட்டுகள் எல்லாமே அந்நூலினின்று பெறப்பட்டவை தான்.

முதலாவதாக அவர் தமிழின் தொன்மை பற்றிக் கூறுகிறார். தமிழின் பழமைக்கு இணையாக ஐரோப்பாவில் மொழிகள் இல்லை என்கிறார். இலக்கியம், இலக்கணம், நிகண்டுகள் கண்டதும், நாள்பட்ட வழக்குகளை உடையதுமான தமிழில் சொல்வழி மொழிபெயர்ப்பு செய்வது சரி ஆகாது. ஆனால் வளர்ச்சி பெறாத மொழிகளில் சொல்வழி மொழிபெயர்ப்புச் செய்யலாமென அவர் கருதுகிறார். ஆங்கிலம், ஜெர்மானியம் ஆகிய மொழிகளில் வேதம் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் இந்த மொழிகள் அதிக வளர்ச்சி அடையாமல் இருந்தமையால் சொல்வழி மொழிபெயர்ப்பு நன்கு எடுபட்டுக் கொண்டது. பழம்பெரும் மொழியாகிய தமிழில் சொல்வழி மொழி பெயர்த்தால், வேதம் புரிந்து கொள்ளப்படாது என்பது மட்டுமல்ல, தவறாகவும் புரிந்து கொள்ளப்படலாம்.

கருத்து மொழிபெயர்ப்பில் சொற்களையும் சொற்றொடர்களையும் மட்டுமல்ல, வாக்கியங்களையும் முன்னும் பின்னுமாய் மாற்றியமைக்க வேண்டிவரும். எபிரேயத்தில் ஒரு நிகழ்ச்சியின் முடிவை முதலில் சொல்லிவிட்டு, அதற்குக் காரணமான நிகழ்ச்சிகளைப் பின்னால் சொல்வது மரபு. உதாரணம். மத். 6 : 20,21

20: பரலோகத்தில் உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

21 : உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கின்றதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். (இது எபிரேய வரிசை) தமிழ் மரபுப்படி

21 : உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் (ஆதலால்)

20: பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். என்று வரும்

இன்னுமொரு உதாரணம். மாற்கு. 8 : 33.

எனக்குப் பின்னாகப் போக சாத்தானே நீ தேவனுக்கேற்றவை களைச் சிந்தியாமல் மனுஷருக்குக் கேற்றவைகளைச் சிந்திக்கிறாய். இது எபிரேய மரபு - தமிழ் மரபு வரிசைப்படி சொல்வதானால் வாக்கியங்கள் மாறவேண்டும்.

நீ தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவை களைச் சிந்திக்கிறாய். (ஆதலால்)

எனக்குப் பின்னாகப் போ சாத்தானே என்றிருக்கவேண்டும்.

அடுத்ததாக கிரேக்க மொழியில் Paranthesis என்பபடுவது. இதைத் தமிழில் இடைக்கூற்று என்று சொல்லலாம்.

யோ : 2:9 ஏசு தண்ணீரை திராட்சரசமாக மாற்றிய நிகழ்ச்சியில் திராட்சைரசம் எங்கேயிருந்து வந்தது என்பது தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததே அன்றி என்பது இடைக்கூற்று. எபிரேய வரிசைப்படி இது 9 ஆம் வசனத்தொடக்கத்தில் சொல்லப்பட்டு விட்டது. அது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. 10ம் வசனத்தில் வரும் ஆனால் நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்று கூற்றுக்குப் பின்னரே 'திராட்சைரசம் எங்கேயிருந்து வந்ததென்பது....' வரவேண்டும். அப்போது தெளிவு கூடும். மூலவரிசைகளை மாற்றத் தயங்கினால் தெளிவுகிடைக்காது.

எபிரேயம் வளம் மிகுந்த மொழி என்று சொல்லிவிடமுடியாது. உதாரணமாக மாமிசம், உடல், உணவுக்குப் பயன்படும் இறைச்சி, மனிதர், மனுக்குலம், உடலெடுத்த அனைத்து உயிரிகள், ஆன்மிகம் என்ற சொல்லுக்கு எதிர்பதமாக இப்படிப் பலவற்றைக் குறிக்க ஒரே சொல் தான் உண்டு. சந்தர்ப்பத்தை கவனியாமல் மாமிசம் என்ற ஒரே சமன்பாட்டைப் பயன்படுத்தியிருப்பது சரியல்ல.

எபிரேயத்தில் இன்னொரு சொல் பிள்ளை, மகன், புத்திரன் பேரப் பிள்ளைகள், வழித்தோன்றிய சந்ததியார், பெற்றோரின் குணாதிசயங் களைக் கொண்டவர் என்று பல அர்த்தங்களைத் தரும். சந்தர்ப்பத்தை கவனித்துப் பொருத்தமான சமன்பாடுகளைப் போடவேண்டும். தமிழ் வேதாகமத்தில் காணப்படும் இருட்டின் புத்திரன், கேட்டின் மகன், எகிப்தின் புத்திரர், இடிமுழக்கத்தின் மக்கள் ஆகியன தமிழ் வழக்குகளுக்கு ஒத்துவருவன அல்ல என்று சுட்டிக்காட்டுகிறார்.

தன் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் என்றிருப்பது இஸ்ரவேல் வம்சத்தாரில் ஒருவன் என்றிருப்பதே தமிழ் வழக்காகும். 'ஊராரின் மனிதருடைய குமாரத்திகள்' என்றிருந்ததை இரேனியஸ் 'ஊராரின் பெண்கள்' என்று மாற்றினார்.

'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்பது 'உம்முடைய ஆளுகை வருவதாக' என்றிருக்க வேண்டும். ஏனெனில் இவ்விடத்தில் ராஜ்யம் பூகோள ராச்சியத்தைக் குறிப்பதல்ல. (சங் 145 :13 ல் உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக உள்ளது என்பது சரியாகவே இருக்கிறது)

லூக். 13:13 'தேவனை மகிமைப்படுத்துகிறது' என்பது சரி அல்ல. தேவனை மகிமைப்படுத்த கேவலம். மனிதன் யார்? எனவே தேவனைத் துதிக்க அல்லது அவர் மகிமையை விளங்கப்பண்ண என்றிருக்க வேண்டும். மத் 2:2 'அவருடைய நட்சத்திரம்' என்பது 'அவரிடம் வழிநடத்திச் செல்லத் தோன்றிய நட்சத்திரம்' என்றிருக்கவேண்டும். இல்லையெனில் 'ஜென்ம நட்சத்திரம்' என்று தமிழர்கள் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடும்.

ரோ. 1:17, 3:21 தேவநீதி என்பது சரி அல்ல. தேவன் ஒப்புக் கொள்ளக்கூடிய நீதி? என்றிருக்க வேண்டும். இல்லையெனில் வேதனுடைய குணங்களில் நீதி ஒன்று என்று தவறாக அர்த்தப்படுத்தப் படலாம். (மத். 6: 33 'முதலாவது தேவனுடைய நீதியைத் தேடுங்கள்' என்பது சரியாக இருக்கிறது) மற்றும் சங். 45:7 ஆனந்த தைலம் என்பது ஆனந்தமென்னும் தைலம் என்றும்,. யோ. 6:58 ஜீவ அப்பம் என்பது ஜீவனைக் கொடுக்கிற அப்பம் என்றும் இருக்க வேண்டும் என்கிறார்.

a, the என்ற இடைச்சொற்கள், "articles, தமிழில் கிடையாது. யோ.7:40 ஆங்கில வேதாகமத்தில் (A.V) This is the Prophet என்பதை அழுத்தம் தருவதற்காக 'மெய்யாகவே இவர் தீர்க்கதரிசி' என்று மொழி பெயர்த்திருப்பது சரி அல்ல; குறிக்கப்பட்ட அல்லது முன்னறிவிக்கப் பட்ட தீர்க்கதரிசி என்றிருக்க வேண்டும் என்கிறார். இப்படியாக உருபு மயக்கம், முக்கிய வினைச்சொல்லைக் கண்டுபிடிக்க இயலாததால் விளைகின்ற குழப்பம், மூல மொழியில் தொக்கி நிற்பனவற்றை தமிழில் போதிய அளவு விளக்காமல் விடுவது, கடந்தகால, நிகழ்கால, வருங்கால குழப்பங்கள் என்று ஏராளமான குழப்பங்களை அவர் காட்டுகிறார். உதாரணமாக. யோவ :10 :8 ல் 'எனக்கு முன்னே வந்தவர்கள் எல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறீர்கள்' என்று நிகழ்காலத்திலிருப்பது 'இருந்தார்கள்' என்று இறந்த காலத்தில் இருக்க வேண்டும். இவையெல்லாம் சொல்வழி மொழிபெயர்த்திருப்பதால் ஏற்படுகின்ற விளைவுகளே. மூலமொழியின் கருத்தை உள்வாங்கி இலக்கு மொழியின் மரபு வழக்குகளில் வெளியிடுகின்ற கருத்துமொழிபெயர்ப்பே புரிவதற்கு எளிதாகும் என விளக்குகிறார்.

தமக்குத் தமிழ் மரபுவழக்குகள் எளிதில் அத்துபடியான காரணத்தையும் கூறுகிறார். ஆங்கிலம் அறவே அறியாத தமிழ்ப் பண்டிதர் நெல்லை திருப்பாற்கடல்நாதனிடம் தாம் தமிழ் பயின்றமையால் தான் மரபுவழக்குகள் படிந்தன எனச் சொல்லுகிறார். அவர் எழுதிய 300 பக்கங்கள் கொண்ட இலக்கண நூலில் அவர் சொல்லிக்கணம், எழுத்திலக்கணம் இரண்டிலும் ஐரோப்பிய இலக்கண முறையைப் பின்பற்றாமல் தமிழ் இலக்கண முறையைப் பின்பற்றினார். எனவே

அதைக் கற்ற ஐரோப்பிய மாணவர் தமிழைத் தமிழ் மரபிலேயே படித்துக் கொள்ள ஏதுவாக இருந்தது.

'கிறிஸ்தவத் தமிழ்' என்றொரு கேலிச் சொல் உண்டு. எபிரேய, கிரேக்க சொல்வரிசைகள், சொற் சேர்க்கைகள், சொற்றொடர்கள், வாக்கிய அமைப்புக்கள் முதலியவற்றைத் தமிழிலும் பயன்படுத்துவதுதான் கிறிஸ்தவத் தமிழ். வேதாகமம் அத்தகைய தமிழில் இருப்பதால் அதை ஊன்றிப் படிக்கின்ற கிறிஸ்தவர்களுக்கும் அந்தத் தமிழ் வந்துவிடுகிறது. சொல்வழி மொழிபெயர்ப்பில் அமைந்த பப்ரிஷியஸின் வேதாகமமே கிறிஸ்தவத் தமிழுக்குக் காரணம் என சபாபதி குலேந்திரன், 12 திலியாண்டர்[13] ஆகிய இருவரும் கூறுகின்றனர்.

சபாபதி குலேந்திரனுக்குத் தமது தமிழ் வேதாகமத்தின் வரலாறு' என்ற அரிய ஆராய்ச்சி நூலை கிறிஸ்தவத் தமிழில் தான் எழுத முடிந்திருக்கிறது. 'வேதாகமத்தின் வரலாறு' என்ற தலைப்பே கிறிஸ்தவத் தமிழாக உள்ளது. தமிழ் வேதாகம வரலாறு என்பது தான் தமிழ் மரபு வழக்கு. History of the Tamil Bible என்ற சொற்றொடரில் உள்ள of the என்ற உருபு 'இன்' என்று மொழிபெயர்க்கப்பட்டு 'வேதாகமத்தின்' என்று ஆகியிருக்கிறது.

இரேனியஸின் மற்றொரு முக்கிய கொள்கை நடை பற்றியது. தமிழ் உரைநடைக்கு இலக்கிய அந்தஸ்து இல்லாததாலும், அது போதிய வளர்ச்சியடைந்திராததாலும், கல்வி ஒரு சிலரின் ஏகபோகமாக இருந்ததாலும் உரைநடை பற்றிய குழப்பம் அவர் காலத்தில் மிகுந்திருந்தது. இதுபோதாதென்று வீரமாமுனிவர் 10ம் நூற்றாண்டு உரைகாரர் உரைநடையை 18ம் நூற்றாண்டில் பழக்கத்துக்குக் கொண்டு வந்திருந்தார். பண்டிதர் சிலர் அதை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டனர். அந்நடை வேதாகம மொழிபெயர்ப்புக்கு ஏற்றதல்ல என இரேனியஸ் முடிவு செய்தார். ஆனால் பேசுந்தமிழை அப்படியே எடுத்துக் கொண்டால் அதுவும் நல்லநடையாகாது என உணர்ந்தார். எனவே இலக்கணப்படுத்தப்பட்டதும், கொச்சை நீக்கப்பட்டதும், சந்தி பிரிக்கப்பட்டதும், மரபுத் தமிழ் வழக்குகள் பாதுகாக்கப்பட்டதுமான ஒரு பேச்சு நடையில் அவர் வேதமொழிபெயர்ப்புச் செய்தார். கற்றோர் களிக்கும் வகையிலும் மற்றோர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் நடை அமையவேண்டும் என்பது அவர் கருத்து. இத்தகைய நடையில் தான் படைப்பிலக்கியமும் சாத்தியமாகும்.

இரேனியஸ் சொந்தமாகவும் இந்நடையில் பல நூல்கள் எழுதினார். பிரித்தானிய ஆட்சியில் அப்போது ஆங்கிலத்தைப் புகுத்துவதும், இந்திய மொழிகளைப் புறக்கணிப்பதும் நடக்கத் தொடங்கியிருந்தது. ஆனால் இரேனியஸ் கல்வியின் பயிற்றுமொழி தாய் மொழியாக இருக்க வேண்டுமெனக் கருத்துக் கொண்டிருந்தார். பல பாடநூல்கள் தமிழில் எழுதினார். முதன்முறையாக தமிழில் பாடநூல்கள் எழுதியது அவர் தான். அதுபோல சந்திபிரிக்கப்பட்ட சொற்றொடர்களை முதன் முதலாக பரவலாக அறிமுகப்படுத்தியதும் அவர்தான்.

இரேனியஸின் மொழிபெயர்ப்பில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய இன்னொன்று மரியாதைப் பன்மைப் பிரயோகம் அகும். அதாவது வேதாகமத்தில் சொல்லப்படுகிற பெரியோரை ஏகவசனமாய் ஒருமையில் குறிப்பிடாமல் தமிழ் மரபுப்படி மரியாதைப் பன்மையில் குறிப்பிடுவதாகும். ஆனால் அவர் மொழிபெயர்ப்பைப் பரிசோதித்த ஆங்கிலிக்கன் குருமார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழின் மரியாதைக் குறியீடுகள் அச்சமுதாயத்துப் பெருந்தலைகளின் ஆணவ அகம்பாவத்தின் விளைவுகள்தாம்; அவற்றை வேதாகம பாத்திரங்கள் மீது சுமத்தினால் அவற்றை நிரந்தரப்படுத்துவது போலாகும் என குழுவினர் வாதிட்டனர்[14]. ஆணவ அகம்பாவம் பற்றி அவர்கள் கூறியது உண்மையே. அவர்கள் கூற்றில் தார்மீக வலு உள்ளது என்பது மறுக்கமுடியாதது. மேல்சாதியினர் கீழ்சாதியினருக்கு இழைத்த கொடுமைகளை மொழியின்மீதும் ஏற்றினர். தேவையற்ற மரியாதைப் பன்மைகள் மொழியைக் காயப்படுத்திய நிரந்தரவடுக்கள். வடக்கன் குளத்துத் திருச்சபையில் 19ம் நூற்றாண்டில் நடந்த சாதியப் போராட்டத்தைக் குறித்து ஜே. எஸ். தேவசகாயம் பிள்ளை பின்வருமாறு எழுதுகிறார். "வெள்ளாளரில் எந்தப் பையனுங்கூட சாணாரில் எந்தச் சீமானையும் பார்த்து ஏகவசனமாய்ப் பேசுவதே இயல்பு" இதுதான் அன்றைய நிலைமை. இந்தப் பழக்கம் ஏற்பட்டு ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டதால் அப்பழக்கத்தைப் பேச்சிலும், எழுத்திலும், இலக்கியத்திலும் ஒப்புக்கொண்டு சீரணித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு நாம் தள்ளப்பட்டுவிட்டோம்.

ஆயினும் மரியாதைக் குறியீடுகளைச் சேர்ப்பதே சரியாகும் என இரேனியஸ் கருதினார். எழுதப்படுவது எதுவும் புரிந்து கொள்ளப் படுவதற்காகத் தான், சரியோ, தவறே ஒரு சமுதாயத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் புழக்கத்தில் இருக்கும் வழக்குகளை நீக்கினால் புரிதல் முற்றாக நிகழாது என்பது அவரது வாதம். உதாரணமாக நாம் இன்று பயன்படுத்தும் ஹென்ரி பவர் வேதாகமம் மோசேயை 'அவன் , இவன், என்று தான் குறிப்பிடுகிறது. "கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள்? என்று மோசே கேட்டான்" என்று ஏகவசனத்தில் இருக்கிறது. ' எகிப்து நாட்டில் பலதலைமுறைகளாக அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர் என்ற பெரும் மக்கட்தொகுதியை விடுவித்து அவர்களை 40 வருஷமாய் வனாந்தரத்தில் நடத்தி வந்த ஒரு பெருந்தலைவர் மோசே. அவரை ஒருமையில் குறிப்பிட்டால் தமிழர்கள் அந்த மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியையும் மோசேயின் தீரச்செயலையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் போகும் அல்லவா?

அடுத்து வேதாகமம் மூலமொழிகளினின்றே மொழியாக்கம் பெறவேண்டும் என்பதும் இரேனியஸின் கொள்கையாகும். பிரித்தானிய சாம்ராச்சியத்துக்குட்பட்ட நாடுகளிலெல்லாம் அப்போது வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டு வந்தது. மொழிபெயர்ப்பாளர்களுக்கு மூலமொழிகளான எபிரேயத்திலும் கிரேக்கத்திலும் அறிவு இல்லையானால் அவர்கள் பெரும்பாலும் ஆங்கில வேதாகமத்தினின்று

மொழிபெயர்ப்பு நடத்தினர். இது நேரடி மொழிபெயர்ப்பு அல்ல. ஒரு மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பாகும். ஒரு மொழிபெயர்ப்பு ஒரு நாளும் மூலத்துக்குச் சமமாகாது. எந்த ஒரு மொழிபெயர்ப்பும் குறைபாடு உள்ளதாகவே இருக்கும். எனவே ஒரு மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பு கூடுதல் குறைபாடுகள் உள்ளதாகிவிடும். ஆயினும் வேறுவழி இல்லாத பட்சத்தில் துணை நூல்கள், வேதவிளக்க நூல்கள், அகராதிகள் ஆகியவற்றின் துணையோடு வேதவாஞ்சை மிக்க ஒரு அறிவாளி நல்ல மொழிபெயர்ப்பைச் செய்வதும் சாத்தியமே என்கிறார்.

இப்போது சாகித்திய அகாதமி முதலிய நிறுவனங்களில் இந்திய மாநில மொழிகளுக்கிடையே கூட நேரடி மொழிபெயர்ப்பு எப்போதும் நடப்பதில்லை. இடைப்பட்ட, பெரும்பாலும், ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து செய்யும் மொழிபெயர்ப்பாகவே மாநில மொழியாக்கங்கள் அமைய நேர்கிறது.

அடுத்ததாக, பிழைதிருத்தம் பற்றிய கொள்கை. ஜேம்ஸ் அரசன் (1611) ஆங்கில ஆக்கம், மார்ட்டின் லூத்தரின் ஜெர்மானிய ஆக்கம் முதலியவற்றில் பிழைகளும், பாடபேதங்களும் மலிந்திருந்தன. இரேனியஸின் காலத்தில் பல பழைய தோல்பிரதிகளும், பாப்பிரஸுகளும் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, வேத அறிஞர்கள் அந்த வேதங்களில் கண்ட பிழைகளைச் சுட்டிக் காட்டத் தொடங்கினர். தமிழில் செய்யப்பட்டு வருகிற வேதாகமம் பிழைகள் திருத்தப்பட்ட வாசகங்களை உடையனவாக இருக்கவேண்டுமென இரேனியஸ் விரும்பினார். அல்லவெனில் ஒளியை மறைப்பது போலாகும் என எடுத்துக்கூறினார். ஆனால் குழுவினர் அவர் சொல்லை ஏற்கவில்லை.

இரேனியஸின் வேதம் பொழிப்புரையாக உள்ளது எனவும் குழுவினர் கூறினர். வேறு பண்பாட்டைச் சேர்ந்த இலக்கு மொழியில் பெயர்க்கும் போது சில வாசகங்களை விரித்துரைக்க வேண்டி வந்திருக்கலாம்; ஆனால் தாம் பொழிப்புரை செய்யவில்லை என இரேனியஸ் பதில் கூறினார். தமது கருத்தை நிலைநாட்ட சில உதாரணங்களும் தருகிறார்.

எபிரேய மூலத்திலிருந்து தமிழுக்கு:

சொல்வழி மொழிபெயர்ப்பு : ஈசாக்கு அன்பு காட்டினான் ஏசா. ஏனெனில் மானிறைச்சி அவன் வாயில்.

கருத்து மொழிபெயர்ப்பு : ஈசாக்கு ஏசாவிடம் அன்பு காட்டினான். ஏனெனில் ஈசாக்கு உண்பதற்கு ஏசா மானிறைச்சி கொணர்ந்தான்.

பொழிப்புரை : ஈசாக்கு யாக்கோபைப் பார்க்கிலும் ஏசாவிடம் அதிக அன்பு கொண்டிருந்தான். ஏனெனில் வேட்டைக்காரனான ஏசா ஈசாக்குவுக்கு மிகப் பிடித்தமான மானிறைச்சி கொணர்ந்து தந்து கொண்டிருந்தான். இப்படியாக சரியான மொழிபெயர்ப்புக்கும் பொழிப்புரைக்கும் உள்ள வேறுபாட்டை அவர் குழுவினருக்கு எடுத்துக் காட்ட வேண்டியதிருந்தது.

இரேனியசுக்கும் அவரது நண்பர் பெர்னார்டு ஷ்மிட்டுக்கும் தூய தமிழ் பற்றிய கருத்துகள் இருந்தன என்றே தோன்றுகிறது. பப்ரிஷியஸின் மொழிபெயர்ப்பில் காணப்படும் சில சொற்களை இரேனியஸ் திருத்தியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக

<u>பப்ரிஷியஸ்</u>	<u>இரேனியஸ்</u>
இந்தலோகம்	இவ்வுலகம்
பஷா	பஸ்கா
வெளிச்சம்	ஒளி
இரகசிய அறிவிப்பு	வெளிப்படுத்தின விசேஷம்

ஜெர்மானியரான ஷ்மிட் இரேனியசோடு இணைந்து பத்தாண்டுகள் நெல்லையில் பணிபுரிந்தார். ஜெர்மானியில் அப்போது மொழியியல் குறித்த ஆராய்ச்சியில் ஆர்வம் தொடங்கியிருந்தது. ஷ்மிட் தென்னிந்தியா எங்கும் சுற்றிப் பார்த்தவர். நடந்தும், குதிரை மீதும் பயணித்த அவர் மக்களோடு பேசிப்பழகி அவர்கள் மொழிகளை அறிந்து கொண்டார். தமிழர் குறித்தும் தமிழ்மொழி குறித்தும் அவர் சில கருத்துகளை வெளியிட்டார்.

இரேனியஸ் ஒரு நாட்குறிப்பேடு எழுதி வந்தார் அவர் காலமான பின்பு அவர் மகன் அதில் கண்ட பல தகவல்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டார். நூலின் தலைப்பு Memoir of C.T.E.Rhenius by His son என்பது. அந்நூலில் பெர்னார்ட் ஷ்மிட்டின் மொழி குறித்த கண்டுபிடிப்புகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஷ்மிட் கூறியது: தென்னிந்திய மொழிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. அவை சமஸ்கிருதத்தினின்று வேறுபட்டவை. தமிழ் சமஸ்கிருதத்தைச் சார்ந்த ஒரு மொழி அல்ல. அதன் சொற்களும், இலக்கணமும், வாக்கிய அமைப்பும், சமஸ்கிருதத்தினின்று முற்றிலும் மாறுபடுவது. தமிழ்மொழி காகேசியன் மற்றும் இமாலய மக்களின் மொழியிலிருந்தே வந்திருக்க வேண்டும். இக்கருக்களை கால்டுவெல் தமது Comparative Grammer (ஒப்பிலக்கணம்) என்ற புகழ்மிக்க நூலை வெளியிடுவதற்கு முன்பே சொல்லப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இலத்தீனுக்கும் தமிழுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது என்றும், தமிழர்கள் ஆதியில் பௌத்தர்களாக இருந்தனர் என்றும் ஷ்மிட் கூறியுள்ளதாக அந்த நாட்குறிப்பு நூல் தெரிவிக்கின்றது.

இரேனியஸின் மொழிபெயர்ப்பை அடுத்து இலங்கை ஆறுமுக நாவலரின் உதவியுடன் வெளியிடப்பட்ட பரிசோதனைப் பதிப்பு என்று வழங்கப்பட்ட ஒரு வேதாகமதிருத்தம் வெளிவந்தது. இதில் ஆறுமுக நாவலர் மிகுதியாக சமஸ்கிருதச் சொற்களைச் சேர்த்திருக்கிறார் என்ற காரணத்தைக் கூறி சென்னை வேதாகம சங்கம் அந்த திருத்தத்தையும் நிராகரித்துவிட்டது. தமிழ் நாட்டில் தனித்தமிழ் இயக்கத்தின் நதிமூலம் இதுவேயாகும்.

மொழி என்பது ஒரு மாபெரும் சக்தி. மூலமொழிக்கும் இலக்கு மொழிக்கும் மிகுதியான வேறுபாடுகள் இருந்தாலும்கூட, இதற்கு முன்பு இலக்குமொழியில் இல்லாத புதுமையான படிமங்களாயினும் குறியீடுகளாயினும் அவற்றையும் துல்லியமாகக் கொணர்ந்துவிடக்கூடிய திறன் மொழிக்கு உண்டு. மொழி என்பதன் மேதாவிலாசம் அது என மொழி பெயர்ப்பு வல்லுனர் டாக்டர் E. A. நைடா கூறுகிறார். 16 மூலமொழி, இலக்குமொழி இரண்டிலும் நல்ல புலமையும் தேர்ச்சியும் உடையவர்கள் மொழிபெயர்த்தால், மொழிபெயர்ப்பு மூலம் போலவே அமையக்கூடும். ஒரு வேத மொழிபெயர்ப்பாளருக்குரிய திறமைகள் இரேனியஸிக்கு இயல்பாகவே வாய்த்திருந்தன. மொழிபெயர்ப்புக் கலையை ஒரு வரமாகப் பெற்றிருந்தார். பப்ரிஷியசின் வேதாகமத்தைத் திருத்தியமைத்தபோது, அவர் ஒரு சிறந்த தமிழ் உரைநடையை தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்தார். முந்தைய மொழிபெயர்ப்பை அவர் திருத்தினார் என்பதை விடவும், ஒரு புதிய மொழிபெயர்ப்பை அவர் செய்தார் என்பதே பொருத்தமாக இருக்கும். எபிரேயம், கிரேக்கம், லத்தீன், ஆகிய வேத மொழிகளுடன் நவீன ஐரோப்பிய மொழிகளிலும் அவருக்கு நல்ல புலமை இருந்தது. தமிழில் சொந்தமாக நூல்கள் எழுதிய தேர்ச்சியும் இருந்தது. உலகின் பலவிடங்களில் நடந்து வந்த வேதாகம மொழிபெயர்ப்புகள் குறித்து வேதாகம சங்கங்கள் வெளியிட்ட அறிக்கைகள் மூலம் அறிந்து வந்தார். இறையியல் ஞானமும் இருந்தது. மொழிபெயர்க்க எடுத்துக் கொள்ளும் நூல்மீது மொழிபெயர்ப்பாளனுக்கு தீவிரப்பற்றுவேண்டும். இரேனியசுக்கு வேதவாஞ்சை அதிகம். வேதத்தை ஒளி, ஜீவவார்த்தை என்று பலவிடங்களில் குறிப்பிடுகிறார். நான்கு சுவிசேடங்களும் அப்போஸ்தலர் நடபடிகளும் கொண்டிருந்த அவரது புதியஏற்பாடு மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டது. 1825ல் 10000 பிரதிகளும் 1827ல் மீண்டும் 5000 பிரதிகளும் அச்சடிக்கப்பட்டன. சுமார் 20 ஆண்டுகள் கழித்து மறுபதிப்புகளும் வந்தன.

இரேனியஸ் 1838ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் நாள் தமது 48வது வயதில் உயிர் நீத்தார். அவர் இறக்கும் முன் எழுதிய கடைசிக் கடிதம் வேதாகமப் பிரசுரிப்புக்கு நிதியுதவி கேட்டு எழுதியது தான்.

குறிப்புகள்

1. ஆசிரியர் வைத்த தலைப்பு அழிந்துவிட்டதால் அண்டிறிக்ஸ் அடிகளார் இயற்றிய Flos Sanctorum என்ற நூல் 'அடியார் வரலாறு' என்ற தலைப்பில் ச.இராசமாணிக்கம் சே.ச. அவர்கள் மீண்டும் பதிப்பித்தது. தமிழ்இலக்கியக் கழகம். 1967.

2. E. Arno Lehmann, It began at Tranquebar (translated from German)CLS 1956. ch XV.

3. Bror. Tiliander : Christian and Hindu Terminology. Uppasala 1974 Almqvist & Wiksell Tryckeri AB. P. 31.

4. The State of Christianity in India during the early nineteenth century, Letters by Abbe. A.J. Dubois, Ed. Shada Paul, New Delhi, Assoicated publishing Housoer. pp. 21,22, 40-42, 95-112.

5. மயிலை சீனி வேங்கடசாமி : கிறிஸ்தவமும் தமிழும் பக். 103.

6. சபாபதி குலேந்திரன்: கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு. இந்திய வேதாகம சங்கம் A/1, மகாத்மா காந்தி ரோடு, பங்களூர் 1967, அத்தியாயம். 7.

7. டி.ஏ. கிறிஸ்து தாஸ் : இரேனியஸ் பக். 42. 43.

8. Frenz Albrecht : Hermann Gundert, Life and work Sudduetsche Verlogsgesellschaft Ulm 1991. (German).

9. R.E. Fryksenberg and P.V. Pierard, Rhenius unpublished article.

10. Memoir of the Rev.C.T.E. Rhenius. by his son London, James Nisbet & Co.Berners Street & JohnJohnstone, Edinburgh Ch VIII P. 232

11. An Essay on the Principles of Translating the Holy Scriptures, with critical remarks on Various Passages, Particularly in reference to the Tamul Language, by C.T.E. Rhenius, Nagercoil, printed at the Mission Press 1827.

12. சபாபதி குலேந்திரன் கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு. இந்திய வேதாகம சங்கம், பங்களூர். பக். 85

13. Bror Tiliander : Christian and Hindu Terminology, Uppsala 1974. p. 113

14. An Essay on the Principles of Translating etc., C.T.E. Rhenius 1827. PP. 46-48

15. சவரிராயபிள்ளை சர்னலும் காகிதங்களும் பதிப்பு ஜே. எஸ். தேவசகாயம் பிள்ளை 1899. மூன்றாவது வால்யூம் பக். 291

16. Dr. E.A. Nida : The Bible Translator . Vol. 25 No. 3 July 74, Words and Thoughts P. 343.

17. சரோஜினி பாக்கியமுத்து : விவிலியமும் தமிழும் 90. (The Dept of Research & Publications, Gurukul Lutheran Theological College & Research Institute, Madras - 10 & APATS - India) அத்தியாயங்கள் 11-17.

இரேனியஸ் அடிகளாரின் செந்தமிழ் இலக்கணம்: தத்துவப்பின்னணி

முனைவர் கீ. முப்பால்மணி

தமிழ் மொழி இலக்கணம்

தமிழ் மொழி இலக்கணம் என்ற இந்த நூலை இரேனியஸ் அடிகளார் தமது 44-வது வயதில் 1834 இல் வெளியிட்டார். எனினும் 1820-களின் பிற்பகுதியிலேயே இந்நூல் உருவாகி இருந்தது. திருப்பாற்கடல் நாதன் கவிராயர் என்ற தமிழ்ச் சான்றோரிடம் 14 ஆண்டுகள் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார்; ஏற்கனவே லத்தீன், ஜெர்மனி, ஆங்கில மொழி மரபுகளில் தேர்ச்சியும் பெற்றிருந்தார். திருப்பாற்கடல் நாதன் சிறந்த கவிராயர், தெளிந்த மற்றும் தர்க்க சிந்தனை உடையவராக விளங்கினார். ஆங்கிலம், சமஸ்கிருத மொழிச் செல்வாக்கிற்கு உட்படாதவராகவும் இருந்தார். இதுகண்டு இந்த உள்நாட்டுச் சான்றோரைத் தேர்ந்து கற்றார். தாம் வெளிதேச சமயம் மொழி சார்ந்தவர், தமது சமயம் பொருட்டு பிறத்தியாருடைய மொழிக்கு இலக்கணம் எழுதுகிறோம் என்ற சுய உணர்வுடையராகவும் இருந்தார்.

இந்த நூல் எழுதும்போது சில கருத்தியல்களையும் பின்பற்றினார். உள்நாட்டுப் பாணியில் இந்நுல் விளங்கவேண்டும், அன்றாடப் பேச்சுத் தன்மை கொண்ட கொச்சை சொற்களை நீக்கி, சுத்த இலக்கண சொற்களைக் கொண்டு நுட்பமாக அமையவேண்டும், உயர்ந்த கவிதைபாணி இலக்கணமாகத் தமது நூல் திகழவேண்டும், அதேநேரத்தில் பொதுமக்கள் மொழி பேசும் மொழி அமைப்பை ஒத்து நிற்கவேண்டும் என்பன அவை. இவருக்குமுன் சீகன்பால்கு, பெஸ்கி, வீரமாமுனிவர் எழுதிய இலக்கண நூல்கள் இவ்வாறு இருக்கவில்லை என்ற மதிப்பீட்டையும் இரேனியஸ் வைத்துக் கொண்டிருந்தார். எனினும் வீரமாமுனிவர் எழுதிய தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலைப் படித்தபின்பே தம்முடைய இந்த நூலைக் கற்க வேண்டும் என்று விரும்பினார். இரேனியஸ் இலக்கணம் கற்றபோது தொல்காப்பியம் அன்று வழக்கில் இல்லை. நன்னூலும் செய்யுளில் இருந்தது. இதற்கு உரை விளக்கமும் தேவையாய் இருந்தது என்ற கருத்தையும் கொண்டிருந்தார். ஆதலால் தமது நூலை உரைநடையில் அமைத்தார். சமஸ்கிருத மொழி வழியாகத் தமிழ் மொழிக்கு இலக்கணம் யாராலும் எழுதப்பட்டிருக்கவில்லை. எனினும் பிராமணர்களால் எழுதப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்கள் சமஸ்கிருத கலப்புடையனவாக உள்ளன எனக் கூறினார். சமஸ்கிருதம் கலவாத தமிழ் நடையில் எழுத வேண்டும் என்ற

நோக்கத்தைத் தீவிரமாகக் கொண்டிருந்தார். என்றாலும் ஆங்கில மொழி வாயிலாகத் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதினார். எடுத்துக்காட்டுகளைத் தமிழ் மொழியில் அமைத்தார். அப்போது இராணுவத்தலைவர்கள், சமய உபதேசிகள், காவல் துறை ஆணையாளர்கள், வாணிகர்கள், கல்வித்துறை, ஆட்சித்துறை நிர்வாகிகள் ஆங்கிலேயராக இருந்ததால் அவர்பொருட்டு ஆங்கில மொழிவாயிலாகத் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதினார்.

நூல் அமைப்பு

இரேனியஸ் அடிகளார் எழுதிய தமிழ்மொழி இலக்கணம் எழுத்தியல், சொல்லியல், சொல் தொடரியல் என்ற பகுப்போடு, பின்னிணைப்பும் கொண்டுள்ளது.

எழுத்தியலில் தமிழ் எழுத்துக்களின் பிறப்பு, உயிர் எழுத்துக்களின் குறில், நெடில் பகுப்பு, மெய் எழுத்துக்களின் வலி, மெலி, இடை இனங்கள், தோன்றல், திரிதல், கெடுதல் ஆகியன விவரிக்கப்படுகின்றன. எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு என்ற வரிசை முறை பின்பற்றப்படவில்லை, மேலும் ஐரோப்பிய வழக்கான ஆதிவார்த்தையிலிருந்து எழுத்துக்கள் பிறந்து வருகின்றன என்ற நாதமுதல் வாதம் பற்றிய பேச்சையும் அப்போது இரேனியஸ் கைகொள்ளவில்லை. அந்த நாதமுதல்வாதம் இன்று லோகோ என்றும், மொழிக்கிடங்கு என்றும் கிறித்தவப் படிப்பாளிகளால் விவரிக்கப்படுகின்றது. தமிழ் எழுத்துக்களைத் தம்முன்னே வைத்துக் கொண்டு, தாம் கண்டுகொண்டு கண்டதை முதன்மைப்படுத்திக்கொண்டு ஆசிரியரால் எழுத்தியல் விவரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

சொல்லியல் இடைச்சொல், பெயர்ச்சொல், வினைச்சொல், உரிச்சொல், என்ற வரிசைமுறை பின்பற்றப்படுகின்றது. பெயர்ச் சொற்களானவை பொது, சிறப்பு, திணை, பால் ஆகியனவற்றைக் காட்டும், வேற்றுமை உருபுகளை ஏற்கும் என்பன விவரிக்கப்படுகின்றன. பெயர்ச் சொற்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றைப் புலப்படுத்துவது இரேனியசால் பேசப்படவில்லை. வினைச் சொற்கள் பகுதி, விகுதி, இடைநிலைகள் கொண்டிருப்பது, காலம் காட்டுவது விளக்கப்படுகின்றன. கூடவே வினைச்சொல்லின் வகைகள் விவரிக்கப்படுகின்றன. தமிழில் வினைமுற்று என்ற நிலையில் அச்சொற்கள் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம் செய்பொருள் என்ற ஆறு பொருளைக் காட்டும், இது இரேனியசால் பின்பற்றப்படவில்லை. சொல்தொடரியல் என்று அவரால் அளிக்கப்படும் விளக்கம் தமிழ்மொழிக்குப் புதியது ஆகும். வேற்றுமைத் தொடர்கள், வினைகள் ஆகியன நடைமுறை வழக்கில் நிலவும் விதங்கள் விளக்கப்படுகின்றன.

கண் முன்னால் காணப்படும் மொழி எவ்வாறு உள்ளது, அது

எவ்வாறு பிரயோசனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது என்ற விளக்கப்பணியே நூலில் சிறப்புநிலை வகிக்கிறது. ஐரோப்பிய மொழி மரபு உணர்ந்தவரை வாசகராகவும், புதியதாகத் தமிழ் இலக்கணம் கற்க முனையும் தமிழ்பயின்ற கிறித்தவப் பாடங்கேட்பவராகவும் முன்னிலைப்படுத்திக்கொண்டு நூல் திகழ்கிறது.

இரேனியஸ் 7-7-1820ஆம் நாளில் முதல் மிஷனெரியாக திருநெல்வேலிக்கு வந்தார். தமிழ் பேசும் பிற்பட்ட வகுப்பு மக்களிடையே உபதேசப் பணி ஆற்றினார். திருச்சபையின் நற்செய்தியை விளக்கினார். தாம் வளர்த்த ஐரோப்பிய புராடஸ்டண்ட் கருத்தியல்களுக்கு ஏற்ப லூத்தரன் திருச்சபைக் கொள்கைக் கண்கொண்டு தமிழ் மொழி இலக்கணம் நூலை எழுதினார்.

எடுத்துக்காட்டுகளே தரவுகளாக

எழுத்தியலிலும், சொல்லியலிலும் எடுத்துக்காட்டப்படும் சான்றுகள் பொன் + தகடு = பொற்றகடு, காடு + அலர்ந்தது = காடலர்ந்தது, கவண் + நெடிது = கவணெடிது என்ற நீண்ட கால மரபார்ந்த சொற்களை மேற்கொண்ட பாங்கினில் அமைந்துள்ளன. இவைகளோடு கூடவே மனிதர்கள் நல்லவர்களல்ல, பாவஞ் செய்தான், முழங்கால்படியிட்டான், சபை, மாட்சிமை, ஞான போசனம், சுத்த இருதயம், புறப்பொருள் போன்ற சொல்லாட்சிகளைத் தமது சுயசமயம் காட்டும் பொருட்பாங்கில் இரேனியஸ் மேற்கொண்டார். இது ஏற்கனவே இலக்கணம் அறிந்தவர்களுக்கும், தமிழ் மரபுடைய சுதேசிப்புலவர்களுக்கும் புதியன.

சொல் தொடரியலில் எடுத்துக்காட்டாக மேற்கொள்ளப்படும் வரித்தொடர்கள் மேலும் புதுமையும், வீரியமும், தீவிரமும் தாங்கிப் பொலிகின்றன. அஞ்ஞானிகளுக்கு ஞானத்தைப்போதித்தான், பிராமணர் சனங்களுக்குப் பொய்களைச் சொல்லுகிறார்கள், தேவ கட்டளையை உங்களுக்கு அறிவிப்பேன், இவ்வுலகத்தில் மனித அவதாரம் பண்ணினவருமாய், மனிதர் யாவரும் செய்த பாவங்களை நிவர்த்திக்கும் படிக்குத் தமது சீவனை விட்டவருமாய்த் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்காகப் பரமகதியைச் சம்பாதித்தவருமாயிருக்கிற இரட்சகரை யெல்லாருஞ் தோத்திரஞ்செய்வார்களாக என்பவைகளாக அவை அமைந்துள்ளன. இந்தப் பாங்கினில் உள்ள வரிகள் இலக்கண எடுத்துக்காட்டுகளாக இருந்தாலும் சமூக, சமய தத்துவச் சிறப்புகளைப் புலப்படுத்தும் தரவுகளாகவும் உள்ளன.

சமூக நிலையில் உழவு, விதைப்பு, அறுவடை, நெல்லாக்கல், விற்றல், வரிப்பணம் செலுத்துதல், அரசுக்கு சனங்கள் கீழ்ப்படிதலின் அவசியம், பிராமணர்களுக்குச் சூத்திரர் தாழ்வாக இருத்தல், சேனைகள் கலவரத்தை உள்நாட்டில் அடக்குதல், வெளிநாட்டில் கொள்ளையிடல் போன்றவற்றைக் காட்டுகின்றன. அதிகாரம், வரி, கூலி, பணம்,

பிரயோசனம் ஆகிய கருத்தமைப்புகள் மேலான நிலை வகிக்கின்றன.

சமயநிலையில் அவபக்தி, துன்மார்க்கம், விக்கிரகாராதனை, பாவவழி, கர்த்தர் இரட்சிப்பு, பைபிள், சபை, சன்மார்க்கம், ஆகியன கருத்தமைப்புகள் மேனிலையில் திகழ்கின்றன.

தத்துவ நிலையில் புறப்பொருள், பஞ்ச பூதங்கள், படைப்பு, பிரயோசனம், ஆத்மா, மனிதன், இறை மகிமை ஆகியன ஊடாட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரயோசனம் என்பதற்கான அர்த்தம் இங்கே முக்கியமாகப் பார்க்கவேண்டும். என்ரி பவர் தமது நூலான வேத அகராதியில் பிரயோசனம் = profit, utility என்று எழுதினார்.

புறப்பொருளும், பராபரனும்

இக உலகியற் பொருள்கள், இயற்கைப் பொருள்கள், புறப் பொருட்களாகும். இரேனியஸ் இவைகளைப் பண்டங்கள், பதார்த்தங்கள் என்று அழைக்கிறார். இரும்பு, செம்பு, ஈயம், பொன் ஆகிய இவை போன்றன. இவையல்லாமல் நிலம், நீர், தீ, வளி, சூரியன், நட்சத்திரங்கள் ஆகிய பிரபஞ்சப் பொருள்களும் உள்ளன. மேலும் பொன்னால், கல்லால், மரத்தால் செய்யப்பட்ட விக்கிரகங்களான படைப்புகளும் உள்ளன.

பிரபஞ்சப்பொருட்களும், இக உலகியற்பொருட்களும் இரேனியஸ் கொள்கைப்படி பராபரனால் படைக்கப்பட்டவை ஆகும். இவை பராபரனுடைய மகிமையை அறிவிக்கின்றன. இத்தனை பிரகாசமாய்த் தோன்றிய சூரியன் பராபரனுடைய மகிமையை அறிவிக்கிறான். நட்த்திரங்கள் பிரகாசமாயும், ஒழுங்காயும் நடக்கின்றன. இந்த ஒழுங்கில் அவைகளினுடைய சுய விதிகள், போக்குகள் உள்ளன. பராபரன் அவற்றைப் படைத்தான்; அவைகள் சுய தீர்மானத்தில் நிலவுகின்றன. பூமி சூரியனைச் சுற்றுகிறது. பிற கோள்களும் அப்படியே. இவற்றை வானவியல் சோதிட சாஸ்திரம் - கற்பிக்கிறது. கோபர் நிக்கஸ், கெப்ளர் ஆகியோர் கண்டுணர்ந்த விதிகள் அப்போது ஐரோப்பாவில் கற்கப்பட்டு இருந்தன. இதில் உற்றுணரவேண்டிய ஒன்று உள்ளது. வானவியல் பொருட்களில், இக உலகியற்பொருட்களில் - நவகிரகங்கள், பஞ்ச பூதங்கள் - ஆகியவற்றில் பராபரன் தங்கி இருக்கவில்லை, பொருட்கள், அனைத்தும் பொருட்கள் தான். பராபரன் மேலான பராபரன்தான். மனிதனால் செய்யப்பட்ட பொருள்கள் கூட அப்படியே. விக்கிரகத்திற்குக் கண்ணிருந்தும் தெரியாது; விக்கிரகாராதனைக்கு விரோதமாய் எழுதினான் என்று இரேனியஸ் எழுதிய தொடர்கள் குறிப்பிடத்தகுந்தன. படைக்கப்பட்ட பொருள்களிலும், செய்யப்பட்ட பொருள்களிலும் பராபரன் குடியிருக்கவில்லை. பொருள்கள் வேறு, பராபரன் வேறு. தாசிகள் பொன்னாலான சுவாமிக்கு முன்பாக நடனம் பண்ணுவது அவருடைய மதிப்பில் பாவவழி ஆகும். விக்கிரகாராதனை அவரது நோக்கில் துன்மார்க்க அவபக்தி ஆகும்.

புறப்பொருட்கள் நட்சத்திரங்கள், பொன்,. செம்பு, இரும்பு, ஈயம்,

சாஸ்திரக்கல்வி என்பன எல்லாம் பிரயோசனத்திற்காக உள்ளன. வானம் உயரமாயும், மகிமையாயும், பிரயோசனமாயும் இருக்கிறது; ஆதியில் மகாதேவனால் உண்டாக்கப்பட்டவைகளுமாய், எப்பொழுதும் பூலோகத்தாருக்கு மிகுந்த பிரயோசனங்களைக் கொடுக்கின்ற வைகளுமாய் இருக்கிற நட்சத்திரங்கள் பற்றிய சோதிட சாஸ்திரக்கல்வி பிரயோசனமானது. சோதிட சாஸ்திரம் மனிதனால் உண்டாக்கப்பட்டது. இப்படி ஒரு பிரயோசன நிலையில் அணுகுமுறையில் புறப்பொருள் உட்படுத்தப்பட்டுள்ளது. இது பிரயோசன மற்றும் பயன் வழித்தத்துவம் ஆகும்.

ஒரு பொருளாகிலும் வீணாக அல்ல, ஒரு பிரயோசனத்திற்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பது இரேனியஸ் கருத்து.

புறப்பொருள்கள் மட்டுமல்லாது கூலிக்காரர், ஊழியக்காரர் கூட முதலாளிகளின் பிரயோசன நிலைக்குட்பட்டவரே. பணத்திற்கு வேலை செய்யும் நிலை உருவாகிவரும் சமூக நிலைமையை இரேனியஸ் அறிந்தவரே. நமக்குக் கட்டளையிடப் பட்டவைகளை எல்லாவற்றையும் செய்தபின் நாம் அப்பிரயோசனமான ஊழியக்காரர் ஆவோம் என்பது அவரது சொற்றொடர்கள். பயன்வழி, பிரயோசன நோக்கமைந்த தத்துவமே இது.

புறப்பொருட்களில் பராபரன் இல்லை, அவை மனிதப் பயன் வழிப்பட்ட பிரயோசனத்திற்குட்பட்டவை என்பவை தேயிசம் - DESIM - ஆகும். பதினேழாம் நூற்றாண்டில் செர்பரி நகரில் வாழ்ந்த ஹெர்பர்ட் என்ற ஆங்கிலேயர் இதன் தந்தை ஆவார், வால்டேர், ரூஸ்ஸோ ஆகியோர் இதை அனுசரித்தனர். லாக்கி- Locke- என்ற ஆங்கில அறிஞரும் தேயிசத்தைப் போற்றினார். இவர்மீதும், இவர் அரசு பற்றிய எழுதிய நூல்மீதும் இரேனியஸ் நல்ல மதிப்பைக் கொண்டிருந்தார். வேத அகராதி எழுதிய என்ரி பவர் கூடத் தேசக் கருத்துக்களை அனுசரித்தார். இந்தத் தேயிசனம் என்ற தத்துவ இயலானது இயலுலகப் பாருள்கள் பற்றி விளக்கும்போது அப்போதைய கிறித்தவ இயலால் அனுசரிக்கப்பட்டது என்பதே இங்கே எடுத்துரைக்கத்தக்கது.

ஆத்மாவும், மனிதனும்

மனிதனானவன் ஆத்மா, சரீரம் உடையவன். இரண்டும் தனித்தனி, வேறு, வேறும் கூட ஆதியில் உடலானது மண் கொண்டு உண்டாக்கப்பட்டது, ஆத்மாவானது பராபரனது ஆவி கொண்டு தரப்பட்டது. மனித ஆத்மாவானது அறிவு, யோசனை உடையது என்ற கருத்துடையவராக இரேனியஸ் இருந்தார். அறிவானது ஒன்றைப் பெறும் கருவி; யோசனையானது அறிவால் பெற்ற பொருளைப் பற்றிக் கொள்ளுதற்கான கருவி. இது அவரது சொந்த கருத்து. அவர் காலத்தில் ஆத்மாவானது மனம், புத்தி என்ற பகுப்பைக் கொண்டுள்ளது என்ற கருத்துரை கிறித்தவ இயலில் இருந்தது, அதனையும் இரேனியஸ் ஏற்றுக் கொண்டார். மனம் ஆசைகளை உண்டாக்கும், அந்த ஆசைகளைப் புத்தி அடக்கிக்

கீழ்ப்படுத்தி ஆளவேண்டும் என்ற ஈடுபாடும் கொண்டிருந்தார். கூடவே, மனம் உடலை நடத்துகிறது, ஆனால் எப்படி நடத்துகிறது என்பது இரேனியஸிற்கு ஒரு கேள்வியாகவே இருந்து கொண்டு இருந்தது. அந்த வகை நம்மால் சொல்லக் கூடாத இரகசியமாய் இருக்கிறது என்று மட்டும் விடையாக உணர்ந்திருந்தார்.

கிறித்தவ இயலின்படி ஆத்மா அரூபமானது, நித்தியமானது. ஆத்மாக்கள் பல; வேறு, வேறு, ஒரு ஆத்மாவுக்கு ஓர் உடல் மட்டுமே உண்டு. எந்த நிலையிலும் இன்னொரு உடலை அடையாது. ஆத்மா மனம், புத்தி என்ற கூறுகளைக் கொண்டது. மனம் சுதந்தரமானது நல்லது கெட்டது, புண்ணியம் பாவம் சன்மார்க்கம் துன்மார்க்கம் ஆகியவற்றில் ஒன்றை வேண்டும் என விருப்பமும், வேண்டாம் என வெறுப்பும் கொள்ளும் சுதந்தரம் படைத்தது. ஆனால் 1830கள் தொடங்கி மனமானது பகுத்தறிவு கொண்டுள்ளது என்ற கருத்துரு பிரபலமானது. ஆத்மா சுயாதீனமானது. சுயசுதந்திரம் உடையது. தனது செயலுக்கு, தான் உத்திரவாதி, கணக்குக் கொடுக்க வேண்டிய வாழ்வில் நிலவுகிறது. அதனாலேயே தனது வழியைத் தேர்வு செய்யும் சுயபொறுப்பில் உள்ளது. தேவபக்தி அல்லது அவபக்தி இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யும். தம் கால மக்களிடையே அவபக்தி, விக்கிரகாரதனை, துன்மார்க்கம் ஆகியன குடிகொண்டு இருந்ததை இரேனியஸ் இங்கு எடுத்துக்காட்டுகிறார். மிகுந்த அன்பு உள்ளவராகிய கர்த்தாவினாலே மகிமையாய்ப் படைக்கப்பட்ட மனிதர் யாவரும் அவரை மறக்கிறார்கள்; ஆதலால் மெய்யான சுவாமிக்குக் கீழ்ப் பணியவேண்டும் என ஆவலுடன் நாடினார். அவருடைய தமிழ்மொழி இலக்கண நூல், தனது எடுத்துக்காட்டுகளில் சன்மார்க்க முயற்சி, நற்செய்தி, தேவகிருபைகளைப் புலப்படுத்துகிறது. ஆத்மாவானது இந்தவுலகத்தின் இன்ப துன்பங்களை அறிந்து அனுபவித்த பின்னர்தான் பரலோக ஆசை கொள்ளும் என்ற கருத்தியல் இரேனியஸ் காலத்தில் புகழ்பெற்றிருந்தது. அதே சமயத்தில் தான் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப சுவர்க்கம், நரகங்களில் அடுத்த பலனை அடையும் என்பதை இரேனியஸ் கிறித்தவ இயலின் பங்களிப்பாக எடுத்துரைத்தார்.

எனினும் அப்போது, மனிதன் பகுத்தறிவு சுயாதீனம், இரண்டும் உடையவன் என்ற கருத்துரையைப் புராடஸ்டண்ட் கிறித்தவ சபையாளர் தமிழகத்தில் புதியதாகப் பேசத் தொடங்கியிருந்தனர். பகுத்தறிவுக் கருத்துரைகள் இங்கிருந்த இந்து, சைவ சமயம் சார்ந்த பிறத்தியாரை நோக்கி இடையறாது தீவிரமாக உரைக்கப்பட்டன, சுயாதீனம் இந்தியக் கிறித்தவர்களை நோக்கிப் பேசப்பட்டது. இரேனியஸ் அதன் முன்னோடி, அவரது தமிழ்மொழி இலக்கணம் இதைத் தாங்கியுள்ளது.

தத்துவப் பின்னணி

பராபரன் நித்தியமானவன், மெய்யானவன், சுயம்பானவன், உருவமில்லாதவன். அவன் ஒருவனே ஆவான். தொடக்கம் முடிவு அற்றவன். புறப்பொருள்கள் படைக்கப்பட்டவை. மட்டுமே அவை அளவு, எல்லை, வடிவம் உடையவை. சுயமான பண்புகள் உடையவை.

அளவும், வடிவமும். மாற்றமும் இருப்பதால் அழிவன.

ஆத்மா உடலுக்குக் கொடுக்கப்பட்டது, மாறாதது, அழியாதது, சுயாதீனம் சுயசுதந்தரம் உடையது. செயலுக்குச் சுயபொறுப்புக் கொண்டது.

இந்த இரண்டிலும் பராபரன் தங்கவில்லை அளவற்றவன். சுயம்பானவன் என்ற முறையில் அளவுள்ள, வடிவப்படுத்தப்பட்ட, செய்யப்பட்ட பதார்த்தங்களில் பண்டங்களில் அடங்க மாட்டான், இருப்புக் கொள்ள மாட்டான். அழிவற்றவன், அழிவுள்ளவைகளில் நிலவுவதில்லை.

ஆத்மாவில் பராபரன் குடிகொள்ளவில்லை. மனித சரீரத்தில் அவன் நிலவவில்லை. மனித சரீரத்தில் அவன் நிலவவில்லை. ஆத்மா மட்டுமே உண்டு; ஓர் இடத்தில் இரண்டு இருப்புக்கொள்ளுவது அபத்தம்

மனிதனின் உருவாக்கம், படைப்பு என்ற முறையில் மொழியிலும் பராபரன் இருப்புக் கொள்ளவில்லை.

அப்போதைய வரலாற்றுக் காட்சி

அன்றைய கிறித்தவ இயலில் தேயிசமும், பிரயோசன மரபும் தத்துவநிலை விளக்கங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. பராபரன் தனி, புறப்பொருள்கள் தனி; வேறு, வேறும் கூட. அப்படியே தெய்வமானது தமது அளவில்லா சுபாவத்தின் இயல்பினால் எங்கும் வியாபித்திருந்தாலும், சகல வஸ்துக்களும் அவரிடத்தில் அடங்கினாலும், அவர் அதுகளில் நிறைந்து இருந்தாலும் அதுகளோடு ஒன்றாகாது அதைப்பற்றிய அவருடைய சர்வவியாபகம் அந்த வஸ்துக்களின் சுபாவத்தை மாறுபடுத்துகிறதும் இல்லை, அதுகளை மேன்மைப்படுத்துகிறதும் இல்லை. என்றாலும் ஒருவஸ்து இன்னொரு வஸ்துவினுள் புகாது என்பதில் உறுதியாகக் கிறித்தவக்கொள்கை நின்றது. புறப்பொருள்களின் ஒழுங்கு, கிரமம், நியதி என்பன அவைகளின் பன்மைத் தன்மையை உறுதி செய்வதோடு, சுயாதீனத்தையும் புலப்படுத்துகின்றன. இப்படி இருந்தபடியே தாழ்ந்த வஸ்துக்கள் உயர்ந்த வஸ்துக்களுக்குக் கீழ்ப்படியவும், சிறியதுகள் பெரியதுகளுடைய சுக நன்மைப்பிழைப்பு முதலிய பிரயோசனத்துக்கு உதவவும் உள்ளன. அதெப்படி என்றால் பொம்மனும், திம்மனும் எனக்காக வேலை செய்யும்போது அவருக்கு ஒரு பிரயோசனம் ஏற்பட்டுள்ளது. அந்தவேலைக்குத் தக்க கூலியாய் இரண்டு பணத்தை இருவருக்கும் தரும்போது, வேலை செய்த அந்த இருவருக்கும் ஒரு பிரயோசனம் ஏற்பட்டுள்ளது. இப்படியே விசாரித்தோமானால் அவனவன் தான்தான் வாழ்வதற்கு முயற்சி செய்கிறான் என்றே கூற வேண்டியுள்ளது. அதெப்படியென்றால் வேலைபண்ணுகிறவன் தான் பண்ணுகிற வேலை நிமித்தமாகத் தனக்குப் பிரயோசனம் வரத்தக்கதாக வேலை செய்கிறான். வேலை சொல்பவன் நன்மை அடைவதற்கு அந்த வேலையாள் முதலாவதாக முயற்சிக்கிறான்

என்று சொல்லத்தகாது. வேலை சொல்பவன் பணம் கொடுப்பதினாலே தனக்குப் பிரயோசனமான நன்மை வரவேண்டும் என்று நினைப்பானேயொழிய, வேலை செய்பவன் பிழைக்கவேண்டும் என்று நினைக்கமாட்டான். பல்லக்கைச் சுமக்கிறவனும் பல்லக்கில் அமர்ந்திருப்பவனும் அவனவன் தான் பிரயோசனத்திற்கு முயற்சி செய்கின்றனர் என்றே சொல்லத்தகும். இது ராபர்ட் டிநொபிலியினது விளக்கம். வேலைமுடிந்தபின் வேலையாள் பிரயோசனமற்றவன் ஆகிறான். நமக்குக் கட்டளையிடப்பட்டவைகள் எல்லாவற்றையும் செய்தபின்பு நாம் அப்பிரயோசனமான ஊழியக்காரர் ஆவோம் என்பது இரேனியஸினது எடுத்துக்காட்டு. இதில் இந்திய வினைக் கொள்கை, அதனால் நிறுவப்படும் பல பிறவி உண்டு என்ற நம்பிக்கை ஆகியன விலக்கப்படுகின்றன. கீழானவர், மேலானவர், தாழ்ந்தவர், உயர்ந்தவ, பல்லக்கைச் சுமப்பவர், பல்லக்கில் அமர்ந்தவர் ஆகிய சமூக நிலைகளை விளக்க நல்வினை, தீவனைக் கருத்தியல்கள் மேற்கொள்ளப்பட்டன. கூலி கொடுப்பவர், அதுவும் பணமாகக் கொடுப்பவர், அதைக்கூலியாகப் பெறுபவர் என்ற நிலை சமூகத்தில் இங்கு ஏற்பட்டபோது கூடவே பிரயோசன வாதமும் விளக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டது. கிறித்தவ இயல் அப்பணியைக் கைக்கொண்டது. கூலி தந்து உழைப்பைப் பெறுவது, கூலிக்கு உழைப்பை விற்பது என்ற சமூக நிலை ஏற்பட்டபோது பிரயோசன வாதம் மேலோங்கியது.

முன் ஜென்மம், மறு ஜென்மம் ஆகியன இரேனியஸ் தத்துவ மரபில் இல்லை, எனினும் ஒரு மனிதன் மறுபடியும் பிறக்காவிட்டால் மோட்ச இராச்சியத்தைக் காண மாட்டான் என்பது அவரது எடுத்துக்காட்டு வரி, மறு சென்மம் என்பது தேவகிருபையால் இருதயம் சீர்பட்டு மனந்திருந்திச் சமய மாற்றமாகிக் கிறித்தவ விசுவாசமுள்ள நன்னடக்கையாய் இவ்வுலகிலேயே நடப்பது, இதுவே மறுபிறப்பும் கூட என்பதாக என்ரி பவர் கூறும் விளக்கம் அன்று இருந்தது

தேயிசக் கிறித்தவ இயலின்படி, படைக்கப்பட்ட மனிதனுக்கு ஒரு பிறவி மட்டுமே, மீண்டும் இன்னொரு தடவை மனிதப்பெண் வயிற்றில் உருவாகிப்பிறக்கும் அடுத்த பிறவி என்பது இல்லை, அதே நேரத்தில் உடல்வேறு, உயிர்வேறு. இப்படியாக தேயிசமும், பிரயோசன மரபும் பிரபஞ்சத்தில் அனைத்தினுள்ளும் கடவுள் அகமும், புறமும் நிறைந்து ஒன்றென உள்ளது என்று கூறும் இங்கிருந்த சூஃபிசம், சித்தர், அனுபூதியாளர், வேதாந்தம், சித்தாந்தம் போன்ற மரபுகளையும் மற்றும் புறப்பொருள்களும், மனித வாழ்வுமட்டும் உண்மை எனக்கூறும் உலகாயதம் போன்ற தத்துவ மரபையும் விலக்கும் பொருட்டுக் கிறித்தவ இயலில் வீறுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1830களுக்குப்பிறகு இந்த தேயிசம், பிரயோசன விளக்கம் இரண்டும், இந்தியாவில் பரவிய ஆங்கிலேய நேர்க்காட்சிவாதத்தில் சங்கமமாகி 1900 வரை திடமுடன் நின்று திகழ்ந்தன. இதனை மறுத்தபடிதான் வள்ளலார்,

மனோன்மணியம் சுந்தரனார், விவேகானந்தர் ஆகியோர் உருவாகி விளங்கினர். அந்தச் சிறப்பமைந்த வரலாற்றில் அதன் தொடக்க காலத்தில் இரேனியஸ் தேயிசம், பிரயோசன விளக்கத்தத்துவப் பின்னணியைக் கொண்டு ஒளிவிட்டார்.

நேர்காட்சி வாதம் பற்றி இரேனியஸ் அறிந்திருக்கலாம். லாக்கி - Locke பற்றிஅவர் அறிந்திருந்தார் என்பது கொண்டு காம்டி, ஹியூம் போன்ற நேர்க்காட்சியாளர் பற்றியும் அவர் தெரிந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. எனினும் இவர்களோடு ஜே.எஸ். மில், ஹெர்பர்ட் ஸ்பென்சர், பெந்தம் ஜெரோம் போன்றோர் இரேனியஸ் காலத்திற்குப் பிறகு, இங்குப் பிரபலமடைந்தனர்; அவர்களது ஆங்கிலேய நேர்க்காட்சிவாதம் தத்துப் பொலிவோடு இங்குக் கிறித்தவ இயலில் விளக்கம் பெற்றது.

நேர்க்காட்சி வாதம் இங்கிலாந்தில் புகழ்பெற்றது. வணிகர், ஆட்சியாளர், இராணுவ அதிகாரிகள், கல்வியாளர், சமயபோதகர் ஆகியோருடைய கருத்தியல்களில் பொலிவுதந்தது. இதற்கு முகாந்திரமாக ஜெர்மனியின் ஹாலே இறையியல் பள்ளியில் பயிற்சி பெற்ற குருமார்கள் ஆட்சி பெற்றிருந்த லூதரன் சபை சமயப்பணி செய்த இடத்தில் ஆங்கிலேய சபை குருமார்கள் பணி செய்வது இரேனியஸ் காலத்தில் ஆரம்பமானது. பிஷப் டானியல் காரி (177-1837) மற்றும் பிஷப் ஜார்ஜ், ஜான் டிரவர் ஸ்பென்சர் (1799-1866) ஆகியோருடைய ஆட்சிக்காலங்களில் உறுதிபெற்றது. கங்கை நதிபாயும் இடமெல்லாம் இருபக்கமும் கிறிஸ்துவ ஆலயங்கள் நிறைந்து, இருபக்கத்து நிலங்களைக் கிறித்தவர்கள் சாகுபடி செய்து புளிய மரங்களின் அடியில் நின்றுகொண்டு ஞான கீதங்களையும், ஞானப்பாட்டுக்களையும் பாடும் காலம் சீக்கிரம்வரும் என்று பிஷப் காரி எதிர்நோக்கினார். பிஷப் காரியானவர் டென்மார்க், ஜெர்மனி தேசங்களிலிருந்து வரும் மிஷனெரிமாரை நியமிப்பதை விட்டு ஆங்கிலேய மிஷனெரிமாரையே நியமிப்பது நலம் என்று கருதினார்; இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த ஐரோப்பிய ரத்த சம்பந்தமுள்ள வர்களைப் பயிற்றுவித்துப் பட்டம் கொடுப்பது நல்லமுறை என்று கண்டார். நற்குணம் பொருந்திய இந்தியக் கிறித்தவர்களை சிறப்பான விதமாய் வேதசாஸ்திரப் பயிற்சி செய்வித்துப் பட்டங் கொடுப்பதுஅவசியம் என்று முதன்முதலில் கண்டறிந்தவர் பிஷப் ஸ்பென்ஸர் தான். மேலும் ஐரோப்பியர் கிடைப்பது அரிதாக இருந்தது. ஆகையால் இந்தியர்களே இந்தியாவை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று சமயம் கிடைத்தபோதெல்லாம் இந்தியர்களுக்குப் பட்டம் கொடுத்தார். பிஷப் ஸ்பென்ஸரால் பட்டம் கொடுக்கப் பட்டவர்களில் அருட்திரு. போப், கால்டுவெல், என்ரி பவர் ஆகியோர் தமிழ் உலகில் புகழ்ற்றெவர் ஆவர். இவர்களிடம் நேர்காட்சி வாத இயல்புகள் பிறத்தியாரை நோக்கிப் பேசும்போது பொலிவு பெற்றன.

இந்த நேர்காட்சி வாத இயல்புகள் இரேனியஸ் காலத்தத்துவப் பின்னணியின் முதிர்ச்சி ஆகும்; இவர் மூலமாக, அவை தமிழகத்தில் தமது

பயணத்தைக் கடந்து வந்தன. தமிழ் மொழி இலக்கணம் நூலின் சொல் தொடரியல் சார்ந்த எடுத்துக்காட்டுகள் இதைப் புலப்படுத்துகின்றன.

ஆதார நூல்கள்

1. A. GRAMMAR of TAMIL LANGUAGE - C.T.E. RHENIUS. 1853

2. நித்திய ஜீவன் சல்லாபம் - ராபர்ட் டிநொபிலி. (பதிப்பு. 1964)

3. ஆத்ம நிர்ணயம்- ராபர்ட் டிநொபிலி. பதிப்பு.1963.

4. வேத அகராதி - என்ரி பவர். 1841

5. சமய பரீட்சை - ராபர்ட் ப்ரென். 1858

6. சத்திய வேத பரீட்சை - புதுவை சென்மவிராக்கினி மாதாகோவில்.1846

7. புனர் ஜென்ம ஆட்சேயம் - ராபர்ட் டி நொபிலி. பதிப்பு - 1963

8. சென்னை அத்தியட்சாதீனத்தின் சதாப்த சரித்திரம் - எஸ்.கே. தேவசிகாமணி. 1935

பார்வை நூல்கள்

1. கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு - சபாபதி குலேந்திரன். 1967

2. விவிலியமும் தமிழும் - சரோஜினி பாக்கியமுத்து. 1991

இரேனியசின் படைப்புலகம் / கருத்துலகம்

செ. ஜெய செல்வின்

சார்லஸ் தியோபிலஸ் எவால்ட் இரேனியஸ் (1814 : 1835) தமிழ்ச் சமூக வரலாற்றில் தரங்கை[1] சீர்திருத்த மிஷனெரிகளின் வரிசையில் மிகவும் ஆழமாகத் தடம்பதித்த ஒருவராவார். ஜெர்மன் சீர்திருத்தச் சபையின் பின்னணியினைக் கொண்ட இவர் 19-வது நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழகத்தில் நிலவி வந்த வழக்கமான மிஷனெரிச் செயல்பாட்டினைப் புரட்சிகரமாக மறுவடிவமைத்தார். இன்றைய திருநெல்வேலிப் பகுதிகளில் கல்வித்துறையிலும், சமயப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள சீர்திருத்தக் கிறித்தவ நிறுவனங்கள் பலவற்றுக்கான அடிப்படைக் கட்டுமானங்கள் இவர் காலத்திலேயே ஆரம்பிக்கப் பட்டன. சீர்திருத்தக் கிறித்தவத்தின் ஆரம்ப கர்த்தாவான சீகன்பால்கு (1707-1719) காலத்திலிருந்தே கல்வி மற்றும் சமூக மீள்கட்டுமான முனைவுகள் மிஷனெரி நடவடிக்கையாக வழக்கில் இருந்தாலும், இந்நடைமுறைகளை முன்னெப்போதும் இல்லாத அளவில் சமய, சமூக மாற்றத்துக்கான மாதிரியாக தீவிரப்படுத்தியவர் இரேனியஸ் அவர்களேயாவர்.

திருநெல்வேலியின் சமூக வளர்ச்சி, திருநெல்வேலியைச் சார்ந்தவர்களின் நகரங்களை நோக்கிய இடப்பெயர்வு, திருநெல்வேலியைச் சுற்றிப் புதிதாக உருவான வியாபாரமையங்கள் ஆகியன இவரது காலத்தின் பின்பே உருவாகின. இத்தகைய புலப்பெயர்வுகளும், புதிய மக்கள் புழங்கும் மையங்களும் உருவாக இரேனியசின் மிஷனெரி நடவடிக்கை ஓர் மறைமுகக் காரணமாக இருக்கக்கூடும்[2]. நாயக்கர் ஆட்சியின் வீழ்ச்சியின்போது ஒவ்வொரு பாளையப்பகுதிகளும் தன்னிச்சையாக தங்களது பகுதிகளை நிர்வகிக்கும் உரிமையைக் கொண்டிருந்தபோது, திருநெல்வேலிப் பகுதியிலும் தென்மாவட்டங்களின் பிற பகுதிகளிலும் தொடர்ந்து நிலவிய அரசியல் குழப்பமான சூழலில் இரேனியஸ் திருநெல்வேலி வந்தார். தென் தமிழகத்தில் பிரித்தானிய அரசு முழுமையாக நிலைகொள்ளும் முன்பிருந்த காலச் சூழலிது[3]. ஒரு பக்கம் தங்கள் வியாபார நலனிலேயே குறியாய் இருந்த கிழக்கிந்தியக் கம்பெனி, மறுபுறம் பாளையக்காரர் முறையின் உச்சக்கட்ட அடக்குமுறை; இதற்கிடையிலான சூழலில் இரேனியஸ் பணி செய்ய வேண்டியதிருந்தது. இக்காலம் திருநெல்வேலி வரலாற்றில் முக்கியமானது. சவால் நிறைந்தது. வரலாற்றாசிரியர்கள் இக்கால ஆட்சிமுறையை "பிராமின் ராஜ்" என்று கூறுகிறார்கள்[4]. மிக அதிக அளவிலான சமூக ஏற்றத் தாழ்வும், சீர்முறையற்ற நிதி வசூலிப்பு

முறையும், ஆங்கிலேயே - அந்தண - வேளாள அரசியல் புரிதலும் நிலவியிருந்த காலச்சூழலில்[5] தான் இரேனியஸ் திருநெல்வேலி வந்தார்.

இரேனியஸ் திருநெல்வேலி வந்த காலப்பகுதியைப் புரிந்து கொள்வது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக, எப்படி இரேனியஸ் திருநெல்வேலியில் நிலவிய சமூக முரண்பாட்டை அடையாளம் கண்டு தனது மிஷனெரிச் செயல்பாட்டில் அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்? அத்தகைய செயல்பாடு பிற மிஷனெரிச் செயல்பாடுகளிலிருந்து எத்தகைய வேறுபாடுகளைக் கொண்டுள்ளது? என்பவைதான் இக்கட்டுரையின் அடிப்படைக் கேள்விகள். அதோடு கிறித்தவ மதமாற்றம் என்பது எப்படிப்பட்ட சாத்தியப்பாடுகளுக்குள் நிகழ்ந்தது. அதுவெறும் மிஷனெரிகள் வழங்கிய பொருளாதார நன்மைகளுக்காக நிகழ்ந்ததாயின் மிஷனெரிச் செயல்பாடு என்பது வெறும் அதிகார உறவுடைய செயல்பாடா? அல்லது மிஷனெரிச் செயல்பாட்டில் ஒரு உருவாக்கப் படிமுறையும், (creative process) முரண்பாடுகளை இனங்காணும் புரட்சிகர நடவடிக்கைகளும் அடங்கி உள்ளதா? என்பவைதான் அதன் தொடர்ச்சியாக இங்கு எழும் கேள்விகள். இக்கேள்விகளுக்கான விடையினை அறிவதில் 18 மற்றும் 19 வது நூற்றாண்டுகளில் திருநெல்வேலியின் *வரலாற்றுச்* சூழல் மிகவும் முக்கியமானது.

மேற்கூறிய கேள்விகள் ஒருவிதத்தில் திருநெல்வேலி கிறித்தவம், தமிழ்க் கிறித்தவம் இன்னொருவிதத்தில், இந்திய சமூகங்களில் கிறித்தவ மிஷனெரிகள், கிறித்தவ சமூகங்கள் குறித்து நிலவிவரும் அறிவியல் தன்மையற்ற படவுருக்களுக்கு (Stereo types) விடைகாணும் முயற்சிகளுக்கு அடிப்படையானவை. இந்த ஆய்வுக் கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்த கிறித்தவ மிஷனெரி இயக்கங்களின் மீது புதிய புரிதல்கள் உருவாக்க இயலுமா? இதன் அடிப்படையாக இக்கட்டுரையில் பயன்படுத்தப்படும் ஆய்வு மாதிரியானது, இரேனியசின் மிஷனெரி நடவடிக்கையில் காணப்படும் வகை மாதிரிகளை இனங்கண்டு அவற்றை ஓர் அறிவாக்கச் செயலோடும், முரண்பாடுகளை அடையாளம் கண்டு அவற்றை சமன் செய்யும் ஓர் புரட்சிகர நடைமுறையோடும் இணைத்து நோக்கும் பார்வையுமாகும். அறிவார்ந்த செயல்பாடு சமூகத்தில் நிகழும் அனைத்துப் படைப்புச் செயல்பாடுகளுக்கும் பொதுவானது. இதனை விளக்கும் முன்பு, இந்த ஆய்வு மாதிரி இக்கட்டுரையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான கொள்கை நிலையைக் (rational) கூறியாகவேண்டும்.

19-வது நூற்றாண்டின் முதற் கட்டங்களில் இரேனியஸ் மேற்கொண்ட மதமாற்றத்திற்கான முயற்சி, ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராயும், பாளையக்காரர் முறைக்கு (poligar system) எதிராயும் நிகழ்ந்த வெறும் அரசியல் நடவடிக்கை மட்டுமல்ல. ஒரு பண்பாட்டு வெற்றிடத்தை நிரப்பும் சமூக மீள்கட்டமைப்பு முயற்சியாகவும் இருப்பதாக தோன்றுவதாகும்[6]. இந்த பண்பாட்டு வெற்றிடம் ஏதோ ஒரு

நிலையில் இரேனியசால் உணரப்படுவதால் அது பிற மிஷனெரிச் செயல்பாடுகளிலிருந்து முழுமையாக வேறுபடுகிறது[7]. அவரது மொழி குறித்த கருத்தாக்கமாயினும், இலக்கிய அமைப்புகள், கிறித்தவ குடியிருப்புகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளானாலும் ஒரு வேறுபட்ட, தனித்துவம் கொண்ட கருத்தமைவுகளாகவும், நடவடிக்கைகளாகவும் இவை உருப்பெறுகின்றன. முதன்முறையாக, இங்கு மிஷனெரி என்ற தனிநபர் ஒரு இயந்திரகதியான மாற்றங்களின் காரணகர்த்தாவாக இல்லாமல், குறிப்பிட்ட சமூக பண்பாட்டு வரைவுக்குள்ளான மக்கள், இரேனியஸ் என்ற மிஷனெரியின் 'மதம்மாற்றும் மாதிரிகளோடு' தங்களை அடையாளம் காணும் தன்மையை அவதானிக்க இயலுகிறது.

இதனடிப்படையில் இரேனியஸ் அன்றைய சமூக, பண்பாட்டுத் தளங்களில் நிலவியிருந்த சமூக முரண்பாட்டை அதன் உள்ளார்ந்த கூறினை சரியாகவே புரிந்துகொண்டார் எனக் கூறத் தோன்றுகிறது. எனவே, இக்கட்டுரையின் கவன ஈர்ப்பு மறக்கடிக்கப்பட்ட ஒரு தமிழ் மிஷனெரியின் செயல்பாடுகளை அவரது செயல்பாடு இயங்கிய தளத்தினடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சியிலிருந்தே எழுகிறது. இதற்கான தரவுகள் மிகவும் குறைவாக இருந்தாலும் அவை வழக்கில் இருக்கும் நிலைகளை அங்காங்கே இந்த ஆய்வுக் கேள்வியுடன் கோடிட்டுக் காட்டும் முயற்சியே இக்கட்டுரை. கிடைக்கப்பெற்ற தரவுகளை, முன்பு குறிப்பிட்டபடி இரேனியஸ் என்ற மிஷனெரி இயங்கிய படைப்புலகத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சியின் அடிப்படையில் கருத்துலகம் (Significatory Universe) அல்லது படைப்புலகம் (Creative world) என்ற 11-வது நூற்றாண்டில் வாழ்ந்த பிரஞ்ச்நாட்டு மொழியியல்அறிஞரது கருத்தாக்கத்தினடிப்படையில் வரிசைப்படுத்தும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

படைப்புலகம், கருத்துலகம் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் மேலெழுப்பிய கேள்விகளுக்கான விவரணை (Discription) முன்னெடுக்கப்படுகிறது. இக்கருத்தாக்கம் ஐரோப்பியச் சூழலில் எழுந்த இலக்கிய உருவாக்கம் மற்றும் புதிய இலக்கியக் கொள்கை போன்ற கோட்பாடு விவாதங்களினூடாக உருவாகிய ஒன்று.[8] ஒரு படைப்பு எவ்விதம் செயல்படுகிறது என்பதை விளக்கும் நிலையில்,. படைப்புகளும், கருத்துலகம் என்பது அதன் ஆரம்ப நிலையோடு தொடர்புடையது. ஒரு படைப்பாளி தனது படைப்பிற்கான வகை மாதிரிகளை எந்தெந்த மூலாதாரங்களிலிருந்து பெறுகிறான்(ள்), அவ்விதம் தன்னளவில் தனித்துவமும், வேறுபாடும் கொண்ட பல மாதிரிகளை (models) எவ்விதம் ஒழுங்குபடுத்துகிறான்(ள்) என்பவைக் குறித்துப் பேசுவது கருத்தாக்கமாகும். அதாவது, படைப்பு முனைவுகள் முழுமை பெறும் முன்பு (அமைப்பாக்கமாகும் முன்பு) படைப்பாளியிடம் அவை புறவயமாக பல சிதறுண்ட பகுதிகளாகவே காணப்படும். இந்நிலையில் படைப்பாளியின் பௌதீகரீதியான அனுபவத்தினால் புறவயமாக உள்ள மாதிரிகள் பல சேர்ந்து பொதுமைப்படுத்தப்பட்ட மாதிரிகளாகவோ

அல்லது பிம்பங்களாகவே இலக்கிய வகைமாதிரிகள் உருப்பெறும். ஒரு படைப்பு நிகழ்வின் ஆரம்பம் இதுவே. இப்படியாக, பௌதீக அனுபவத்தினடிப்படையில் பெறப்படும் மாதிரிகளானது பல பின்னணிகளினால் படைப்பு ஒழுங்கமைப்பாக உருவம் பெறும். படைப்பாளன் இப்படியாகச் சிதறுண்ட பல மாதிரிகளை ஒழுங்கமைப்பாக்கும் செயலின் முக்கிய காரணகர்த்தா. ஆனால் இத்தகைய ஒழுங்கமைப்பிலாகும் மாதிரிகள் பல பின்னணிகளிலிருந்து படைப்பாளனுக்கு வந்து சேர்கின்றன. ஒருவரது, நேரடியான சமூக உற்று நோக்கல் அல்லது அவதானிப்பு (observation), பல சமூக நிகழ்வுகளில் பங்கேற்றல் (participation), பல சமூக இயக்கங்கள், எழுத்து மரபுகள், மனித ஆளுமைகள் குறித்த வாசிப்பு (reading) போன்றவை ஒரு படைப்பிற்கான மூலாதாரங்களை அமைப்பாக்கி, உருக்கொடுக்கும் முக்கிய காரணிகளாகலாம். இந்நிலையில், ஒரு இலக்கிய வெளிப்பாடோ அல்லது சமூகச் செயல்பாடோ மொழி வடிவிலோ அல்லது பொருள் சார்ந்த (material) வடிவங்களாகும் நிலைக்கு முன்பு அவற்றில் செயல்படும், செயல்பட்ட மாதிரிகள், பிம்பங்கள், அமைப்புப் படிமுறையிலாகும் நிலையினையே கருத்துலகம் என்கிறோம்[9].

எனவே படைப்புலகம் கருத்துலகம் என்பது ஒரு இலக்கிய வடிவம், ஒரு படைப்பாளனால் என்னவிதமாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு பேசப்படுவதாகும். இலக்கியத்தின் உள்கட்டமைப்பு குறித்த புரிதல்களை அடிப்படையாகக் கொண்டு பேசப்படும் இக்கருத்தாக்கம் எவ்விதம் ஒரு மிஷனெரி நடவடிக்கையைப் புரிந்து கொள்ள உதவும் என்ற கேள்விக்கான பதில், புதிய இலக்கியக் கொள்கை ஒரு இலக்கிய வடிவத்தை எவ்விதமாக அணுகுகிறது என்பதிலிருந்தே எழுகிறது. புதிய இலக்கியக் கொள்கை எந்த ஒரு இலக்கியப் படைப்பையும் ஒரு சமூகச் செயலாகவே கருதுகிறது[10]. இலக்கிய உருவாக்கம் ஒரு அமானுஷ்யமான காரியமல்ல. அடிப்படையில் இது சமூகத்தில் நிகழும் பிற நிகழ்வுகளின் உற்பத்தி போன்றது எனும்போது, ஒரு படைப்பையும் சமூக நிகழ்வையும் ஒன்றையொன்று அறிவியல் ரீதியாகப் புரிந்து கொள்ளும் ஆய்விற்குரிய பொருள்களாகிவிடுகின்றது. எனவே இலக்கிய உருவாக்கமும் சமூக நிகழ்வுகளும் ஒரே அடிப்படையிலானவை என்ற புரிதல் உருவாகும் நிலையில், அரசியல் செயல்பாடுகள், மக்கள் திரள் இயக்கங்கள் போன்ற சமூக நிகழ்வுகளை இலக்கியத்தின் உள்கட்டமைப்பு செயல்படும் தன்மையிலும் இலக்கியத்தின் உள்கட்டமைப்பு குறித்துப் பேசும் கருத்தாக்கங்கள் துணையுடனும் நாம் புரிந்து கொள்ளும் சாத்தியம் நமக்கு இருக்கிறது.

படைப்புலகம், இலக்கிய உருவாக்கம் போன்றவற்றின் தொடர்பாக எழும் இன்னொரு கருத்தாக்கம் பிரக்ஞை நிலை (consciousness) என்பதாகும். இக்கருத்தாக்கம் இலக்கிய உருவாக்கத்தின் அடிப்படைகளைக் கொண்டு சமூகச் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள இயலும் என்ற கருத்தாக்கத்திற்கு வலுசேர்க்கிறது. அடிப்படையில்

பிரக்ஞை நிலை என்பது சமூக வரலாற்று நிலைகளிலிருந்து சமூக மனிதனிடம் உருவாக்கம் பெறும் ஓர் உளச்சார்பு நிலையாகும்". பண்பாட்டுத் தொகுதிகளும். மொழி ஒழுங்கமைப்பும் இச்சார்பு நிலையை உருவாக்கும் முக்கிய ஊடகங்களாகும் (Vehicle). மனிதனிடம் அகவயமாக கட்டமையும் இந்த உளச்சார்பு நிலை (faculty), புறவயமாகவுள்ள பண்பாட்டுத் தொகுதிகள், சமயம், வரலாறு, மொழி ஒழுங்கமைப்பு போன்றவற்றினூடாகத் தொடர்ச்சியான மனித ஊடாட்டங்களினால் (interactions) உருவாகிறது. இந்த உளச்சார்பு நிலையே மனிதனைப் பிற விலங்குப் பெருவகுப்பிலிருந்து தனித்து அடையாளம் காணும் குணாம்சத்தினை சமூக மனிதனுக்கு அளிக்கிறது. மேலும், இச்சார்பு நிலை அரசியல், சமூக இயங்கு நிலைகளையும் அவற்றின் உள்ளார்ந்த முரண்பாடுகளையும் அடையாளம் காணும் தனித்தன்மையை சமூக மனிதனுக்கு அளிக்கின்றது.

படைப்புகளும், படைப்புச் செயல்பாடும் இப்பிரக்ஞை நிலையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையன. ஒன்றில்லாமல் மற்றது இல்லை. அதாவது, எப்போது ஒரு சமூக மனிதன் தன் இருத்தலுக்கான எதிர்வினையை உணருகிறானோ(ளோ) அப்போது தான் எதிர்கொள்ளும் புதிய சூழலை தனது காலக்கட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் பல கருத்தியல் நிலைகளை, தனக்கேயான பண்பாட்டு வெளியில் உறவாடிக் கொண்டிருக்கும் மாதிரிகளைக் (models or signifiers) கொண்டு படைப்பாக வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறான். இன்னொருவிதத்தில், எப்போது மனித பிரக்ஞையானது சமூக முரண்பாடுகளை அடையாளம் காண இயலுகிறதோ அந்தக் கணத்திலேயே புதிய படைப்பாக்கத்தின் தேவையும், தவிர்க்க இயலாததாகிறது. இத்தகைய படைப்புச் செயல்கள் இலக்கியத்திலும், பிற சமூக உருவாக்கங்களிலும் பல நிலைகளில் பொதுமைப்படுத்தப்பட்டு (conceptualise) வகைப்படுத்தப்பட்டு (catagorise) நிகழும் ஒன்றாகும். இது சதுரங்க விளையாட்டில், ஒருவர் தனக்கு முன்னேயுள்ள காய்களின் (pawns) நகர்விற்கான சாத்தியப்பாடுகளை ஆய்வு செய்வது போன்றது. இதில், நகர்விற்கான சூழலையும், காய்களின் இருப்பிடம், உறவு நிலை போன்றவற்றை சரியாகப் புரிந்து கொண்டு, சரியான நகர்வுகள் மூலம் ஆட்டத்தை ஒருவன் தனதாக்குகிறான். இத்தகைய நகர்வுகள் ஏற்கனவே நிகழ்ந்த ஒன்றல்ல. புதிய நிலைகளை அடிப்படையாகக் கொண்ட புரிதலும், அதன்படியான நகர்வுகளுமே காரணமாகும். ஒவ்வொரு முறையும் நிலைகளும் புதியனவே. எனவே எந்த ஒரு வெற்றிகரமான படைப்புச் செயலுக்கும், ஒரு படைப்பாளியின் முன்னேயுள்ள பௌதீக யதார்த்த நிலைகளையும், அவை நிகழும் களனையும் புரிந்து கொண்டு படைப்பு மாதிரிகளை புதிய உறவுகளினடிப்படையில் உருவாக்கும் தன்மை அவசியமாகிறது.

எந்த ஒரு படைப்பு / சமூக நிகழ்வினையும் இதனடிப்படையில் புரிந்துகொள்ள இயலும் எனும்போது அச்செயல்பாடுகள் நிகழும் களனும் (field) அது தீர்மானிக்கும் காரணகாரியங்களும் மிகவும்

முக்கியமாகின்றன. தீர்மானக் காரணிகளை அடையாளம் காண்பது ஒவ்வொரு நகர்வுக்கும் முக்கியமானது எனக்கூறும்போது சதுரங்க விளையாட்டின் காய்களின் நகர்விலும், இலக்கிய உருவாக்கத்திலும் அனுபவம் என்பது அடிப்படைக் காரணிகளையும், காய்களின் நகர்விற்கான சாத்தியப்பாடுகளையும், களனையும் கணிப்பதில் முக்கிய அம்சமாக விளங்கக்கூடும். சமூக நிகழ்வுகளிலும் புரட்சிகரச் செயல்பாடுகளிலும் இதற்கான சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவானவை. ஏனெனில், சமூக நிகழ்வுகள் கணினித்தனமான வகை மாதிரிகளினடிப்படையில் செயல்படுவைகளல்ல.

சமூக நிகழ்வுகளிலும் புரட்சிகர செயல்பாடுகளிலும் பலச் சமூகக் குழுக்களை அல்லது பல தனிமனித அகவயங்களை[12] ஒன்றிணைக்கும் முயற்சிகள்தான் மிகப்பெரிய மாறுதல்களை உருவாக்குகின்றன. இத்தகைய ஒன்றிணைப்பு என்பது மனிதர்களைக் குறிப்பிட்ட சித்தாந்தத்தினடிப்படையில் ஒன்று திரட்டுவது என இங்கு பொருள் கொள்ளப்படவில்லை. ஓர் புலப்படுத்தப்பெற்ற ஒழுங்கமைப்பில் பல சமூகக் குழுக்களைக் கொண்டு வருதல் என்பதாகும். பெனடிக்ட் ஆண்டர்சன் (1983) தேசம் (nation) அதன் உறுப்பினர்களை ஓர் கற்பிதமான (immagined) நெருங்கிய உறவுடைய குழும (community) உறவினுள் கொண்டு வருகிறது என்கிறார்[13]. ஒரு தேசத்தின் அரசியல் எல்லைக்குள் செயல்படும் நவீன ஊடகங்கள் இப்பணியினைச் செய்கின்றன. ஆண்டர்சனின் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி ஜேபி. பிளக்காய்ஜர், மொழியும், பிற உரைத்தல் மரபுகளும் கொண்டுள்ள புலப்படுத்த நிகழ்வு, தேசம் என்ற கற்பிதம் கொண்ட குழுமத்திற்கிடையே நிகழும் புலப்படுத்தமாதிரியை ஒத்துள்ளது என்கிறார்[14]. மேலும், இவை பல சமூகக் குழுக்களிடையே இடையீட்டு உறவினைக் கொண்டுள்ளது என்கிறார். இப்புரிதல்கள், தனி மனித அகவயங்களை இணைக்கும் புலப்படுத்தஒழுங்கமைப்பினை பண்பாட்டுப் படைப்புகள் மற்றும் வகை மாதிரிகளை உருவாக்கித் தருகின்றன. ஆண்டர்கனும், பிளக்காய்ஜரும் கூறும் புலப்படுத்த ஒழுங்கமைப்புகள் முன்பின் தெரியாத பல சமூகக் குழுக்களையும், நபர்களையும் ஒன்றிணைக்கின்றன. இங்கு தேசம் என்பதில் அரசு சார்ந்த ஊடகங்களும் (media), பொதுவான இலக்கிய மரபினை, மொழிக்குடும்பத்தைக் கொண்ட ஒரு சமூகத்தின் எழுத்து மொழியும், பிற வழக்காற்று மரபுகளும் முன்பின் தெரியாத பல சமூகக் குழுக்களின் உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் சாத்தியங்களை அளிக்கின்றன. இங்கு மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது, ஒரு பரந்த புலப்படுத்த ஒழுங்கமைப்பைக் கொண்டு செயல்படும் குழும (community) உருவாக்கங்களில் பங்கேற்கும் தகுதி, எழுத்து மரபினை அறிவதிலிருந்து அல்லது பிற ஊடகங்கள், வழக்காற்று மரபுகளின் மீதான பழக்கம் (repertoire) ஆகியவற்றால் உருவாகின்றது. இப்படியாகச் செயல்படும் புலப்படுத்த ஒழுங்கமைப்பின் கண்ணியை இனங்காண்பது தான் ஓர் அறிவார்ந்த செயல்பாட்டிற்கு அடிப்படையானது. இது இலக்கியச் செயல்பாட்டிற்கும் மற்றும் புரட்சிகரச் செயல்பாட்டிற்கும் பொருந்தக்கூடியதே.

ஒரு பரந்த புலப்படுத்த ஒழுங்கமைப்பினுள் செயல்படும் மனிதக்குழுக்களும், மற்றும் மனித அகவயமும் இயந்திரகதியில் இயங்குபவையல்ல. அவை வரலாற்றுத் தொடர்நினைவுகளோடு, பண்பாட்டுக் களனில் இயங்குவனவாகும். எந்த சமூகக் குழுவும், தனிமனித அகவயமும் பண்பாட்டு உள்ளடக்கம் இன்றி இயங்குவது இயலாதது. ஏனெனில், இவை பண்பாட்டுத் தொகுதிகள், மொழிமரபுகள் கொண்டே உரைத்தல் மரபுகள், இசைமரபு, நிகழ்கலை, சடப்பொருள் பண்பாடு போன்றவை இந்த பண்பாட்டுத் தொகுதியின் வெளிப்பாட்டு வடிவங்கள். இவ்வடிவங்கள் மனித அகவயத்தினையும், மனித முறைகளையும் உருக்கொடுப்பதுடன் (constitute), மனித நடைமுறைகளையும், மனக்கிளர்ச்சியையும் (emotions) தூண்டும் கட்டுப்படுத்தும் செயலினைச் செய்கின்றன[15]. எனவே, பண்பாட்டு வெளிப்பாடுகளும், மனிதனது சமூக நடைமுறையும் நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பதால், இம் முனைப்புக் கூறுகளை சமூக இயக்கங்கள் எவ்விதத்தில் பயன்படுத்துகின்றன என்பதைக் கொண்டு, எல்லாவிதமான சமூக இயக்கங்களையும், அவற்றின் ஆளுமைகளையும் புரிந்துகொள்ளும் மாதிரியை நாம் உருவாக்க இயலும்.

இத்தகைய மாதிரியைப் பயன்படுத்தும் போது, பண்பாட்டுத் தொகுதிகள் மற்றும் சமூக முனைப்புக் கூறுகள், நிரந்தரமாகக் கொடுக்கப்பட்டவை (given) அல்ல என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். வரலாற்றுச் சங்கிலித் தொடரில் தொடர்ந்து செயல்படும் மனிதன் தன் நிகழ்காலத் தேவைக்கேற்ப அவனது பண்பாட்டுக் கோலங்களை மாற்றுகின்றான்(ள்). புதிய இசை, சமய மரபுகளையும், மொழி ஒழுங்கமைப்பில் மாற்றங்களையும் ஏற்படுத்துகிறான்(ள்). இத்தகைய முனைப்புக் கூறுகளை, பண்பாட்டு ஒழுங்கமைப்பினைப் புரிந்து கொள்வதுதான் எந்த இலக்கியவாதிக்கும், சமூகச் செயலாளிக்கும் முக்கியமானது. இவற்றை, புரிந்து கொள்ளுதல், இலக்கியவாதியிடமோ, சமூகச் செயலாளியிடமோ பிரக்ஞை பூர்வமாக நிகழும் நிகழ்வல்ல அவ்வாறு செயல்படும் நபர்தான் பணி செய்யும், எழுத முனையும் மக்களது பண்பாட்டு உள்ளடக்கத்திற்கு வெளியே நின்று நிகழ்த்த இயலாத விஷயம். ஏனெனில் மனிதனது பண்பாட்டு ஒழுங்கமைப்பும், கூறுகளும் , நினைவுகளாக, சடங்குகளாக, இசையாக, மொழியாகச் செயலாற்றிக் கொண்டிருக்கும். இவற்றை அறிவதும், ஒழுங்குபடுத்துவதும், புது உள்ளடக்கம் அளிப்பதும், வரலாற்றுப் பொருள் நிலைகளோடு தொடர்புபடுத்துவதும் மிகப்பெரிய சவால். இந்த நிர்ப்பந்தகளுக்கிடையேதான் மிகப்பெரிய புரட்சிகர மாற்றங்களும் பண்பாட்டுப் படைப்புகளும் நிகழுகின்றன.

சீர்திருத்தக் கிறித்தவம் (Protestant Christianity) இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையேதான் தமிழ்ச் சமூகத்தை எதிர்கொண்டது, சீர்திருத்த கிறித்தவ மதமாற்ற முனைவுகள் தற்செயலான அதிகார உறவுகளுக்குள் மட்டுமே நிகழ்ந்த ஒன்றல்ல. மாறாக, இந்திய நபக்திந அடிப்படைகளையும், வட்டார இசையையும், மொழியையும்

பயன்படுத்திய ஒரு இயக்கத்தின் விளைவாகவே அதனைக் கொள்ளவேண்டும். ஏராளமான இலக்கிய, பண்பாட்டு, உருவாக்கங்கள், மொழிபெயர்ப்பு முயற்சிகள், மொழி குறித்த விவாதங்களினூடாக உருவாகிய இவ்வியக்கத்தில் ஒருவித உருவாக்கப்படிமுறை இருப்பதாகவே தோன்றுகிறது. சீர்திருத்தக் கிறித்தவம் உருவாக்கித் தந்திருக்கும் தமிழ் இசை மரபும், நவீன பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட புதிய எழுத்தறிவு (literacy) மரபும் இந்த உருவாக்கப் படிமுறையின் சாராம்சத்தைக் குறிப்பிட்டுக் கூறும் தனித்த பண்பாட்டுத் தளமாகக் கொள்ளலாம். தமிழ் மிஷனெரி இயக்கங்களை இந்தப் பண்பாட்டுத் தளத்தினைக் கொண்டு நோக்காமல் அரசியல் மேலாதிக்க உறவுகளுக்குள் மட்டுமே அணுகுவது, தமிழ் கிறித்தவம் வெளிக்கொணர்ந்த சக்தி வாய்ந்த வகைமாதிரிகளையும் பிற மொழி அடைவுகளையும் இழக்கும் சூழலை உருவாக்கக்கூடும். இதன் ஒரு நிலையாகவே இக்கட்டுரை இலக்கிய உருவாக்கப் படிமுறை அடிப்படையில் உருவான படைப்புலகம், கருத்துலகம் என்ற கருத்தாக்கத்தினைக் கொண்டு தமிழ் கிறித்தவ மிஷனெரிகளில் ஒருவரான இரேனியசின் படைப்புலகத்தினை விவாதிக்கிறது.

படைப்புலகம், கருத்துலகம் என்ற கருத்தாக்கம் ஐரோப்பியச் சூழலில் நிகழ்ந்த பல இலக்கிய இயக்கங்கள் மொழி பெயர்ப்பு முயற்சிகளினூடாக உருவாகிய ஒன்றாகும். இந்த இயக்கத்தின் முக்கியமானவர் 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மொழியியலாளரான பியர்ஸ் அபிலார்ட் என்று கருதப்படுகிறார். கிறித்தவ மடாலயங்களில் துறவியாக வாழ்ந்த இவர், கிறித்தவ புனித நூல்களை வாசித்து பொருள் கூறும் பணியினைச் செய்து வந்தார். இவ்வாசிப்பு நிகழ்வில், மடாலயங்களின் அதிகாரபூர்வமான பொருளுக்கும் தனது வாசிப்பினூடாகத் தான் அனுபவித்த பொருளுக்கும் பெருத்த வேறுபாடு இருப்பதை உணர்ந்தார். இது தொடர்பாக உருவான மொழியியல் பிரச்சனைகளைத் தத்துவார்த்த பிரச்சனைகளாக்க முயன்றபோது மொழி, மொழிச் செயல்பாடு, மனிதப் பிரக்ஞை போன்ற விவாதப் பொருள்களுக்குக் கிறித்தவப் புனித நூல்களின் மீதான அவரது வாசிப்பு இட்டுச் சென்றது. படைப்புலகம், கருத்துலகம் என்பது இவ்வாசிப்புகளின் பகுதியாக உருவான கருத்தாக்கமாகும்.

அபிலார்ட் படைப்பு நிலையை மூன்றுவிதமாகப் புரிந்து கொள்கிறார். அவை : 1. இலக்கியம் அல்லது ஒரு படைப்புச் செயல்பாட்டில் காணக் கிடைக்கும் பல வகைமாதிரிகளை (models or ensembles) வரிசைப்படுத்தல். 2. அவ்வாறு பெறப்பட்ட வகைமாதிரிகள் சமூக மனிதனின் இருத்தலியல் அலைவுகளுடன் எவ்வகையில் உறவு கொள்கிறது என்பதை அறிதல். 3. ஒட்டுமொத்த வகைமாதிரிகளின் ஒழுங்கமைப்பு ஓர் சமூக வரலாற்றுத் தொடர்ச்சியோடு இடையீட்டு உறவு (mediation) கொள்ளும்படி எவ்விதம் மெருகுபடுத்தப்பட்டுள்ளது (incisions) என்பதை அறிதல்.

இக்கட்டுரையின் இரண்டாவது பகுதியில் படைப்புலகம், கருத்துலகம் என்ற கருத்தாக்கத்தின் கோட்பாட்டு விவரணைகளும், ஒரு

சமூகப் புலப்படுத்த ஒழுங்கமைப்பில் சமயமாற்றத்தின் சாத்தியப்பாடுகள் குறித்தும் விவாதித்தோம். இப்பகுதி, அபிலார்டின் (1079 - 1142) மொழியியல் உரையாடல்களிலிருந்து உருவான ஆய்வு மாதிரியைக் கொண்டு இரேனியசின் மிஷனெரி நடவடிக்கைகள் எவ்விதம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறித்துப் பேசுகிறது. முன்பு விவாதித்தவாறு, படைப்பு நிலையைப் புரிந்து கொள்ளும் மூன்று அடிப்படைகளை அபிலார்டின் மொழியியல் பார்வை உருவாக்கித் தருகிறது. இதனைக்கொண்டு, முதல் நிலையில் இரேனியசின் மிஷனெரி நடவடிக்கைகளில் காணக் கிடைக்கும் வகைமாதிரிகளை ஒழுங்குபடுத்துகிறோம். இரண்டாவது நிலையில் அவ்வகை மாதிரிகள் ஓர் ஒழுங்கமைப்பாகி, தனித்துவம் கொண்ட மிஷனெரி நடவடிக்கையாகி சமூக, பண்பாட்டு எல்லைகளில் எத்தையை உறவினைக் கொள்கின்றன என்பதைக் காண முயலுகிறோம். இரேனியசின் மிஷனெரி நடவடிக்கைகள் அவர் பணி செய்த பகுதியில் வாழ்ந்த மக்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அனுபவங்களோடு கொள்ளும் உறவையும், அவரது மிஷனெரி நடவடிக்கை அம்மக்களின் சமூக முரண்பாட்டு உறவு நிலைகளையும் எத்தகையதாகச் சமன் செய்கிறது என்ற மூன்றாவது நிலை இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

இலக்கியப் படிமுறையின் அடிப்படையில் எழுந்த படைப்புலகம் என்ற கோட்பாடு நிலையில் ஒரு மிஷனெரிச் செயல்பாட்டினை புரிந்து கொள்வது என்ற இந்த ஆய்வு நிலைபாடு, தொடர்பில்லாத இரு தொகுதிகளையும் (domains) ஒப்புமைப்படுத்துவதாகத் தோன்றக்கூடும். தமிழ்ச் சூழலில் நிகழ்ந்த கிறித்தவ மதமாற்ற நிகழ்வுகளும், மிஷனெரிச் செயல்பாடுகளும் இலக்கியப் படைப்பு நிகழ்வதைப்போல, மொழியில் பனுவல்களையும், துணைப்பனுவல்களையும் உருவாக்கியுள்ளன. மிஷனெரி இயக்கம் சமயமாற்றத்தில் ஈடுபட்ட குடும்பங்களின் நினைவுகளாக, தனிநபர்களின் சமயம் மாறிய அனுபவமாக, கிறித்தவக் குடியிருப்புகளின் வரலாறாக, கிறித்தவர்கள் என்ற வெளிப்படையாகப் புலப்படும் ஒரு சமூகக் குழுவின் கலாச்சாரமாக, மொழியினையும் பிறவெளிப்பாட்டு வடிவங்களையும் கொண்டு இயங்கி வருகின்றன. இந்த அடிப்படையில், மொழிவழி நிகழும் இலக்கியச் செயல்பாட்டினைப் புரிந்து கொள்ள உதவும் ஆய்வு மாதிரியைக் கொண்டு தமிழ் மிஷனெரியின் இயக்கங்களை இணைத்துக் காண இயலும். அதே நேரத்தில், இக்கோட்பாட்டு நிலைபாடு தவிர்த்த சிக்கல் இரேனியஸ் என்ற கிறித்தவ மிஷனெரி ஆளுமையைப் புரிந்து கொள்வதில் இருக்கிறது. இது இந்த ஆய்விற்கான முதல்நிலைத் தரவுகள் குறித்ததாகும். இரேனியஸ் மிஷனெரியாகப் பணியாற்றிய இறுதிக்காலத்தில் சீர்திருத்தக் கிறித்தவ நிறுவனங்களும், மிஷன் களனும் ஆங்கிலேய மிஷனெரிகளின் தலைமையின் கீழ் வந்தன. இதனால், இரேனியசால் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வு, எழுத்து மற்றும் மிஷனெரி நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க இடைவெளி, அவரது செயல்பாடுகள் ஆகியன பற்றிய நேரடித் தரவுகள் முழுமையாக திருச்சபை வரலாற்று நூல்கள் மூலம் வந்துசேரவில்லை.

எனவே, இரேனியஸ் குறித்த தரவுகளைப் பல நிலைகளில் [16] சேகரித்து மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியுள்ளது. இந்த எல்லைகளுக்குள்தான் இவ்விவரணை நிகழுகிறது.

1. இரேனியசின் மிஷனெரி நடவடிக்கைகளில் காணக்கிடைக்கும் வகை மாதிரிகள்[17] (models)

இரேனியசின் ஒட்டுமொத்த மிஷனெரி நடவடிக்கைகளும் சில அடிப்படை வகை மாதிரிகளைக் கொண்ட முழுமைகளாகும். அவை ஒரு குறிப்பிட்ட சமூக, பண்பாட்டுச் சூழலில் அவரது மிஷனெரி நடவடிக்கைகளினூடாக தனித்துவம் கொண்ட வகை மாதிரிகளாக உருபெறுகின்றன. இந்த வகைமாதிரிகள் ஒன்றோடு ஒன்று இறுகி இரேனியசின் அனைத்து நடவடிக்கைளிலும் ஒரு பிரிக்க இயலா ஒழுங்கமைப்பாகக் காணக்கிடைக்கின்றன.

அவற்றைக் கீழ்வருமாறு ஒழுங்குபடுத்தலாம்.

i. *மொழிகுறித்த வகைமாதிரிகள்:* இவ் வகைமாதிரிகள் இரேனியசின் விவிலிய மொழிபெயர்ப்பு, துண்டுப் பிரசுரங்களை அச்சிடல் போன்றவற்றில் எத்தகைய மொழி நடையை, வழக்குகளை பயன்படுத்தவேண்டும் என்ற விவாதத்தினூடாக எழுகிறது.

ii. *தமிழ்ச் சமூகம் குறித்தவை:* இவ் வகைமாதிரி நிலபிரபுத்துவ மற்றும் பாளையக்கார அரசியல் ஆளுகைக்கு உட்பட்டிருந்த சமூகக் குழுக்களுக்கு மாற்று அமைப்புகளாகக் கிறித்தவ கிராமங்கள், பள்ளிகள், தர்மசங்கம் (charitable societies) அமைத்தல் போன்ற அவரது மிஷனெரி நடவடிக்கைகளிலிருந்து எழுகிறது.

iii. *சாதீயம் குறித்த வகைமாதிரி:* இவ் வகைமாதிரி வழக்கில் நிலைபெற்றிருந்த சாதி அடிப்படையிலான தனியிடங்களுக்கு (compartments) எதிராக இரேனியஸ் நிறுவிய அமைப்புகளில் அனைவருக்கும் பொதுவான வெளிகளை ஆக்கிய மிஷனெரி நடவடிக்கைகளிலிருந்து உருவம் பெறுகிறது.

2. இரண்டாவது நிலை: இவ்வகை மாதிரிகள் மிஷனெரி நடவடிக்கையாகும் நிலையில் எவ்விதம் சமூகக் குழுக்களின் பண்பாட்டு இருத்தலியல் அலைவுகளுடன் (tensions) உறவு கொள்கின்றன? (உதா) மொழி குறித்த இரேனியஸின் நிலைப்பாடு எப்படி காலங்காலமாகத் தமிழில் எழுத்து மரபு மறுக்கப்பட்டிருந்த சமூகக் குழுக்களிடம் விளைவுகளை உருவாக்குகின்றது?

3. மூன்றாவது நிலை : ஒட்டு மொத்த வகைமாதிரிகளும் ஒரு ஒழுங்கமைப்பாக, மிஷனெரிச் செயல்பாடாகத் தன்னளவோடும், பண்பாட்டுத் தொடர்ச்சிகளோடும் கொள்ளும் இடையீட்டு (mediatory) உறவினைப் புரிதல் ஆகும் அத்தகைய இடையீட்டு உறவு எந்நிலையில் சமூக உள்முரண்பாடுகளை மறுவடிவமாக்கி (transform) பண்பாட்டு மாற்றத்திற்கு வழிகோல்கிறது?

இந்நிலைகள் இக்கட்டுரையில் தனித்தனிப்பகுதிகளாகப் பயன்படுத்தப்படவில்லை. அனைத்தும் இணைந்த ஓர் உரையாடல் - உரைத்தல் (dialogue - narration) என்ற முறையிலேயே பேசப்படுகின்றன. இரேனியசின் மிஷனெரிச் செயல்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மேற்கூறிய வகை மாதிரிகள் மூன்று வித தனித்துவம் கொண்ட, அவரது நடவடிக்கைகளாக வெளிப்படுகின்றன. அவையாவன :

1. துண்டுப் பிரசுர சங்கங்கள் அமைத்தல் 2. பள்ளிகள், தர்ம சங்கங்கள் அமைத்தல் 3. சுயாதீனங்கொண்ட கிறித்தவ குடியிருப்புகள் அமைத்தல் போன்றவையாகும்.

இச்செயல்பாடுகள் இரேனியசின் மிஷனெரிச் செயல்பாட்டில் மையமானவை. இவை ஒவ்வொன்றிலும் மேல் வரிசைப்படுத்திய வகைமாதிரிகள் செயல்படுகின்றன. உதாரணமாக, துண்டுப் பிரசுர சங்கங்கள் அமைத்தல் என்ற இரேனியசின் மிஷனெரி நடவடிக்கையில் கீழ்க்கண்ட வகை மாதிரிகள் செயல்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மொழி மரபினைத் தேர்ந்தெடுத்தல், தமிழ்ச் சமூகத்தில் நிலவி வந்த எழுத்து மரபினைப் புரிதல், பிற சமய மரபுகளோடு உரையாடல் போன்ற மாதிரிகள் காணக்கிடைக்கின்றன. இன்னொருவிதத்தில், இரேனியசின் இச் செயல்பாடு. மேற்கூறிய மாதிரிகளின் கூட்டுச் செயலேயாகும். இப்படியாக, இரேனியசின் ஒவ்வொரு மிஷனெரி நடவடிக்கையிலும் ஏராளமான மாதிரிகளின் ஒழுங்கமைப்பும் அவற்றைச் செயல்படவைக்கும் நீண்ட உரையாடலும் (dialogue) காணக் கிடைக்கின்றன. இவைதான் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கும் மாதிரிகளாக (activiating models) செயல்பட்டிருக்கக்கூடும். மேலும் இது சீர்திருத்த மிஷனெரிகளின் வழக்கமான செயல்பாட்டில் காணக் கிடைக்கும் ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் அவற்றுடன் புது உள்ளடக்கத்தினை சேர்ப்பது தான் இரேனியசின் தனிச் சிறப்பாகத் தெரிகிறது. பள்ளிகள் அமைத்தல், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடல் போன்றவை 18-வது நூற்றாண்டில் தரங்கம்பாடி மிஷன் காலத்திலேயே நிலவி வந்த வழக்கம்தான். ஆனால், பள்ளிகளை விரிவுபடுத்துவதும், அவற்றைத் தேவாலாயங்கள், கிறித்தவ கிராமங்கள் போன்ற அமைப்புகளோடு செயல்படுத்துவதும்; துண்டுப் பிரசுரங்கள் விஷயத்தில், சங்கங்களை நீண்ட தூரக் கிளைகள் மூலம் ஒன்றிணைப்பதும், புதுவித மொழி குறித்த புரிதல்களுடன் அவற்றைச் செயல்படுத்துவதும் இரேனியசின் நடவடிக்கைகளில் குறிப்பிடத் தக்கவை.

துண்டுப் பிரசுர சங்கங்கள், புதிய கிறித்தவ குடியிருப்புகள், தர்ம சங்கம் போன்ற நடவடிக்கைகளினூடாகப் பாய்ந்திருக்கும் இரேனியசின் தமிழ்ச் சமூகம், தமிழ் மொழி குறித்த பார்வைகள் அவரது படைப்புலகம் கருத்துலகம் குறித்த புரிதல்களுக்கு மிகவும் அவசியமானவை. துண்டுப் பிரசுரங்கள் அவரது மொழி குறித்த மனோபாவத்தைச் (attitude) சுமந்து சென்றன. இது தமிழ்ச் சமூகத்திற்குப் புதிதானது. தமிழ் வரலாற்றில், எழுத்து மரபு / பேச்சு மரபு என்னும் இரட்டை எதிர்மறைப் பார்வை (bi-

nary opposition) நீண்டகாலமாகத் தமிழ்க் கல்வி புலத்திலும், இலக்கிய மரபிலும் நிலைத்து இருப்பதைக் அவதானிக்க வேண்டும். 18-வது நூற்றாண்டின் முதற்பகுதியில் தரங்கை மிஷனெரிகளுக்கும், பெஸ்கியின் 'மதுரா' மிஷனுக்கும் இடையில் நிகழ்ந்த விவாதங்களை நோக்கும்போது வழக்கமான தமிழ் மரபின் இரட்டை எதிர்மறை அவ்விவாதங்களினுடாக இழையோடியிருப்பது தெரியவரும். சீகன் பால்குவின் வசன நடை, மரபான தமிழ் நடையிலிருந்து வேறுபட்டிருந்த காரணத்தினால், தரங்கை மிஷனெரிகள் கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தமிழ்ப் பண்டித நடையிலாகாத தமிழ் விவிலிய நடை, இம்மண்ணில் எந்தவித வரவேற்பும் பெறாது என்ற அவதானிப்புகளும் நிலவி வந்தன[18]. பல்வகை உரைத்தல்மரபினைக் கொண்டிருந்த கிறித்தவ விவிலியத்தை மொழிபெயர்ப்பது என்ற சவாலை எதிர்கொள்ள/ பேச்சு வழக்கில் நிலைபெற்றிருந்த சில கலைச் சொற்களைப் பயன்படுத்தியது 'தமிழ் மரபிற்கு எதிரானது' என்ற விமர்சனம் எழுந்ததனை: நீண்டகாலமாகத் தமிழ் மரபில் நிலைபெற்றிருந்த பேச்சு / பண்டிதம் என்ற இரட்டை எதிர்மறையின் வெளிப்பாடாகவே கொள்ளவேண்டும்.

இந்த எதிர்மறையை இரேனியஸ் முற்றிலும் புதியதாய் அணுகுகிறார். இத்தகைய அணுகுமுறை அவரது ஆரம்ப தமிழ் மொழிச் செயல்பாடான தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு அனுபவத்திலிருந்து உருவம் பெறுகிறது. சென்னை வேதாகமச் சங்கம் (1804) பப்ரீஷியசின் தமிழ் விவிலிய வடிவத்தினைத் திருத்தம் செய்ய முடிவு செய்தபோது இரேனியஸ் இப்பணிக்கு 1815 ஆம் ஆண்டில் நியமிக்கப்படுகிறார். 1818 ஆண்டு நிறைவுற்ற இவ்விவிலிய மொழிதிருத்தப் பணியினை அன்றைய சீர்திருத்தக் கிறித்தவ தலைமை அங்கீகரிக்க மறுத்தது. சொல்வழி (literal) மொழிபெயர்ப்பு என்ற நிலையில் இரேனியஸ் மாற்றம் செய்திருந்தார். இப்புதிய வடிவம் தமிழ் இலக்கிய வழக்குகளுடனும், பரவலாக தமிழ் இலக்கியவாதிகளால் அங்கீகரிக்கப்பட்ட சொற்றொடர் தொகுதிகளுடனும் மறுவடிவமாக்கப்பட்டிருந்தது[19]. மேலும் இரேனியஸ் தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு நிகழ்வின்போதுதான் எதிர் கொண்ட பல பிரச்சனைகளை மையமாகக் கொண்டு "மொழிபெயர்ப்பின் கொள்கைகள்" என்ற சிறு ஆங்கில நூல் ஒன்றினை வெளியிட்டார்[20]. அவற்றில் அவர் எழுப்பிய மொழிபெயர்ப்பு சார்ந்த பிரச்சனைகள் மொழியியல் ரீதியாக அறிவியல் அடிப்படைகள் கொண்டவை ஆகும். இலக்கு மொழியான தமிழில் உருவாகும் கிறித்தவத் தமிழ் விவிலியம் எந்நிலையிலும் மூலமொழி வடிவத்திற்கும் அதில் பொதிந்துள்ள அர்த்த தொகுப்புகளுக்கும் இணையாகாது என்று கருதிய இரேனியஸ், தனது மொழிபெயர்ப்பில் கிரேக்க மற்றும் யூத மரபுப் பதங்களுக்கும், வரலாற்று நிகழ்வுகளுக்கும் அடிக்குறிப்புகள் அளித்திருந்தார். மேலும் விவிலிய மொழிபெயர்ப்பில் இலக்கு மொழியின் இலக்கணக் கட்டமைப்பிற்கும், (எழுத்து, பண்டிதம் அடிப்படையிலானது) வரலாற்றுப் பாரம்பரியத்திற்கும் (பேச்சு) முக்கியத்துவமளித்த இரேனியஸ், சொல்வழி மொழிபெயர்ப்பு தவறான புரிதலையும், அர்த்தம் கொள்வதில்

இடைவெளியையும் உருவாக்கிவிடக் கூடும் எனக் கருதினார். இரேனியசின் விவிலிய வடிவத்தினை ஆங்கிலேயத்தலைமை ஏற்க மறுத்தாலும், தமிழ் மொழி குறித்தும், தமிழ் விவிலிய நடை குறித்தும் அவ்வடிவம் புதிய புரிதல்களை உருவாக்கியது.

இரேனியசின் பேச்சு, பண்டிதம் என்ற இரட்டை எதிர்மறையைச் சமன் செய்யும் மொழி நிலைபாடு, அவரது விவிலிய நடை குறித்த விவாதங்களினூடாகவே எழுகிறது. ‘பேச்சு’ வட்டார சமூகங்களின் உரைத்தல் மரபுகளை அடிப்படையாகக் கொண்டது. இம்மரபுகளை ஒன்றிணைக்கும் ஒரு எழுத்து மரபினை, தமிழ் மரபிலிருந்து இரேனியஸ் அடையாளங் காண்கிறார். இது நீண்டகாலமாக வர்த்தகர்களாலும், வரலாற்று ஆவண எழுத்தாளர்களாலும் பயன்படுத்தப்பட்ட நடையாகும். மாறாக, பண்டிதம் என்பது நீண்டகாலமாக சைவ, வைணவ மடங்களில் நிலவிய கல்விமுறை, பக்தி மீட்சி என்பதன் அடிப்படையிலேயே செயல்பட்டதால் மக்கள் மரபிற்கும் நிலவி வந்த இலக்கிய மரபிற்கும் இருந்த இடைவெளியினை தமிழ் இலக்கிய வரலாற்றில் அவதானிக்க இயலுகிறது. எனவே, இரு மரபுகளும் குறுகிய வாசகர்களையும், பண்பாட்டு எல்லைகளையும் கொண்ட மரபுகளாகையால், அதிகமாகச் சென்றடையும் வர்த்தகர்களும், ஆவண எழுத்தாளர்களும் பயன்படுத்திய நடையினை இரேனியஸ் கையாண்டார். இந்நடை வழக்கமான தமிழ் பண்டித நடையிலிருந்த கலைச் சொற்களையும், வாய்மொழி மரபிலிருந்த சொற்றொடர் தொகுதிகளையும் உள்வாங்கிக் கொண்ட நடையாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது[21]. இவ்வாறாக, பேச்சு, பண்டிதம் என்ற இரட்டை எதிர்மறைச் சமமாக்க, எந்தவிதச் சார்புத் தன்மை கொண்ட நடையையும் தொடராமல் புதுவித கல்விப்புலத்தீட்டு (Academic Taboo) அற்ற ஒரு நடையையே இரேனியஸ் கையாள முனைகிறார்.

இரேனியஸின் மொழி குறித்த கருத்தாக்கங்கள் இன்னும் விரிவானவை[22]. அவை அவரது படைப்புலகினை அறுதியிட்டுக் கூறும் மிக முக்கியமான வெளிப்பாடாக இருக்கின்றன என்பதனை உணரும்போது, மொழி குறித்த புரிதல் ஒரு சமூகம் குறித்த புரிதலுக்கும் அதன் மறு சீரமைப்புக்கும் எத்தகைய முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும் என்பதனையும் அறிய இயலும். அவரது தமிழ் மொழி குறித்த பார்வை தமிழ்ச் சிந்தனை வரலாற்றில் ஒரு முக்கியமான சிதைவு (rupture) ஆகும்[23]. இது அவரது பிற செயல்பாடுகளுக்கும் அடிப்படையானது. இரேனியஸின் மொழி குறித்த பார்வை, ஒரு மொழியின் உள்ளார்ந்த தர்க்கத்தினையும், அது சார்ந்த வரலாற்று முரண்களையும் தேடுகிறது. எந்த மொழியும் பேச்சின் அடிப்படையிலானது; அதுவே ஒரு மொழியின் வாழ்வைத் தீர்மானிக்கிறது. அதுபோல், எழுத்து மரபு காலங்காலாமாக பல சிந்தனை மரபுகளை சில விதிகளின்படி பதிவு செய்கிறது. இரண்டு மரபுகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியாகத்தான் இரேனியசின் மொழி குறித்த கருத்தாக்கம் எழுகிறது. அதாவது, வாழும் மொழியையும், எழுத்து மரபு காலங்காலமாக உருவாக்கிய சொற்றொடர்களையும், அறிவுத்

தொடர்களையும் இணைக்கமுயல்வது தான் இரேனியசின் உத்தி. இதன் மூலம் பேச்சு / பண்டிதம் என்ற தமிழ் இலக்கிய முறையில் நிலவிவந்த எதிர்மறைப் பண்பை இல்லாமல் செய்ய முயலுகிறார் இரேனியஸ்.

நவீன இலக்கிய மரபுகளைக் கொண்ட ஐரோப்பியச் சூழலில் நிகழ்ந்த இலக்கிய முயற்சிகள் பலவும்[24] (eg. Romanticism) இத்தகையதே. ஒரு வரலாற்றுச் சூழலில் கலைஞனும், இலக்கியவாதியும் நிகழ்த்தும் இயல்பான படைப்புச் செயல்கள் அனைத்தும் இத்தன்மையைக் கொண்டதாகவே இருக்கமுடியும். வாழும் மொழியின் குறியீடுகளையும், எழுத்து மரபிலுள்ள வளத்தையும் தனிமைப்படுத்தாமல் ஒன்றிணைப்பது வரலாற்று நிர்ப்பந்தமாகும். இத்தகைய இடைவெளிகளை ஒன்றிணைக்கும் புரட்சிகர நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதுதான் இரேனியஸின் படைப்புலகம் / கருத்துலகம் எனக் கருத இடமுண்டு. இத்தகையச் செயல்பாட்டினடிப்படையில் மொழிப் பயன்பாடு ஒரு புரட்சிகர மாற்றத்தின் வடிவகலாக மாறுகிறது. மொழியினைப் பயன்படுத்தும் ஒரு சிந்தனைவாதி அல்லது படைப்பாளி ஒரு மாற்றத்தினை நிகழ்த்துகிறவனாக மாறுகிறான். பேசும் மரபிற்கும் எழுத்து மரபிற்குமான இடைவெளியைக் குறைப்பது என்பது ஒரு ச்தாரண மனிதனை ஒரு படைப்புச் செயல்பாடு அல்லது மொழிச் செயல்பாட்டிற்கு அருகே வரவழைக்கும் முயற்சியாகும். இதன்மூலம் ஒரு சாதாரண மனிதனுக்கும் ஒரு மொழியின் உரைத்தல் மரபிற்குமான இடைவெளி குறைவதோடு, அவன் ஒரு உரைத்தல் மரபைத் தன்னகத்தே கொள்ளும் ஆற்றல் கொண்டவனாக மாறுகிறான். இந்த முயற்சி வெற்றிடமான பண்பாட்டுநிலையைக் (எழுத்து மரபினை) கொண்ட ஒரு தனியான (individual) ஒரு சித்தாந்தத் தொகுதியின் (doctrine) உடைமையாளனாக அவனை மாற்றும் முயற்சியாகும்.

இரேனியசின் பிற மிஷனெரிச் செயல்பாடுகளான சுயாதீனங் கொண்ட கிறித்தவ குடியிருப்புகள், பள்ளிகள், தர்மச் சங்கம் அமைத்தல் போன்றவையும் அவரது மொழிகுறித்த மாதிரிகளைப் போலவே நீண்ட வரலாற்று உரையாடல்களினடிப்படையில் உருவானவை என்றே தோன்றுகின்றன. அவர் மிஷனெரியாக நெல்லை வந்த காலம், திருநெல்வேலி வரலாற்றில் முக்கியமானது அந்தண-வேளாள அரசியல் ஆளுகைக்கு வெளியே, பெரும் நிலப்பகுதியாக இருந்த வறண்ட நிலப்பகுதிகளில் (தேரி) அவர் பணி செய்தார். நாயக்கர் காலத்தில் வழக்கிலிருந்த பாளையக்காரர்களின் முறையற்ற வரிவசூலிப்பு, நாயக்கர் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின்பும் அந்தந்தப் பாளையக்காரர்களின் வம்சாவழியினராலும், கூலிப்படையாலும் தொடர்ந்திருந்தது. இதனால் அதிகப் பாதிப்புக்குள்ளான பகுதிகள் திருநெல்வேலியில் உள்ள வறண்ட நிலப்பகுதிகளாகும். கிறித்தவக் குடியிருப்புகள் என்ற அமைப்பு அத்தகைய அரசியல் ஒழுங்கமைப்புக்கு சவாலாகவே உருவாக்கப்பட்டிருக்கலாம் எனத்தோன்றுகிறது. இத்தகைய கிறித்தவக் குடியிருப்புகள் 1830ல் உருவாக்கப்பட்ட தர்மசங்கம் (Philanthropic Soci-

ety) என்ற அமைப்புடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இது கிறித்தவக் குடியிருப்புகளுக்கும், கிறித்தவர்களுக்கும் நிலச்சுவான்தார்களால் நிகழ்ந்த தொல்லைகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நிதிமையமாகும் (charity). கிறித்தவக் குடியிருப்புகளில் துண்டுப் பிரசுர சங்கங்களை அமைப்பதிலும், பள்ளிகள் அமைப்பதிலும் இந்த நிதியம் ஈடுபட்டிருந்தது. இவைகள் ஒரே கூரையின் கீழ் செயல்பட்டதான குறிப்புகளை இராபர்ட் எரிக் ஃபிரிக்கென்பெர்க் தருகிறார்[25].

இரேனியசால் உருவாக்கப்பட்ட கிறித்தவக் குடியிருப்புகள், பாடசாலைகள், தர்மசங்கங்கள் போன்றவை ஒன்றை ஒன்று சார்ந்து உதவி செய்யும் ஒழுங்கமைவுடன் அமைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது[26]. ஒவ்வொரு நிறுவனமும் பிறவற்றோடு இணைக்கப்பட்டு, கிறித்தவத் திருச்சபைகள், பஞ்சாயத்து அமைப்பு போன்றவற்றின் நேரடித் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டிருந்ததாக ஃப்ரிக்கென்பெர்க் (1976) கூறுகிறார். கிறித்தவக் கிராமத்தின் தலைவர், சபையின் குரு பாடசாலை துண்டுப் பிரசுரக் குழுவினர், பஞ்சாயத்து பொறுப்பாளர்கள் இத்தலைமைத்துவத்தில் முக்கியமானவர்கள்.

இத்தகைய சுயாதீனங் கொண்ட அமைப்புகள், அன்றைய அரசியல் சூழலில் கிறித்தவர்களையும், அவர்களது வாழ்வாதாரங்களையும் காப்பதற்குப் பயன்பட்டிருக்கக்கூடும். மேலும், இச்சுயாதீன அமைப்புகளை பாளையக்காரர் அரசியல் முறையில் நிலவிய சமூக, அரசியல் மேலாண்மைக்கு மாற்றாக இரேனியசால் முன்வைக்கப்பட்ட ஓர் சமூகத் தீர்வாகவே கொள்ளத் தோன்றுகிறது. எனவே, இச்செயல்களனைத்தையும் ஓர் குறிப்பிட்ட மக்கள் எதிர்கொண்ட அரசியல், பண்பாட்டுச் சார்புகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் ஒரு புரட்சிகரச் செயல்பாடாகவும், அறிவாக்கச் செயல்பாடாகவும் நாம் கொள்ளும் சாத்தியம் இருக்கிறது.

இந்த விவாதங்களின் அடிப்படையில் இரேனியசின் படைப்புலகம், கருத்துலகம் செயல்படும் அல்லது கட்டமைக்கப்பட்டிருக்கும் விதத்தினைப் பின்வருமாறு கூறலாம். இரேனியசின் பார்வை சமூகத்தொகுதியில் அதன் உள்ளார்ந்த இயங்கு தளத்தைக் காண முயன்று, அவற்றோடு செயல்படும் முரணினைத் தீர்க்க முயல்கிறது. இரேனியசின் ஒவ்வொரு மிஷனெரி நடவடிக்கைகளிலுமே இந்த பொதுத்தன்மையைக் காண இயலுகிறது. (மொழி குறித்த அல்லது துண்டுப் பிரசுர சங்கங்கள்) பேச்சு, பண்டிதம் என்ற எதிர்மறையையும், கிறித்தவக் குடியிருப்புகள் என்ற நடவடிக்கையில், சமூகக் குழுக்களை பாளையக்காரர், அந்தண - வேளாள பொருளாதாரச் சார்பு அமைப்பிலிருந்து தனிமைப்படுத்தி சுயாதீனங் கொண்ட சமூகமாக மாற்றுவதும், தர்மசங்கம் என்ற செயல்பாட்டில் அனைத்து மிஷனெரி நிறுவனங்களுக்கும் உள்ளார்ந்த பொருளாதார உதவி செய்தல் போன்ற தன்மைகளும் காணக்கிடைக்கின்றன. இத்தகைய, சமூக முரண்களுக்கு இரேனியசால் அளிக்கப்பட்ட மாற்று (alternative) எப்படி ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச்

சூழலில் அர்த்தம் கொண்ட முழுமைகளாக மாறியது என்பதை அறியும் போதுதான் இந்த புரிதல் நிலை முழுமையாகும். கிறித்தவக் குடியிருப்புகளின் வாய்மொழி வரலாறு, கிறித்தவக் குடும்பங்களின் மதம்மாறிய அனுபவங்கள், இரேனியசுடன் பணிசெய்த உபதேசியார்களின் (Catechists) நாட்குறிப்புகள்[26]. 19 ஆம் நூற்றாண்டின் முதல்பகுதியில் திருநெல்வேலியை மையங்கொண்டு[27] கோவில்பட்டி, விருதுநகர், சாத்தூர் உருவான புதிய வர்த்தக மையங்களின் வாய்மொழி வரலாறு போன்றவற்றை இதற்குச் சான்றாதாரமாகக் கொண்டு இந்த ஆய்வை நம்மால் முழுமையாக்கக்கூடும்.

அடிக்குறிப்புகள்

1. *தரங்கை என்பது தஞ்சை மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடி என்ற கடற்கரைக் கிராமம் ஆகும். 17-வது நூற்றாண்டின் இறுதி காலப் பகுதியில் டேனிசாரின் காலனியாக இருந்த இப்பகுதியில், டென்மார்க் மன்னன் நான்காம் பிரடெரிக்-இன் விருப்பத்தின்படி சீர்திருத்தக் கிறித்தவ மிஷன் ஆரம்பிக்கப்பட்டது (1707). டேனியர்கள் எவரும் இப்பணிக்கு முன் வராததால் ஜெர்மனியின் ஹாலே நகரின் பல்கலைக்கழகத்தில் இறையியல் பயின்று கொண்டிருந்த மாணவர்களான சீகன்பால், ஹென்றி புளூசோ போன்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 19-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியின் லெய்ப்சிஸ் மிஷன் (1847) தரங்கை மிஷனை நடத்தியது. மேலும் பார்க்க.* Arnd B. Lehmann ; It began at Tranguebar, Madras, Christian Literature Society. 1956 : Daniel Jeyaraj, Barly Tamil Bible Translation in Tranguebar, Dharma Deepika Vol. 1 (1), pp. (67-77), 1997.

2. இக்கருதுகோளுக்கான விளக்கத்திற்கு *பார்க்க: அடிக்குறிப்பு எண் 27*

3. *19-ம் நூற்றாண்டில் முதற்பகுதியில் திருநெல்வேலிப் பகுதியில் பாளையக்காரர், நிலபிரபுத்துவத் தலைவர்கள் மற்றும் ஆங்கில கம்பெனியர்களுக்குமான கருத்தியல் புரிதலுக்கு, காண்க;* R.E Frykenberg, . (1976) " The impact of Conversion and Social Reform Upon Society in South India During the Late Company Period : Questions Concerning Hindu- Christian Encounters, "Indian Society and the Beginnings of Modernization, c. 1830-50 (London: School of Oriental and African Studies, 1976), 187-243 Edited by C.H. Philips and M.D. Wainwright. pp. 187-243, 1976. மேலும் R.E. Frykenberg, "Elite formation in Nineteenth Century South India : An Interpretive Analysis", Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Kualalumpur - Malaysia. Vol. I pp. 558-581, 1966.

4. மேலது R.E. Frykenberg, 1976. p. 211

5. மேலும் R.E. Frykenberg, 1966, pp. 571- 576

6. பண்பாட்டு வெற்றிடம் என்பது நீண்ட காலமாகத் தமிழ் எழுத்து மரபில் பிரதிநிதித்துவம் பெறாத தமிழ்நாட்டின் வறண்ட நிலப்பகுதியின் (பாலை) இசை, சமய மரபுகளையும், அவற்றின் மௌனிக்கப்பட்ட வரலாற்றையும் குறிக்கிறது. இதற்கான வரலாற்று அடிப்படைகளுக்கு, காண்க. R.E. Frykenberg, 1966, nkyJ/ pp. 558-559

7. இதே தன்மை கொண்ட மிஷனெரிச் செயல்பாட்டினை, திருநெல்வேலியில் பணியாற்றிய அருட்தந்தை கௌசானல் அவர்களிடமும் காண இயலும்

8. படைப்புலகம் தொடர்பான கோட்பாட்டு நிலைபாடு அபிலார்டின் மொழி குறித்த உரையாடல்களிலிருந்து உருவாகிறது. இதன் விரிவான பின்னணிக்கு, காண்க. H.S. Gill, (1996), The Semiotics of Conceptual Structures, New Delhi : Bahri Publishing House. தமிழ் சூழலை இந்தக் கோட்பாட்டு நிலையின் விவாதங்களுக்கு காண்க. Louis Joseph Dharmaraj, "Theory and Praxis of Textual Interpretation: Typology of Two Paradigms", South Indian Folklorist, Vol. 2(1), pp. 77-119, 1998.

9. H.S. Gill, Abelardian Semiotics and other Essays, New Delhi : Bahri Publications. pp. 48-49, 1989.

10. பார்க்க Key Concepts in Communication and Cultural Studies Tim O' Sulliram (etal, eds.) Routledge, p. 283, 1994.

11. உளச்சார்பு என்பது 'site of consciousness' என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது.

12. மனிதப்புலப்படுத்தம்(communication) அகவயங்களுக்கிடையிலானது என்ற குறியியல் (semiotics) விஞ்ஞான அடிப்படையிலிருந்து, அகவயம் என்பது மனிதன் தான் எதிர்கொள்ளும் ஒரு செய்தியினை எப்படி எதிர்கொள்கிறான், அதற்கான அடிப்படை மூலாதாரம் (source) எங்கிருந்து வருகிறது, எங்கே சேமிக்கப்படுகிறது என்பவை தொடர்பானதே 'அகவயம்' என்ற கருத்தாக்கம்.

13. Benedict Anderson, Imagined Communities : Reflextions on the Origin and Sp read of Nationalism (1983), p. 1991

14. நாட்டார் வழக்காறுகள் (Folklore) பல மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் புலப்படுத்த ஒழுங்கமைப்பாகச் செயல்படுகின்றன. எனவே இது சார்ந்த ஒரு வெளிப்பாட்டு வடிவம், குறிப்பிட்ட மக்களை அல்லது பண்பாட்டுக் குழுக்களை ஒரு தேசம் கற்பிதம் கொள்வதைப் போலவே ஒரு குழுமமாகப் புலப்படுத்த ஒழுங்கமைப்பிலாக்குகிறது. உதாரணமாக, வில்லுப்பாட்டு நிகழ்விற்காக எழுதப்பட்ட ஒரு கதைப்பாடல் திருநெல்வேலி, சிதம்பரனார், கன்னியாகுமரி மக்களைக் கற்பிதம் கொள்வதோடு அப்பகுதியில் உள்ள பல சமூகக் குழுக்களையும் ஒன்றிணைக்கிறது.

மேலும் பார்க்க. J.B. Flueckiger, "Genre and community in the Folklore Sytem of Chhatisgarh", in Arjuns Appadurai, etal (ed.), Gender, Genre and Power in South Asian Expressive Traditions, Philadelphia: University of Pensylramia Press, p. 186, 1991

15. அறிதல் சார்விஞ்ஞானம் (congitive science) பண்பாட்டையும், அதன் பங்கேற்பாளர்களையும் எவ்வாறு நோக்குகிறது என்பதிலிருந்து இக்கருத்தாக்கங்கள் பெறப்பட்டவைகளாகும். மேலும் பார்க்க, R.D'Andrade, "Cultural Meaning System", in Richard A. Shreder and Robert A. Le Vine (etal, ed.,) Culture Theory : Essays on Mind, Self and Emotion, Cambridge: Cambridge University Press, pp. 88-119, 1984.

16. இங்குப் பல நிலைகள் என்பது, வாய்மொழி வழக்காறுகள், வரலாற்று ஆவணங்கள், தமிழ் மிஷனெரிகளின் எழுத்துக்கள், தமிழ் விவிலிய மொழி பெயர்ப்பு ஆவணங்கள் என்ற நிலைகளில் இரேனியஸ் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கொள்ளப்படுகிறது.

17. பண்பாட்டு மாதிரி, மாதிரிகள் மற்றும் வகை மாதிரிகள் என்ற வார்த்தைப் பயன்பாடுகளில் வேறுபாடு இருக்கிறது. மொழி என்பது ஓர் பண்பாட்டு மாதிரி ஆனால் இரேனியசின் மிஷனெரி நடவடிக்கைகளையும், படைப்புலகத்தினையும் குறித்துப் பேசும்போது வகைமாதிரி எனக் கொள்ளப்படுகிறது.

18. James Hough, A reply to the Letters of the Abbe Dubois on the State of Christianity in India, London. p. 322, 1824

19. Memoir of the Rev. C.T.E. Rhenius, Comprising Extracts from his Journal and Corresspondence, By his son J. Rhenius of Edinburg. London. p. 300, 1841.

20. An Essay on the Principles of Translating the Holy Scriptures with critical remarks on Various Passages, Particularly in Reference to Tamil Language, by C.T.E. Rhenius. Printed at the Mission Press, Nagercoil, 1827. மேலும் இரேனியசின் வேதமொழிபெயர்ப்பு கோட்பாட்டின் சுருக்கம் காண்க. Memair.... pp (299-301)

21. மேலது,

22. இரேனியசின் மொழி குறித்த பார்வைகளுக்குக் காண்க. சரோஜினி பாக்கியமுத்து, "விவிலியமும் தமிழும்", குருகுல இறையியல் கல்லூரி மற்றும் ஆய்வு மையம்., சென்னை. பக்கங்கள் 94-136. 1990.

23. பேச்சு மரபினையும் பண்டித நடையையும் இணைக்கும் இலக்கிய முயற்சிகள் பக்தி இயக்க காலத்திலேயே நிலவ வாய்ப்புகள் உள்ளன. ஆனால் அப்பார்வைகள் கல்விப்புலத்தில் தாக்கங்களை உருவாக்கியதா? எனத் தெரியவில்லை.

24. புனைவியல் இயக்கம் (Romanticism) செவ்வியல் வெளிப்பாட்டு

முறைக்கு எதிரானது. தனியனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் நாட்டார் வழக்காற்று மரபின் அடிப்படையைக் கொண்டது. செவ்வியல் கற்பிதங்களுக்கு எதிராகவும், இதுவரையிலும் பிரதிநிதித்துவம் பெறாத நாட்டார் வழக்காற்று மரபுகளை மையப்படுத்தி எழுந்த இயக்கம். ஐரோப்பாவில் உருவான இவ்வியக்கம் உருவாக்கிய விவாதங்களுக்குப் பார்க்க, Howard Jones, Revolution and Romanticism Harward, Harward University Press, 1974.

25. R.E. Frykenbery, மேலது,.*1976*, பக். *201*.

26. இரேனியஸ் தன்னோடு பணி செய்த உபதேசியார்களிடம் நாட்குறிப்பினை (டைரி) தொடர்ந்து எழுதும் நடைமுறையை அறிமுகப்படுத்துகிறார். இத்தகையச் செயல் பின்னாளில், "சவரிராயப்பிள்ளை டைரி" (1898) என்ற மிகமுக்கிய ஆவணமாக நம்மிடம் வந்திருக்கிறது. பிற உபதேசிமார்களின் நாட்குறிப்புகள் குறித்த தகவல் இல்லை. மேலும், இப்பகுதியில் ஆய்வு தேவைப்படுகிறது. சவரிராயப்பிள்ளை டைரி குறித்து அறிய, David Packia Muthu and Sarojini Packia Muthu, Savariraya Pillai's Diary : A Document of Transcultural interchage, Dharma Deepika, December 1997. pp. 75-82. மற்றும் John J. Paul and R.E. Frykenbery "A research note on the Discovery of Writings by Savariraya Pillai, A Tamil Diarist of Mid-Nineteenth Century Tinnelvely, Journal of Asian Studies, Vol. XLIV (3), pp. 521-528. 1985.

27. 19-ம் நூற்றாண்டில் விருதுநகர், திருமங்கலம், சாத்தூர், பாளையப்பட்டி, அருப்புக்கோட்டை, சிவகாசி, போன்ற வியாபார மையங்களின் தோற்றம் தன்மையளவில் இரேனியசின் தர்ம சங்கத்தின் செயல்பாட்டை ஒத்திருக்கிறது. இப்பேட்டைகள் வறண்ட நிலப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த நாடார்களால் உருவாக்கப்பட்டது. பொருட்களை எடுத்துச் செல்லவும், பேட்டைகளைப் பாளையக்காரர்களிடமிருந்து பாதுகாக்கவும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர்களே செய்திருந்தனர் என ஹார்டுகிரேவ் கூறுகிறார். இந்நகரங்கள் "மகமை" என்ற பெயரில் வசூலிக்கப்பட்ட நிதியினடிப்படையில் வளர்க்கப்பட்டன. Robert L. Hardgrave, The Nadars of Tamil Nadu, Berkeley : University of California Press. 1969. pp. 97-100)

தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர்களில் கால்டுவெலுக்கும், போப்புக்கும் முன்னோடியாக விளங்கியவர் இரேனியஸ் அடிகளார். எழுத்துமொழியோடு மக்களின் பேச்சு மொழியினையும் அதன் உயிர்ப்போடு விளங்கிக் கொண்ட ஆற்றல் மிக்கவர்.

முதல் அறிவியல் தமிழ் நூலான 'பூமி சாஸ்திரம்' அவரது மிகச்சிறந்த படைப்பாகும். அத்துடன் அவர் எழுதிய தமிழ் இலக்கண நூலும் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள் குறித்த ஆங்கில நூலும் தமிழ் மொழி ஆய்வாளர்களுக்கு இன்றும் வேண்டிய சில புதிய செய்திகளைத் தம்முள் கொண்டிருக்கின்றன.